# ஆய்வுக்குரல்

குரல் - 04

2021 - 2022

“தற்காலத்தில் இலங்கை வாழ் மக்கள் எதிர்நோக்கிவரும்

## சமூகப் பிரச்சினைகள்”



மதுப்பாவனையுள்ள கணவன் மூலம் மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகள்

பக்கம் 07



தற்காலத்தில் மஸ்ஜிதில் பணிபுரியும் இமாம்கள், முஅத்தின்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகள்

பக்கம் 41

“உரப்பிரச்சினை காரணமாக இலங்கை விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள்”

பக்கம் 54



STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# ஆய்வுக்குரல்


**ஆசிரியர் :**

சஞ்சிகைக்குழு
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

**பதிப்புரிமை:**

சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென் கிழக்குப்
பல்கலைக்கழகம்.

**முதற்பதிப்பு:**

-------

**வெளியீடு:**

ஆய்வுக்குரல் வெளியீட்டுக் குழு,
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

**கணினி வடிவமைப்பு:**

அகீப் நஸீர்
வை.எப். பஹிஜா

**பக்கங்கள்:**

69

ISSN NO : 2630 7855

STUDENTS' RESEARCH FORUM
FOR SOCIAL RESEARCHES - 2021

**பெரும்பொருளாளர்:**

கலாநிதி எஸ். எம். எம். மஸாஹிர்
பீடாதிபதி,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப் பல்கலைக்கழகம்.

**ஆலோசணைக்குழு:**

எம். சி. எஸ். சாதிபா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப் பல்கலைக்கழகம்.

எம். வை. எம். சுஹ்றா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்கப் பல்கலைக்கழகம்.

எப். எச். ஏ. ஷிப்லி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



ஆய்வுக்குரல் சஞ்சிகையின் ஆக்கங்களை
அனுமதியில்லாமல் மீள்பதிவு செய்தல்,
பிரதிபண்ணல் மற்றும் மொழிப் பெயர்ப்பு செய்தல்
தண்டனைக்குரியக் குற்றமாகும்.
(சஞ்சிகைக் குழு)



குரல் - 04 | 2021

# STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES - 2021
# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## COMMITTEE MEMBERS

**PRESIDENT - M.A.M. ALHAM**
**VICE PRESIDENT - M.M.F. NUSHEEDHA**
**SECRETARY – A. IJAS MOHAMED**
**ASS. SECRETARY - A.F. NATHA**
**TREASURER - M.A.M. ASLAM**
**EDITOR – Y.F. FAHIJA**

**SECRETARY OF RESEARCH – T.T. AAYSHA**
**SECRETARY OF PUBLICATION – H.D.F. BADUSHA**
**SECRETARY OF TRANSLATION – M.F.F. SAFNA**
**SECRETARY OF INNOVATION – M.A.F. ASHFA**
**SECRETARY OF COMMON – S.M. SASREEN**
**SECRETARY OF HISTORY GROUP - M.J.F. SANA ANJUM**
**MEMBER – J.N.M. AKEEF**
**MEMBER – A.H.J.F. SHAHIDHA**

## EDITORIAL BOARD

**EDITOR IN CHIEF: H.F. BADUSHA**
**CO EDITOR – M.N.F. ZILFA**
**CO EDITOR – AKEEF NASOOR**

**NOOR SHAHIDHA**
**M.A.M. ALHAM**
**IJAS AJEEN**
**K . C. F. NASMA**
**M. N. F. NISHFA**
**F. AFROSE**
**T.T. AAYSHA**
**R. F. RIZLA**
**NUSHEETHA**
**M. S. F. FAHMITHA**
**B. F. AAKILA**
**R. F. ASLA**
**U. UMAR**

# உள்ளடக்கம்




மதுப் பாவனையுள்ள கணவன் மூலம் மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகள் — பக்கம் 07



பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும்: — பக்கம் 11



இளம் வயதுப் பிரிவினரிடையே துரித உணவுகளின் பயன்பாடும் அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளும். — பக்கம் 19



இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகம் ஓர் பகுப்பாய்வு — பக்கம் 28



உள ஆரோக்கியத்தை பேணுதலில் அல்குர்ஆனின் வகிபாகம் அல்குர்ஆன் வசனங்களுடனான ஓர் ஆய்வு — பக்கம் 38



உரப்பிரச்சினை காரணமாக இலங்கை விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் — பக்கம் 41



பெற்றோரின் வெளிநாட்டு வாழ்வும் பிள்ளைகளின் தவிப்பும் — பக்கம் 46




தற்காலத்தில் மஸ்ஜிதில் பணிபுரியும் இமாம்கள், முஅத்தின்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகள் — பக்கம் 54



COVID-19 தொற்றும், நிகழ்நிலை கல்வியினால் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்: ஓர் ஆய்வு — பக்கம் 61



இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் - பொருளாதாரப் பிரச்சினை - — பக்கம் 65



කොරෝනා නුඹ ඇවිදින් අදට දැනට අවුරුදු දෙකක්...... — பக்கம் 69

# வாழ்த்துரை



**கலாநிதி எஸ்.எம்.எம். மஸாஹிர்,**
**பெரும்பொருளாளர் – சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்,**
**பீடாதிபதி – இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்,**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹுத்தஆலாவின் பெயரால் ஆரம்பம் செய்கின்றேன். ஸலவாத்தும் ஸலாமும் இறுதித் தூதர் முஹம்மது ஸல் அவர்கள் மீதும் அவர்கள் அடிச்சுவட்டை பின்பற்றியோர் அனைவர் மீதும் உண்டாவதாக. தென் கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்தின் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பான சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் ஆய்வுகளுக்கு களமமைப்பதற்காக ஆய்வுக் குரல் என்ற மகுடத்தில் வெளியிடும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்கலைக்கழக மாணவர்கள் சமூக அக்கறையும் சீர்திருத்த எண்ணமும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதற்குத் தத்தமது திறமைகளையும் ஆற்றல்களையும் அவர் அவர்கள் பயன்படுத்த வேண்டும். எழுத்தாற்றல் இருப்போர் அவ்வாற்றலையை சமூக மேம்பாட்டுக்காக உபயோகிக்கலாம். கவிதை புனையும் திறமை கொண்டோர் அத்திறமையை சமூக சீர்திருத்திற்காகவும் ஒழுக்க விழுமியங்களை பரப்புவதற்காகவும் பிரயோகிக்கலாம். ஆய்வுத் திறமையும் அதில் தேர்ச்சியும் உள்ளவர்கள் அத்திறனை சமூக ஆய்வுகளில் ஈடுபடுத்தி சமூக மாற்றத்திற்கு துணையாக அமையலாம். அரபு எழுத்தணி போன்ற அழகியற் கலைகளில் ஈடுபாடு கொண்டோர் அதனையும் சிறப்பான முறையில் பயன்படுத்தலாம். இவ்வாறான ஆக்க முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்காக சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் பல்வேறு ஆக்கப்பூர்வமான வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தில் வினைத்திறனாக செயற்பட்டு வருகின்ற சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் மாணவர்களின் ஆய்வு திறனையும் எழுத்தாற்றலையும் வளர்க்கும் நோக்கில் ஆய்வுக் குரல் என்ற சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது. சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் இவ்வாய்வுச் சஞ்சிகை பல ஆழமான ஆய்வுகளை தாங்கி தொடர்ச்சியாக வெளிவருவதற்கு எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தித்து இக்காத்திரமான முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் நன்மையை ஈட்டித் தரும் செயற்பாடாக இது மாற வேண்டும் எனவும் ஆசிக்கிறேன்.

## வாழ்த்துரை



எம்.ஏ.எம் அல்ஹாம்
தலைவர்,
ஆய்வுக் குரல்,
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்,
இஸ்லாமிய கற்கைகள் மற்றும்
அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பொருத்தம் எம் அனைவர் மீதும் உண்டாகட்டும் என்று கூறியவனாக சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்ற தலைவர் என்ற வகையில் ஆய்வுக்குரல் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல்கலைக்கழக சூழலில் அறிவு சார்ந்த வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கும், கலாசார பன்மைத்துவத்தை ஏற்படுத்துவதற்கும், சமூகங்களுக்கிடையே காணப்படும் பிரச்சினைகளை வெளியுலகிற்கு கொண்டு வருவதற்கும், ஆரோக்கியமான கருத்தாடல்களை ஏற்படுத்துவதற்கும் இவ்வாறான மாணவர் ஆய்வு மன்றங்கள் செயற்பட வேண்டியது காலத்தின் அவசியமாகும்.

அந்தவகையில் சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றமானது பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை, ஆற்றல்களை இணங்கண்டு அவற்றுக்கான களத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதன் ஊடாக அவர்களின் திறமைகளை வளர்பதனை அடிப்படை நோக்கமாக கொண்டும், மாணவர்களை ஆய்வியல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட வைத்தல் என்பவற்றினையும் பிரதான இலக்காக கொண்டும் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 5வது வருடத்தில் இருக்கும் நிலையில் பல ஆக்கபூர்வமான செயற்பாடுகள், செயற்திட்டங்களை தொடர்ந்தும் மாணவர்கள் மத்தியில் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மாணவர்கள் மத்தியில் ஆய்வுக் கலாசாரத்தை ஏற்படுத்தியுள்ளன. அதன் விளைவாக எமது மன்ற உறுப்பினர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக ஆய்வுகளை சமர்ப்பிப்பதோடு பல சஞ்சிகைகளிலும் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றனர்.

அதன் நிமித்தம் இறைவனின் நாட்டத்துடனும், சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றத்தின் நிர்வாக குழுவினரின் அயராத முயற்சியாலும், மாணவர் ஆய்வு மன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பாலும் ஆய்வுக்குரல் இதழ் -04 தரமான ஆக்கங்களைக் கொண்டு பிரசுரித்து வெளியிடப்படுகின்றது. இன்னும் இப்பேரிடர் காலத்திலும் இவ் வெளியீட்டை கொண்டு வருவதில் எத்தனித்து வெற்றிகண்ட இதழ் குழுவினர், நிர்வாக உறுப்பினர்கள், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், இன்னும் இம்மன்றத்தின் பெரும் பொருளாளர் பீடாதிபதி எஸ்.எம்.எம் மஸாஹிர் அவர்களுக்கும் விஷேட நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் அகம் மகிழ்கின்றேன்.

இறைவனுக்கே எல்லா புகழும்.

# வாழ்த்துரை




**ஹுஸைன் தீன் பாத்திமா பாதுஷா**
**செயலாளர்,**
**வெளியீட்டுக்குழு**
**சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம்,**
**இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்,**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**


எல்லாம் வல்ல நாயன் அல்லாஹ்வின் பெயரால் நான் ஆரம்பம் செய்கிறேன். அனைவருக்கும் முதற்கண் வெளியீட்டுக் குழு சார்பாக எனது நன்றிகளைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அறிவு என்னும் கடலை ஆய்வு என்னும் படகின் மூலம் நீந்திக் கரையைத் தொட்டிடும் முயற்சியானது கொஞ்சம் கடினமானது தான் ஆனாலும் அதன் ஈற்றில் கிடைக்கும் வெற்றியோ ஒரு மனிதனை நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், சமயப்பொறை, பொருந்தியவனாகவும் ஒரு தலை சிறந்த தேர்ச்சி பெற்ற அறிவும் புலமை வாய்ந்த ஆய்வாளனாய் மனித சமூகத்திற்கு வெளிக் கொண்டு வரச் செய்கிறது. இன்னும் வரலாற்று ரீதியாகவும் மனித குலத்தின் மேம்பாட்டிற்கு அறிவு மற்றும் ஆய்வு எப்போதும் உந்து சக்தியாக இருந்துள்ளது. இந்நிலையில் மாணவர் சமூகம் புதிய அறிவின் உருவாக்கப் பின்புலங்களை உள்வாங்குதல் தேடுதல் அறிவைப் பரவலாக்குதல் போன்ற பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளது. இதற்கான ஆற்றலும் திறனும் மாணவர் சமூகத்திற்கு அவசியமாகும். எனவே ஆய்வு ஆராய்ச்சியில் மாணவர் தலைமுறையினர் ஈடுபட வேண்டும்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் அறிவின் முதிர்ச்சியும் ஆய்வின் தேவையும் இன்றியமையாத ஒன்றாகும். எனவே அறிவுச் சமூகத்தின் எதிர்பார்ப்பானது ஒவ்வொருவரும் தேட வேண்டும். ஆய்வாளர்களாக சங்கமிக்க வேண்டும் என்பதாகும். எனவே இதற்கான களத்தை இன்று எமக்கு மாணவர் ஆய்வு மன்றம் வழங்குகின்றது." ஆய்வுக் குரல்" எனும் இச்சஞ்சிகையானது தரமான ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பேட்டாகக் காணப்படுகின்றது.

சிறந்ததொரு கல்வியாளரின் மாண்புரு பண்பாக ஆய்வு காணப்படுகிறது. எனவே அறிவுச் சமூகமானது ஆய்வுச் சமூகமாக பரிணாமம் அடைய வேண்டும். அதற்கான வாயில்களை இச்சஞ்சிகை கரங்களுக்குத் திறந்து தந்துள்ளது. எனவே இச்சஞ்சிகையினூடாக ஆய்வுப் புரட்சிகள் மேற்கொள்ள வேண்டும். புதுமைகள் பல படைக்க வேண்டும். அதற்காகவே மாணவர் ஆய்வு மன்றத்தின் குவியமாக இருந்த ஆய்வுக் குரல் தற்போது தன்னை நேரடியாக உருமாற்றி புது அவதாரம் எடுத்துள்ளது.

ஆம்! இதோ அது தவழட்டும் உங்கள் கரங்களில்....



# மதுப்பாவனையுள்ள கணவன் மூலம் மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**M.U.F. Sahra | M.A.F Ashfa | M.R.F Fasna**
**3rd Year**
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

**ஆய்வு அறிமுகம்**

எமது நாகரீகம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் தொன்று தொட்டு விளங்கி வரும் சில தீய பழக்கங்கள் தொடர்ந்தும் நலிவடையாமல் வலிமை பெற்று செல்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக, போதைப் பொருள் பாவனையை கூறலாம். போதை வஸ்து என்றால் மனிதனை அவனது இயல்பு நிலையிலிருந்து மாற்றி உணர்வுகள் மற்றும் சுரப்பிகளின் (ஹோர்மோன்) செயல்களையும் தூண்டி ஒரு பரவச நிலைக்கு அவனை உட்படுத்துமொன்றாகும். இது பானம் மூலமோ அல்லது புகை மூலமோ உட் கொள்வதாக அமையலாம். போதை பொருட்களுக்கு உதாரணமாக: ஹெரோயின், கஞ்சா, கேரளா கஞ்சா, மதுபானம், சிகரட், புகையிலை போன்றவற்றை குறிப்பிடலாம் (Ashok, 2015). 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானத்தின் படி ஜுன் மாதம் 26 ஆம் திகதி போதைப் பொருள் தடுப்பு தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது (Puniyameen, 2015). இருந்தும், போதைப் பொருள் பாவனை என்பது அதிகரித்த வண்ணமேயுள்ளது. இன்று ஆறு வயது தொடக்கம் அறுபது வயது வரை போதை வஸ்து பாவனை வேரூன்றி நிற்கின்றது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

போதைப் பொருட்களுள் ஒன்றான மதுபான பாவனையானது பல இடங்களிலும் பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. உலகளவில் சுமார் 140 மில்லியன் மதுபான பாவனையாளர்கள் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. மதுபான பாவனையை நோக்கினால், உலக அரங்கில் இலங்கைக்கு நான்காவதிடம் கிடைத்திருக்கிறது. இலங்கையில் தனிமனித மதுபாவனை 4 லீற்றாராக இருக்க அதுவே ஆணுக்கு 15.2 லீற்றர் ஆகவுள்ளது (Anwar, 2018). இலங்கையில் மொத்த குற்றச் செயல்களில் 38% மதுபான பாவனையினால் ஏற்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊட்டச் சத்துக்களோ, விற்றமின்களோ எதுவுமற்ற திரவத்தை ஏன் பயன்படுத்துகிறார்கள் எனில் அதை உற்சாகம் தரும் பானமாக, களைப்பையும் உடல் வலியையும் தீர்க்கும் நிவாரணியாக அற்புத சக்தியாக எண்ணுகின்றனர். இன்னும் சிலர் நிச்சயம் ஒரு நாள் மரணமுண்டு இதை விட்டு ஒழித்தால் மட்டும் மரணமின்றி வாழ்ந்து விடலாமா? என தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டு மதுவை அருந்துகின்றார்கள். அத்துடன், சமூக வறுமையுடன் கூடிய அவல வாழ்க்கையை மறக்க குடியை ஒரு தீர்வாகக் கையாளுகின்றனர். இதன் விளைவாகவே நகர்புற குடிசை பகுதிகளில் 43 சதவீதமானோர் மதுபான பாவனைக்கு அடிமையாகியுள்ளதுடன் பெருந்தோட்ட பகுதிகளில் 55 சதவீதமானோரும் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18 சதவீதமானோரும் மதுவுக்கு அடிமையாகியுள்ளனர். இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 9 இலட்சத்திற்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது (Anwar, 2018). உலக நாடுகளை போல இலங்கையிலும் மதுபான பாவனையை குறைக்க பல திணைக்களங்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக இலங்கை பொலிஸ் திணைக்களம், அரச திணைக்களம், சுங்கவரி திணைக்களம் போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறிருந்தும், மதுபான பாவனை என்பது குறைந்த பாடில்லை. இவ்வாறு மதுபானத்திற்கு நிறையபேர் அடிமையாகி இருப்பதற்கு காரணம் ஆங்காங்கே அமைந்திருக்கும் மதுக்கடைகளும் மன அழுத்தமும் தொடர் பிரச்சினைகளுமாகும்.

இலங்கையில் உள்நாட்டு போர் ஓய்ந்திருக்கலாம் ஆனால் பெண்களின் அன்றாட வாழ்வுக்கான, தேவைக்கான போர் ஓயவில்லை. ஒவ்வொரு நாளும் அவர்களுடைய வாழ்வு போர்க்களமாகவே இருக்கிறது. ஏனெனில், சமூகத்தில் ஆண்கள் மூலம் பல்வேறு பிரச்சினைகளை பெண்கள் இன்றும் எதிர் நோக்குகின்றார்கள். ஆகவே, இவ்வாய்வானது பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆய்வு பிரச்சினை

உலகளாவிய ரீதியில் போதைப் பொருள் பாவனையானது அதிகரித்தவண்ணமுள்ளது. அந்த வகையில் போதைப் பொருட்களில் ஒரு வகையான மதுபான பாவனையானது தம் சமுதாய ஆரோக்கியத்திற்கு எதிராக பாரியளவில் எழுந்திருக்கும் பிரச்சினைகளில் முக்கியமானதாகும். மனிதன் தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும் குழப்பத்தையும் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொள்கிறான். எமது நாட்டை பொறுத்த வரை ஒவ்வொரு பிரதேசங்களிலும் மதுபான கடைகள் காணப்படுவதுடன் மதுபானத்திற்காக ஏங்கி நிற்கும் நீண்ட வரிசைகளையும் காணக்கூடியதாகவுள்ளது. மதுபான பாவனையில் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா அமைப்புகளிலும் பாதிப்புகளே ஏற்படுகின்றன. அதேபோல், பொதுவாக ஆண்கள் மதுபானத்தை அருந்துவதனால் அவரின் மனைவி பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றாள். மேற்படி கணவனின் மதுபான பாவனையால் மனைவி எதிர் நோக்கும் பிரச்சினைகளை கண்டறிவதே இங்கு ஆய்வுக்குற்படுத்த வேண்டிய ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வின் நோக்கம்

கணவனின் மதுபான பாவனையால் மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை என்பதை கண்டறிதல்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது, விபரிப்பு ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். இதில் முதலாம் நிலைத்தரவுகள் நேர்காணல், அவதானம் மூலம் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்டன.

### தரவுப் பகுப்பாய்வு

மதுபான பாவனையானது ஆண்கள் மத்தியில் உலாவி வரும் மிக மோசமான ஒரு பழக்கமாகும். மதுபானத்தை பயன்படுத்துவதால் உடலுக்கு சக்தியும் தெம்பும் உற்சாகமும் நல்ல தூக்கமும் கிடைப்பதாக எண்ணுகின்றனர். ஆனால் அதுதான் நிச்சயமாக இல்லை ஏனெனில், குடிப்பழக்கத்தால் உடல் சக்தி குன்றி உடலுறுப்புக்கள் பழுதடைந்து நோயாளி ஆகுவதே அதிகம். ஆண்களே அதிகளவில் மதுபான பாவனையில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு சமூகத்திலுள்ள குடும்பத் தலைவர்களான ஆண்கள் அதாவது கணவன் மதுபான பாவனையில் ஈடுபடுவதால் அவனது மனைவி பல சவால்களை எதிர்நோக்குகின்றாள். இவ்வாறு மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலவாறாக இனங்காணப்பட்டன.

அந்த வகையில், மதுபான பாவனையில் கணவன் ஏன் ஈடுபடுகிறான் என்றால் உடல் சோர்வு, உடலில் ஏதாவது நோய் நிலை, மனச் சோர்வு, கோபம், குற்றவுணர்வு, வேலை களைப்பை மறக்க, மன அழுத்தம், தனிமை, தாழ்வு மனப்பாண்மை, மதுவின் விளைவுகள் பற்றி தவறான நம்பிக்கை எண்ணங்களை கொண்டிருத்தல், விஷேட தினங்களில் மது பரிமாறப்படுவதன் மூலம் பழக்கப்பட்டு வழமை ஆக்கிக் கொள்ளல், நண்பர்கள் வற்புறுத்தல், பிரபலங்களின் தவறான எடுத்துக்காட்டு, மேலைத்தேய நாகரீகத்தின் மோகம், குடும்ப உறவுகளுக்கிடையில் பிரச்சினைகள், குடும்ப வறுமை நிலை என்ற பல காரணங்களால் மதுபான பாவனைக்கு அடிமையாகின்றனர். அவற்றுள், “வேலை களைப்பை மறக்க, மனச்சோர்வு, குடும்ப உறவுகளுக்கிடையில் பிரச்சினைகள், குடும்ப வறுமை நிலை மற்றும் கோபம்” (நபர்:1,3,6,8) போன்றன நேர்காணல் மூலமாக கண்டறியப்பட்ட முக்கிய காரணங்களாகும்.

நாட்டில் இடம்பெறும் அதிகளவான குற்றச் செயல்களுக்கு மதுபான பாவனையே காரணமாகும். ஏனெனில், மது மனித உடலின் குருதியோட்டத்தை விரைவுபடுத்துவதனால் உண்டாகும் போதையும் வேகமும் கொலை, கொள்ளை, வன்முறைகள், விபத்து போன்ற குற்றங்கள் இடம்பெற காரணமாகவுள்ளது. ஏனெனில், மனிதன் மதுபான பாவனையால் தனது நிதானத்தை இழந்து மிருகத்தனமாக மாறுகின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது குடும்ப உறவுகளை போல பெறுமதியான விடயம் இந்த உலகில் வேறெதுவுமில்லை. ஆனால், மதுபான பாவனைக்கு அடிமையாகிய கணவனூடாக மனைவி பலவாறான இன்னல்களை எதிர் நோக்குகிறாள் என்பது நேர்காணல் மற்றும் அவதானம் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

மனைவி எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாக கணவன் மதுபானத்தை அருந்தி விட்டு மனைவியை அடித்தல் அல்லது துன்புறுத்தல் என்பது நேர்காணல் மூலமாக பெறப்பட்டது (நபர்:1,2,5). அதாவது கணவன்மார் வேலைக்கு சென்று வரும் வழியில் மதுபானத்தை அருந்திவிட்டு வீடுகளுக்கு செல்கின்றனர். இவர்கள் மனைவிமார்களுக்கு அடித்து துன்புறுத்துவதுடன் குழந்தைகளுக்கும் அடித்து துன்புறுத்துவதாக இனங்காணப்பட்டது. அத்துடன் இன்னும் சிலர் மதுபானத்தை அருந்துவதற்காக மனைவியிடம் பணம் கேட்டு அடிப்பதாகவும் குறிப்பிட்டனர்.

அத்துடன் தினமும் கணவன்மார் தொழிலுக்கு சென்று பணம் சம்பாதித்து வரும் வழியில் அந்த வருமானத்திற்கு மதுபானத்தை அருந்துவதனால், குடும்பத்தில் வறுமை நிலை ஏற்படுகிறது என்பது நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் கண்டறியப்பட்டது (நபர்:1,2,6,8). இதனால் குடும்பத்தை கட்டி காப்பது சிரமமாகவுள்ளதாகவும் ஒரு குடும்பத்திலுள்ள மனைவி தொழிலுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படுவதாகவும் குடும்பத்தை காப்பதற்காக மனைவிமார் கூலி வேலைகளில் ஈடுபடுவதுடன், வீடுகளில் வேலை செய்யும் நிலைக்கு தள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டனர். இதனால் பெண்களுடைய வாழ்வு தினந்தோறும் போர்க்களமாகவே இருக்கிறது.

அத்துடன் கணவன் இவ்வாறான பழக்க வழக்கத்தில் ஈடுபடுவதனால் குழந்தைகளை தனியாக நின்று பராமரிப்பதில் பல சிரமங்களை மனைவி எதிர்கொள்கின்றாள். இதனால் கல்வி கற்கும் வயதில் கல்வியை இடைநிறுத்தி விட்டு குழந்தைகள் வேலைக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகின்றது. அதுமட்டுமல்லாது, தந்தையின் இவ்வாறான நடத்தைகளைக்கண்டு குழந்தைக்கு தந்தையின் மேல் வெறுப்பு உண்டாவதுடன், சில சமயங்களில் குழந்தைகளும் தந்தையின் பழக்கத்தை பழகுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாக ஏற்படுகிறது. ஏனெனில், கணவன் வீட்டில் மதுபானத்தை அருந்துவதால் அதனை சிறுவர்கள் பழகிக் கொள்ளலாம். அத்துடன் கணவன் போதை மயக்கத்தில் குழந்தைகளிடம், மனைவியிடம் கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தி பேசுவதால் குழந்தைகள் அந்த வார்த்தைகளை தங்களுக்கு பழக்கப்படுத்திக் கொள்வார்கள். மேற்படி கணவனின் மதுபான பாவனையில் குழந்தைகளை சரியான வழியில் வழிகாட்டி, கல்வியை கற்று சிறந்த குழந்தைகளை உருவாக்க முடியாத நிலைக்கு மனைவிமார்கள் உள்ளாவதாக இனங்காணப்பட்டது. இங்கு சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது. ஏனெனில், குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாகி விடுகிறது.

கணவனின் மதுபான பாவனையால் மனைவி மனஅழுத்த நிலைக்கு உள்ளாகின்றாள் என்பது அவதானித்தல் மூலம் விளங்கிக் கொள்ள முடிந்த விடயமாகும். ஏனெனில் கணவன் போதை மயக்கம் காரணமாக மனைவியை துன்புறுத்துவதனாலும், குடும்ப பிரச்சினைகள் காரணமாகவும் மன அழுத்தத்திற்கு மனைவி ஆளாகிறாள். இதனால் சில நேரங்களில் கணவனின் தொல்லையால் மனைவி தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை அறிய முடியுமாக இருந்தது. அதுமட்டுமல்லாது, மனநிம்மதி இழந்து இதய நோய், நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் போன்ற பல நோய்களுக்கு ஆளாகியுள்ளமை நேர்காணல் மூலம் இனங்காணப்பட்டுள்ளது. (நபர்: 1,3,7,9)

மதுபான பாவனையில் குற்றச்செயல்கள் அதிகரிப்பதுடன் சமூகத்தில் மக்கள் ஒதுக்கி வைக்கும் நிலை உருவாகியுள்ளது. அதாவது மதுபானத்தை அருந்துவதற்கு தேவையான பணத்தை பெற முடியாத சந்தர்ப்பத்தில் திருடும் பழக்கத்தை பழகுதல், கடன் வாங்குதல், வீட்டிலுள்ள பொருட்களை விற்றல் போன்ற வேலைகளை கணவன் செய்வதனூடாக மக்கள் இவர்களை சமூகத்தில் ஒதுக்கி வைக்கிறார்கள் என்றும் வழக்கமாக உதவி செய்பவர்கள் கூட உதவி செய்ய முன்வருவதில்லை என்றும் குறிப்பிட்டனர். அத்துடன் கணவனின் இவ்வாறான செயல்களால் மனைவி வேலைக்கு செல்லும் வீடுகள், பொது இடங்களில் வேலையிலிருந்து அவளை நீக்குதல், கிண்டல், கேலி செய்தல் மற்றும் நன்றாக அவளிடம் வேலை வாங்குவதாகவும் இதனால் மனைவி கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகின்றாள் என்பதும் நேர்காணலூடாகவும் தெரிய வந்தது.



தினமும் கணவனின் இப்பழக்கத்தால் உடல் உறுப்புக்கள் பழுதடைந்து கொஞ்ச காலத்திற்குப் பின் அவன் குடி நோயாளியாக மாறுகின்றான். அவனது குடிப்பழக்கத்தால் நோயாளியானதும் மனைவிக்கு குடும்பத்தை பராமரிப்பதில் சிரமமேற்படுகிறது. ஏனெனில் கணவனின் நோய்க்கான மருத்துவ செலவுகளுக்கே நிறைய பணத் தேவை ஏற்படுகிறது. இதனால் கணவனை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமும் அதற்குத் தேவையான பணம் இல்லை அதை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதில் பல சிக்கல்களை மனைவி எதிர் கொள்கிறாள். கலந்துரையாடல் மூலம் கிடைத்த முக்கிய பிரச்சினைகளில் மற்றொன்றாக “குடும்ப உறவுகள் தூரமாகுதல்”. (நபர்:1,9,4). அதாவது கணவனின் இந்த மோசமான பழக்கவழக்கத்தினால் மனைவி மற்றும் கணவனின் தாய், தந்தை, குடும்ப உறவினர்கள் போன்றோர் இவர்களுடனான தொடர்பிலிருந்து தூரமாகின்றனர். இதனால் ஒரு தேவையின் போது கூட ஆறுதல் கூற யாருமில்லை என்ற வேதனை மனைவிக்கு ஏற்படுகிறது. இதனால் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றாள். மேற்படி மனைவி எதிர் நோக்கும் பிரச்சினைகள் அனைத்தும் இவ்வாய்வினூடாககண்டறியப்பட்டன.

### முடிவுரை

மேற்படி ஆய்வினூடாக, மதுபான பாவனையில் ஈடுபடும் கணவன் மூலம் ஏனையவர்களை விட அவரின் மனைவியே பல பிரச்சினைகளை எதிர் நோக்குகிறாள் என்பது கண்டறியப்பட்டது. மதுபான பாவனைக்கு அடிமையான ஒருவரின் குடும்ப வாழ்க்கை, சமுதாய அந்தஸ்து, அலுவலக வேலை, உறவினர்களின் தொடர்பு என்பவற்றில் விரிசல் ஏற்பட்டு விடுகின்றது. அத்துடன் மதுபான பாவனைக்கு அடிமையாகி இளமையிலே இறந்து விடும் குடும்பத் தலைவனால் அக்குடும்பமே சிதைந்து சீரழிந்து விடுகின்றது. அத்துடன் குழந்தைகளுக்கு அன்பு, அரவணைப்பு மற்றும் வழிகாட்டுதல் கிடைக்காமல் அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடுகிறது. அதுமட்டுமல்லாது கணவனின் மதுபான பாவனையால் கடன் தொல்லை, பிள்ளைகளின் பராமரிப்பு பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடி, கணவன் துன்புறுத்தல், மனஅழுத்தம் போன்ற பல்வேறு பிரச்சினைகளை மனைவி எதிர் நோக்குகின்றாள். எனவே, போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி மறுவாழ்வு அளிப்பதனூடாக மனைவி எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

### உசாத்துணைகள்:


01. கஜவிந்தன். க., (2020). “சமுதாயத்தில் அதிகரித்து வரும் போதை பழக்கமும் பாலியல் வன்முறைகளும்”. Accessed on 15th August 2020. Retrieved from https://www.kaanpiym.com/index.php/2020-08-15-12-05-50/2021-02-19-05-16-57/932-2021-03-25-22-17-06.

02. “மது போதை வஸ்துப் பாவனையும் இன்றைய இளைஞர் சமுதாயம்”, From https://paddikaaadu.blogspot.com/2018/?m=1, Retrieved: 15.02.2022, Accessed on 08th November 2018.

03. அன்வர். எம்.ஐ., (2018). “மது, போதை வஸ்துப் பாவனையும் இன்றைய இளைஞர் சமுதாயமும்”. Accessed on 04th February 2018. Retrieved from https://www.isalamkalvi.com/?p=115084.

04. “இளம் சந்தினரை குறி வைக்கும் போதை பொருள் பாவனை”, From:https://m.facebook.com/story.php?story_fbid=1586983464687621&substory_index=O&id=902938936425414 , Retrieved : 22.02.2022, Accessed on 19th July 2017.

05. “இளம் சந்தினரை குறி வைக்கும் போதை பொருள் பாவனை”, From:https://m.facebook.com/story.php?story_fbid=1586983464687621&substory_index=O&id=902938936425414 , Retrieved : 22.02.2022, Accessed on 19th July 2017.

06. “இலங்கை: மதுவால் தினசரி 100 பேர் பலியாவதாக ஜனாதிபதி கவலை”. From: https://www.google.com/amp/s/www.bbc.com/tamil/sri_lanka/2016/09/160909_srilanka_alcohol.amp, Retrieved : 17.02.2022, Accessed on 09th September 2016

07. புன்னியாமீன், (2015). “போதை பொருள் ஒழிப்பு சித்திரவதைக்கு ஆளானோர் தினம்”. Accessed on 28th September 2015. Retrieved from https://tamil.oneindia.com/cj/puniyameen/2009/0626-world-anti-drugs-day.html.

08. “மதுவால் ஏற்படும் தீமைகளை தெளிவாக விளக்கும் பாரதிய மஸ்தூர் சங்கம் அமைப்பு செயலாளர்”. From: https://mediyaan.com/bharatiya:mazdoor-sangh/ , Retrieved : 17.02.2022 , Accessed : 2019.

# பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும்:

## அக்கரைப்பற்று வலயத்திற்குட்பட்ட ஆலிம் நகர் அஸ்-ஸிபாயா வித்தியாலயத்தை மையமாகக் கொண்ட கள ஆய்வு



**AM.Hasan Zeena | Y.Fathima Fahija | N. Sohra Jabeen**
**J.Fathima Minha | A.Najeefa**
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

**ஆய்வு சுருக்கம்**

கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி என்ற கோட்பாட்டிற்கு இணங்க வளர்ந்து வரும் உலகளாவிய கல்வி அபிவிருத்தி செயல் நெறிகளுக்கு இணங்க இலங்கையின் கல்வி விருத்தியும் மாற்றம் பெற்றுக் கொண்டே செல்கின்றது. கல்வி அமைப்பானது மாற்றமுறும் போது அதற்கு ஈடுகொடுக்க முடியாமலும் அதேவேளை மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் திறனின்மையாலும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளிலிருந்து இடைவிலகும் தன்மை இன்று அதிகரித்துச் செல்லும் போக்கு கூடுதலாக காணப்படுகின்றது. ஏன் மாணவர்கள் இடைவிலகுகின்றனர் என்பதை கண்டறியும் முகமாக அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் ஆலிம் நகர் பிரதேசத்தில் அஸ்-ஸிபாயா வித்தியாலயத்தில் தரம் 6-9 வரையான மாணவர்கள் இடைவிலகலும் அதற்கான காரணங்கள் கண்டறிவதையும் மையப்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் தொடர்பான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையினால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ் ஆய்விற்கு முதலாம் நிலை தரவுகளும் இரண்டாம் நிலை தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. முதலாம் நிலை தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக பிரதேசங்களுக்குச் சென்று உரியவர்களிடம் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. அப் பாடசாலையின் அதிபர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இடைவிலகிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மூலம் நேர்காணல் மற்றும் வினாக்கொத்து மூலம் தகவல்கள் பெறப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகள் பாடசாலை ஆவணங்கள் (மாணவர்கள் தினவரவு இடாப்பு, பாடசாலை மாணவர் பதிவு புத்தகம்) ஆய்வுக் கட்டுரைகள் ஊடாகவும் பண்பு ரீதியான தரவுகள் மற்றும் அளவு ரீதியான தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் Excel விரிதாள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**திறவுச் சொற்கள்:-** கல்வி, மாணவர், பாடசாலை இடைவிலகல், இடைவிலகலுக்கான காரணிகள், ஆலிம் நகர்

**ஆய்வின் அறிமுகமும் முக்கியத்துவமும்**

அறிவு மையத் தகவல் மைய நூற்றாண்டு என வர்ணிக்கப்படும் 21 ஆம் நூற்றாண்டில் கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி என மாறிவிட்டது. “உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதம் கல்வி” (நெல்சன் மண்டேலா) என்ற வார்த்தைக்கமைய கல்வியே ஒருவனுடைய உள்ளத்தையும் அறிவையும் பண்படுத்தும் மாபெரும் சக்தியாகும். 1992 தேசியக் கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய பொதுக் கல்வியின் நோக்கங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறமுடியும்: கல்வியானது மனிதநேயமுள்ள நாட்டுப்பற்றுள்ள நற்பிரஜையான எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய நல்லாளுமைகளை உருவாக்குவதாகும்.” (கல்வியின் அடிப்படைகள், தொகுதி – 1, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், திருத்தியமைக்கப்பட்ட பதிப்பு, 2009. பக் - 119)

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் முறைசார்ந்த இலவசக் கல்வியை வழங்குவதில் அரசாங்கம் முன்னிலை வகித்து வந்துள்ளது. இலவசக் கல்வி, புலமைப்பரிசில்கள், கிராமப்புறங்களில் விரிவான முறையில் அரசாங்கம் அமைத்துள்ள பாடசாலைகள், இலவச பாடநூல்கள் என இலங்கையில் சம கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்தி நாட்டு மக்களை கற்றறிந்தவர்களாக மாற்றுவதற்கு பல தசாப்தங்களாக முயற்சித்து வருகின்றது.

அனைவருக்கும் கட்டாயக் கல்வி என 5-16 வயதெல்லைக்குட்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வியை இலங்கை அரசாங்கம் வழங்கி வருகின்றது. அவ்வாறு மாணவர்களுக்கு கட்டாய கல்வியை கற்பது உரிமையாகவும் அதனை தவறும் இடத்தில் தண்டனைக்குரிய குற்றமாகவும் இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கையில் பல்கலைக்கழக கல்வி நிலையை விட கட்டாய கல்வி நிலையில் அதிக அளவு சமூகப் பயனுடையது என்பதையே உலக வங்கியின் 2002 ஆம் ஆண்டின் இலங்கை எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமன்றி இலங்கை கல்வியானது பல வகையில் நவீன மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. இலத்திரனியல் கற்கை, தொழில்நுட்ப பிரிவு மிக முக்கிய பிரிவாகக் கொண்டு வரப்பட்டு இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கல்விக் கொள்கைகள், பாடத்திட்டங்கள் என கல்வி திட்டமிடல் அதிகரித்து சென்றாலும் கல்வியில் குறித்த எதிர்பார்ப்பை அடைய முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும் பாடசாலை மாணவர்களின் இடைவிலகலும் கல்வி திட்டத்தில் பாரிய சவாலாக அமைந்துள்ளது. பாடசாலையில் இணைந்து கொண்ட பிள்ளைகள் முழுமையாக கல்வியைப் பெறாது பாடசாலையை விட்டு விலகல் இடைவிலகல் எனப்படும். இவ்வாறான இடைவிலகல் கல்விப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதார, சமூக, அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய ஆளுமைகள், மனித வளங்கள் இவ்விடைவிலகல் மூலம் இழக்கப்படுகின்றன. தங்கி வாழும் நிலை சமூகத்தில் அதிகரித்துள்ளது.

இடைவிலகலானது வறுமை, ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளப்பற்றாக்குறை, சமூக சூழல், பெற்றோர் கவனயீனம், போஷாக்கின்மை போன்றவைகளால் தூண்டப்படுகின்றமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இது கல்வி சமூகம் எதிர்நோக்கும் பாரிய சவாலாக கருதப்படும் அதேவேளை மாணவர்கள் சமூக சீரழிவுக்கும் காரணமாகின்றார்கள்.

இவ் ஆய்வானது Covid – 19 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது என்ற வகையில் மாணவர்களின் கல்வி இடைவிலகல் அதிகரித்து செல்வதற்கும் மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை குறைவடைவதற்கு இக்காலப்பகுதி காரணமாக அமைவதையும் குறிப்பிடலாம். தொழில்நுட்ப சாதனங்களின் மூலமாக பாடசாலை கல்வியை தற்போது தொடரும் நிலை காணப்பட்ட போதிலும் பின் தங்கிய கிராமங்களில் வசிக்கின்ற மாணவர்களுக்கு இது சாத்தியமற்ற ஒன்றாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பொருளாதார வசதி குறைவு மற்றும் தொழில்நுட்ப அறிவு குறைவு என்பதாலும் பின் தங்கிய கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு தொழில்நுட்ப கல்வி முறையை பெற்றுக் கொள்வது சிரமமானதாக உள்ளது. இதனால் இக்காலகட்டத்தில் மாணவர்கள் கல்வியை தொடரமுடியாமல் கல்வியை விட்டும் இடைவிலகும் தன்மை அதிகரித்துச் செல்கின்றது.

அந்த வகையில் அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் ஆலிம் நகர் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் பற்றிய ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையினால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் ஆலிம் நகர் பிரதேசத்தில் உள்ள அஸ்-ஸிபாயா வித்தியாலயத்தில் மாணவர்கள் இடைவிலகலும் அதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் முகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அக்கரைப்பற்று பிரதேசத்தில் AP/20A/04 எனும் கிராம உட்பிரிவை கொண்ட 360 குடும்பங்கள் காணப்படுகின்ற ஆலிம் நகரில் அஸ்-ஸிபாயா பாடசாலை அமையப் பெற்றுள்ளது. இப்பாடசாலை 1 – 9ஆம் தரங்களை கொண்டதாக காணப்பட்ட போதிலும் 2021ம் ஆண்டு தரம் 10உம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

தற்காலத்தில் இன்றியமையாததாக அமைந்துள்ள கல்வியை பெற்றுக்கொள்வதற்கு வறுமை பின்னணியில் உள்ள மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பது ஆலிம் நகரை மையப்படுத்திய ஆய்வின் ஊடாக முக்கிய பிரச்சினையாக அறியப்பட்டது. இடைவிலகல் தொடர்பாக உள்ள ஏனைய ஆய்வுகளிலும் இப்பிரச்சினையை அறியக்கூடியதாக உள்ளது. இத்தகைய வறுமைக்காக இங்குள்ளவர்கள் கல்வி காலத்திலேயே சுயதொழிலில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுடன் தாய், தந்தை வெளிநாடு செல்லல், தாய் தந்தையின் பலதரப்பட்ட திருமணங்கள், பெற்றோரின் அக்கறையின்மை, ஆசிரியரின் தவறான நடத்தைகள் போன்றன இங்கு மாணவர்களின் இடைவிலகலில் அதிகமாக செல்வாக்கு செலுத்துகின்ற சூழலியல் காரணிகளாகும். இவற்றுடன் ஆன்மீக ரீதியாக நோக்குகின்ற போதும் இவர்களிடம் பலவீனமடைந்தாகவே காணப்படுகின்றது என்பவற்றிற்கிணங்க இத்தகைய சூழல் பின்னணியில் உள்ள மாணவர்கள் இலவச கல்வியை புறக்கணித்து இடைவிலகுகின்றனர். அத்துடன் சார்ந்த மாறி, சாராத மாறி என்பவற்றில் சார்ந்த மாறி இவ்வாய்வில் தாக்கம் செலுத்துகின்றது. இங்கு மாணவர்களது இடைவிலகல் காரணங்களினூடாக ஆலிம் நகரில் வளர்ந்து வரும் இப்பாடசாலையில் போக்கு இடைவிலகலினூடாக அதன் வளர்ச்சிக்கு தடையாகவும், இவ்வூரின் அபிவிருத்திக்கும், இவ்வூரில் கற்ற சமூகம் உருவாகுவதற்கும், எதிர்காலத்தில் திறம்பட்ட ஒரு சமூகம் உருவாகுவதற்கும் சவாலானதாக அமைந்து விடுவதற்கும் வாய்ப்பு காணப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஆலிம் நகர் அஸ்-ஸிபாயா பாடசாலையில் மாணவர்கள் இடைவிலகுவதற்கான பின்னணிகளை கண்டறிந்து, அவ் இடைவிலகலின் விளைவுகளால் அவர்களின் வாழ்வு அடைந்த நிலைகளையும் ஆராய்ந்து அவற்றிற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஆலோசனைகளை வழங்குவதும் ஆய்வின் பொதுநோக்கமாகும்.

இடைவிலகலுக்கான காரணங்களை கண்டறிய குடும்ப நிலை, பொருளாதார வசதி, குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, சமூக நலன் உதவிகள், தொழில் முறைமைகள், பிள்ளை பெற்றோருடன் வாழும் நிலை, கற்பதற்கான சமூகம் மற்றும் பாடசாலை சூழல், இடப்பெயர்வுகள், ஆசிரியர் - மாணவர்களுடனான உறவு, பெற்றோர் - பாடசாலைக்குடனான உறவு, பாடசாலை கலைதிட்ட முறைகள், பாடசாலை கல்வி வளர்ச்சித் திட்டங்கள் போன்ற விடயங்களை ஆராய்வதன் ஊடாக இடைவிலகலை கட்டுப்படுத்த குறித்த பாடசாலையில் கல்வியில் மேம்பாடு அடைவதற்கான ஆலோசனைகள் மற்றும் நகர்ப்புற மக்களிடம் கல்வி பற்றிய விழிப்புணர்வுகள் போன்றவற்றை ஏற்படுத்துவதும் சிறப்பு நோக்கமாகும்.

### ஆய்வு முறையியல்

இது ஒரு பண்புசார் மற்றும் அளவு ரீதியான ஆய்வாகும். இடைவிலகிய மாணவர்களின் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் முதலாம் நிலை தரவுகளாக இடைவிலகிய மாணவர்களில் 12 பேர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு எம்மால் சுயமாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதுடன், எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு மாதிரிகளுடன் கட்டமைக்கப்பட்ட நேர்காணல், வினாக்கொத்து, அவதானம் என்பவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டது.

இரண்டாம் நிலைக் தரவுகளாக ஆய்வு கட்டுரைகள், வலயக் கல்வி அலுவலகம், கிராம சேவகர் அறிக்கை மாணவர் வரவு இடாப்பு, பாடசாலை மாணவர் பதிவு புத்தகம் போன்றவற்றிலிருந்து இடைவிலகல் தொடர்பான தகவல் பெறப்பட்டன.

### இலக்கிய மீளாய்வு

இத்தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுகளை தேடலுக்குட்படுத்திய சமயத்தில் பரந்த அளவில் இல்லாமல் ஒரு சில தலைப்புகள் பொருத்தமானதாக அமைகின்றன.

W.waseem Akram, SMM. Mazahir, SLM. Farsath, MNM. Insyraf, MT. Hithayethullah போன்றவர்களின் ஊடாக அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்பு நகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய - கள ஆய்வு என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது இவ்வாய்வின் நோக்கமாக பாடசாலை இடைவிலகல் இருக்கின்றதா? என்பதை கண்டறிந்து இடைவிலகலுக்கான காரணங்களையும் இனங்காண்பதை நோக்காக கொண்டுள்ளதுடன், வறுமை, தொழில், இளவயது திருமணம், பெற்றோர்களின் கவனக்குறைவு, போக்குவரத்து கஷ்டம், பாதுகாப்பின்மை, மாணவர்கள் கல்வியில் ஆர்வமின்மை போன்ற பிரச்சினைகள் இனங்காணப்பட்டு இவற்றை தீர்ப்பதற்கான விதந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

Keeththaviny gnanasdngam and sithamparanathan utheyakumar போன்றவர்களின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்கம் அதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் இடைவிலகல் ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட ஆய்வு எல்லைக்குள் மாணவர் இடைவிலகல் தொடர்பாக எத்தகைய காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதே இவ்வாய்வு பிரச்சினையாகும். இக்காரணிகளை கண்டறிவதுடன் இக்காரணங்கள் எந்த அளவிற்கு மாணவர்களின் இடைவிலகலுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை கண்டறிந்து அவற்றை குறைப்பதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். அவற்றுடன் குடும்பச் சூழ்நிலை, இடப்பெயர்வு, சகபாடிகளின் சேர்க்கை, கற்க விரும்பாமை, தனிப்பட்ட நிலை, மற்றும் பெற்றோர்களது ஊக்கமின்மை என்பன முறையே 33.3%, 22.2%, 5.6%, 16.7%, 11.1% என்ற வகையிலும் பெற்றோரது இறப்பு / பிரிவு என்பன 55.66% என்பனவும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

Rathika Balakrishnan and Uthayakumar S.S. போன்றவர்களின் ஊடாக "பாடசாலை மாணவர்களது இடைவிலகலைத் தீர்மானிக்கும் காரணிகள் - வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அல்வாய்க் கிராமத்தினைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு" ஏன், ஏனைய பிரதேசத்தினை விட பாடசாலை மாணவர்களது இடைவிலகல் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது என்பது ஆய்வு பிரச்சினையாக அமைந்துள்ளது. இவ்வாய்வு கிராமத்தின் பாடசாலை மாணவர்களது இடைவிலகலைத் தீர்மானிக்கும் காரணிகளை இனங்காணல், இடைவிலகலில் இக்காரணிகளின் வகிபங்கினை அறிதல் மற்றும் இடைவிலகலைக் குறைப்பதற்கான தீர்வு வழிமுறைகளை விதந்துரை செய்தல் என்ற பிரதான நோக்கத்துடன் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்வு தொடர்பான முடிவுகளின் படி ஆய்வுப் பிரதேச மாணவர்களின் இடைவிலகலில் குடும்பத்தின் குறைந்த வருமான மட்டம், பெற்றோரின் குறைந்த கல்வி மட்டம், பெற்றோரின் பங்களிப்பு, குடும்ப அங்கத்தவரின் எண்ணிக்கை, மாணவர்களின் நிலை, மற்றும் சகபாடிகளின் கல்வி நிலை ஆகியன முறையே 10%, 43.3%, 3.3%, 13.3% என்றவாறு செல்வாக்கு செலுத்தியுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.

ம. திபாகரன என்பவரால் மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகலும். (ப. கொஸ்லந்தை ஸ்ரீ கணேஸா தமிழ் மகா வித்தியாலயத்தை மையமாக கொண்ட ஆய்வு) எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுப் பிரச்சினையாக ஏன் மலையக மாணவர்கள் இவ் இலவச கல்வியை புறக்கணித்து இடைவிலகுகின்றனர் என்பதே ஆய்வு பிரச்சினையாகும். மலையக மாணவர்கள் இலவச கல்வியை புறக்கணித்து இடைவிலகுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கண்டறிவது ஆய்வின் பிரதான நோக்கமாகும், மலையக மாணவர்கள் பாடசாலை கல்வியை புறக்கணித்து இடைவிலகுகின்றமைக்கு பொருளாதார, சமூக, குடும்ப, சூழல் ரீதியாக ஏற்படுகின்ற பிரச்சினைகளே காரணமாக அமைந்தாலும் மிக பிரதான காரணமாக அமைவது பெற்றோர்களின் அக்கறையின்மை என்பது கண்டறியப்பட்டுள்ளன.

இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் இவ்வாய்வை ஒட்டிய சில இலக்கிய மீளாய்வுகள் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அதிபர், பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்களுடனான நேர்காணல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டும் ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் போன்ற இரண்டாம் நிலை தரவுகளில் ஊடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பிரதான கண்டறிதல்களும் கலந்துரையாடல்களும்**

ஆய்வுப் பிரதேசமான ஆலிம் நகர் அஸ்-ஸிபாயா பாடசாலையில் 14.7% இடைவிலகல் இருப்பது இனங்காணப்பட்டது. ஆலிம் நகர் பிரதேசத்தில் தரம் 1 – 10 வரையான இரண்டாம் நிலை (2021 தரம் 10 அறிமுகப்படுத்தப்பட்டது) கல்வியினை கற்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 2021ல் 150 மாணவர்கள் தற்போது கல்வி கற்கின்றனர். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தரம் 6 – 9 வரையான இரண்டாம் நிலை பிரிவில் (2016 – 2020) கற்பதற்க்குத் தகுதியான மாணவர்கள் அதிகம் இருந்தும் 63 மாணவர்கள் தான் கற்பதில் அக்கறை செலுத்துகின்றனர். பாடசாலைக்குச் சமூகமளிக்காதவர் பாடசாலையை விட்டு இடைவிலகியவராகக் கருதப்படுவர் இவ்வாறு இப்பாடசாலையில் இடைவிலகல் இடம்பெறுவது இதனூடாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகம் 2010இல் பொதுவான இடைவிகலல் 5% எனக் குறிப்பிடுகின்றது. எனினும் இப்பாடசாலையில் இவ்வாய்வினூடாக (2016 – 2020) 14.7% இடைவிலகல் இடம்பெற்றிருப்பது கீழ்வரும் தரவுகள் மூலம் விவரிக்கப்படுகிறது.


**அட்டவணை – 01**

| Grade | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|
| 6 | 10 | 14 | 17 | 20 | 16 |
| 7 | 17 | 10 | 12 | 16 | 20 |
| 8 | 14 | 15 | 06 | 19 | 15 |
| 9 | 16 | 08 | 13 | 06 | 12 |
| 10 | | | | | - |
| Total | 57 | 47 | 48 | 56 | 63 |

**மூலம் : அஸ்-ஸிபாயா வித்தியாலய தினவரவு இடாப்பு (2016 – 2020)**

அட்டவணை – 01 இல் பாடசாலையிலிருந்து மாணவர்களின் இடைவிலகலை எடுத்துகாட்டுகின்றது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியான 2016-2020 காலப்பகுதியில் 2016ம் ஆண்டு ஆறாம் தரத்திற்கு 10 பேர் தரமுயர்த்தப்பட்ட அவர்கள் 2019ம் ஆண்டு 06 பேராகவும் 2017ம் ஆண்டு 14 பேர் ஆறாம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட அவர்கள் 2020ம் ஆண்டு 12 பேருடனும் 2018ம் ஆண்டு ஆறாம் தரத்திற்கு 17 பேர் தரமுயர்த்தப்பட்ட அவர்கள் 2020ம் ஆண்டு 15 மாணவர்களாகவும் 2019ம் ஆண்டு ஆறாம் தரத்திற்கு 20 பேர் அனுமதிபெற்று அவர்கள் 2020ம் ஆண்டில் அதே 20பேருடன் ஏழாம் தரத்தில் கல்வி கற்கின்றனர். 2020ம் ஆண்டில் 16 மாணவர்கள் ஆறாம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டு கல்வி கற்று வருகின்றனர். இந்த அட்டவணையை பார்க்கும் போது மாணவர்களின் இடைவிலகல் இடம்பெற்றுள்ளதை காணமுடிகின்றது. இவர்களின் இடைவிலகலை வரைபடம் – 01 தெளிவுபடுத்துகிறது.

| வருடம் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2016 | 10 |
| 2017 | 10 |
| 2018 | 06 |
| 2019 | 06 |
| 2020 | - |





**வரைபடம் 1**

இவ்வரைபடத்தின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு ஆறாம் தரத்திற்கு 10 மாணவர்கள் தரமுயர்த்தப்பட்டு, அதே 10 மாணவர்களும் 2017ஆம் ஆண்டு ஏழாம் தரத்தில் கல்வி கற்றனர். 2018ஆம் ஆண்டு எட்டாம் தரத்திற்கு தரமுயர்த்தப்படுகையில் 4 மாணவர்கள் இடைவிலகி 6 மாணவர்கள் மாத்திரமே தரமுயர்ந்தனர். 2019ஆம் ஆண்டு அதே 6 மாணவர்களும் ஒன்பதாம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டனர். இந்த அடிப்படையில் பார்க்கும் போது ஒவ்வொரு ஆண்டிலும் கூடுதலாகவோ குறைவாகவோ மாணவர் இடைவிலகல் இடம்பெற்றிருப்பதை காணமுடிகின்றது.

மேலும் குறிப்பிட்ட தின வரவு இடாப்பின் அடிப்படையில் (2016 – 2020) ஒவ்வொரு வகுப்பிலும் கற்ற மொத்த மாணவர் எண்ணிக்கையையும் வரைபடம் 1ஐயும் நோக்குகையில் 08ம், 09ம் தர மாணவர்கள் கல்வியை தொடரும் எண்ணிக்கையை விட இடைவிலகும் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது என கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் அம்மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர் வெளி இடங்களுக்கு அல்லது 8km தொலைவில் உள்ள அக்கரைப்பற்று நகரிலுள்ள பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும் என்ற பிரதான காரணத்தினாலும், வறுமை, மாணவர்களின் ஆர்வமின்மை போன்ற பல காரணங்கள் பாடசாலைக் கல்வியை தொடர்வதற்கு சவாலாக காணப்பட்டன.

| மாணவர் இடைவிலகலைத் தூண்டிய காரணிகள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வறுமை | 8 |
| கற்றலில் ஆர்வமின்மை | 3 |
| போக்குவரத்துப் பிரச்சினை | 3 |
| இளவயதுத் திருமணம் | 2 |
| இடப்பெயர்வு | 6 |
| ஆசிரியர் கவனயீனம் | 3 |
| பெற்றோர் கவனயீனம் | 3 |
| வேறு பாடசாலை | 13 |




**வரைபடம் 2**

இந்த அடிப்படையில் நோக்கும் போது ஒவ்வொரு வருடமும் இடைவிலகல் காணப்படுகின்றதை அவதானிக்க முடிகிறது. மேலும் ஒவ்வொரு வகுப்பையும் தனித் தனியாக பார்க்கும் போது இடைவிலகல் வளர்ச்சியை காணக்கூடியதாக உள்ளது. இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் கருத்துக்கள் நேர்காணல் மூலம் வினவப்பட்ட போது வேறு பாடசாலைகளுக்குச் செல்லுதல், வறுமை, இடம்பெயர்வு, போக்குவரத்து, கற்றலில் ஆர்வமின்மை, ஆசிரியர் கவனயீனம், பெற்றோர் கவனயீனம், இளவயதுத் திருமணம் என்பன் மாணவர் இடைவிலகளில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக புள்ளி விபரங்களின் அடிப்படையில் எம்மால் பகுப்பாய்வு செய்ததன் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

32% ஆனோர் வேறு பாடசாலைக்குச் செல்வது பிரதான காரணமாக கண்டறியப்பட்டுள்ளது. 7% ஆன மாணவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று கல்வியை மேற்கொள்ளவதற்கான போக்குவரத்து வசதிகள் குறைவாக காணப்படும் அதேவேளை, அப்பிரதேச மக்கள் விவசாயம், விலங்கு வேளாண்மை போன்ற கூலி வேலை செய்தும் வாழ்வாதாரத்திற்கு போதாத நிலையில் வறுமையில் வாழும் மக்கள் என்ற வகையில் வெளியிடங்களுக்கு தம் பிள்ளைகளை கல்வியினை தொடர அனுப்புவதற்கு சொந்த வாகனமின்மை மற்றும் கூலி வாகனங்களிலும் பிள்ளைகளை அனுப்பமுடியாத வறுமை நிலை காணப்படுகின்றது. பெண் பிள்ளைகளுக்கு ஒழுங்கான பாதுகாப்பு போக்குவரத்தின் போதும், வெளியிடங்களில் கற்கும் போது இல்லை என அம்மக்கள் எண்ணுகின்றனர். தமது பிள்ளைகளை தமது பொறுப்பிலே பாடசாலைக்கு அழைத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் அவர்கள் வேலைக்குச் சென்று உரிய நேரத்துக்கு சமூகமளிக்க முடிவதில்லை. அவ்வாறே வெளிநாடு சென்ற தந்தையர் உள்ள தாய்மார்களுக்கும் அப்பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பி அழைத்து வருவதும் சவாலானதாக காணப்படுகின்றது. இதுவும் மாணவர்களின் இடைவிலகலில் தாக்கம் செலுத்துகின்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமவயது ஈர்ப்பு காரணமாக கல்வியை கரிசனையோடு மேற்கொள்ள முடியாத நிலையும் இறுதியில் திருமணத்திற்கு இட்டுச் செல்கின்றமையாலும், தாய் அல்லது தந்தை அல்லது இருவரும் வெளிநாடு செல்வதால் பாதுகாவலர் இன்மையால் பிள்ளைகள் முதிர்ச்சி அடையாத நிலையில் திருமண பந்தத்தில் இணைத்து விடப்படுகின்றனர். இதனால் பாடசாலை கல்வியை இடைநிறுத்தம் செய்ய தீர்மானிக்கப்படுகின்றது. 5% ஆன இடைவிலகல் இதனூடாக இடம்பெறுகின்றது.

இப்பிரதேசத்திற்கு விவசாயம், விலங்கு வேளாண்மை, கல்லுடைத்தல் போன்ற தொழில் நிமிர்த்தம் தற்காலிகமாக குடியேறுவோரின் பிள்ளைகள் கல்வியில் ஆர்வமின்மையினால் பாடசாலை கல்வியை தொடராது தந்தையுடன் தொழிலில் ஈடுபடுவதாகவும் அதிபருடனான நேர்காணலின் மூலம் இத்தகவல் கிடைக்கப் பெற்றது. ஆலிம் நகர் பிரதேசத்தில் பல பிரதேசங்களை சேர்ந்தவர்கள் வசித்து வருவதால் அவர்களுடைய பிரதேசங்களுக்கு தொழில் நிமித்தம் சென்று தங்கி வருவதாலும் இடைவிலகல் இடம்பெறுகின்றது. 15% ஆன இடைவிலகல் இவ்விடம்பெயர்வு மூலமாக இடம்பெறுகின்றது. வறுமை காரணமாகவும் தங்களது கல்வி நடவடிக்கையினை தொடர முடியாமையினால் சுயவேலை, கால்நடைகளை மேய்த்தும் தொழில் செய்து வருவதாலும் பாடசாலையிலிருந்து இடைவிலகுகின்றனர். அதேபோல் போஷாக்கான உணவ, வறுமை நிமிர்த்தம் கல்வி நடவடிக்கையில் அதிக அக்கறை காட்டமுடியதாது 20% ஆன மாணவர்கள் இடைவிலகுகின்றனர்.

இங்கு தாய்மார்கள் பணிப்பெண்ணாக வெளிநாடு செல்வதனால் வீட்டில் சகோதரர்களுக்கு சேவகம் செய்ய வேண்டிய நிலையினாலும், வெளிநாடு செல்வோரின் பிள்ளைகளுக்கு பாதுகாவலர் இருந்தபோதிலும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமையினால் இடைவிலகல் காரணமாக அமைகின்றது 7% ஆன பெற்றோரின் கவனயீனத்தினால் இடைவிலகல் இடம்பெறுகின்றது.

ஆசிரியர்கள் சுயவிருப்பத்தோடு வகுப்பறையில் நடந்து கொள்ளுதல், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகவும், மாணவ ஆசிரியர்கள் உடனான தொடர்பாடல் குறைவாக இருந்தமை மட்டுமல்லாமல் ஆசிரியர் மாணவர்களுக்கு தேவையான வளப்பற்றாக்குறைகள் என்பவை காணப்படுவதனால் மாணவர் இடைவிலகல் இடம்பெற்றுள்ளது.

### பரிந்துரைகள்

இப்பிரதேச பாடசாலை மாணவர்களது இடைவிலகலினை குறைப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு சில முன்மொழிவுகள்.

1) அப்பிரதேச மக்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலான நடமாடும் சேவைகள், விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல்.

2) இளவயது திருமண ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3) வறுமையை ஒழிக்கும் நோக்கில் நலன்புரி சேவைகளை முன்னெடுக்கும் வகையில் ஸகாத் நிதியம், பொதுநல அமைப்புகள், சங்கங்கள் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தங்களால் முடியுமான பங்களிப்பைச் செய்தல்.

4) ஒழுக்க, சமூக, கலாசார சீரழிவுகளை உரியமுறையில் சீர் செய்ய ஆன்மீக வழிகாட்டல்களை விசேட ஒன்றுகூடலின் மூலம் வழங்குவதற்கு அப்பிரதேச மதத்தலைவர்கள் ஏற்பாடு செய்தல்.

5) மாணவர்களது கல்வியில் ஆர்வமின்மையை நிவர்த்திக்கும் நோக்கில் பாடசாலை கலைத்திட்டத்தினை மாணவர்களுக்கு தகுந்தாற் போல் மாற்றி அமைக்க வேண்டும்.

6) அதாவது வெறும் பரீட்சையை மையமாக கொள்ளாமல் அனுபவத்தின் அடிப்படையில் இடம்பெற ஆசிரியர் வழிவகுத்தல்.

7) பெற்றோரை இழந்து தொழில் புரியும் சிறுவர்களை இனங்கண்டு அவர்களை பாதுகாத்து அவர்களுக்கான சிறப்பான எதிர்காலத்தை வழங்குவதற்கு சகல தரப்பினரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

8) சுயதொழிலை மேற்கொண்டு அப்பிரதேச மக்களது வாழ்வாதாரத்தை நிவர்த்தி செய்வதற்காக அப்பிரதேச செயலகம் சிறந்த தொழில் வழிகாட்டல்களை வழங்கல்.

9) சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் அவர்களது உரிமைகள் தொடர்பான தெளிவான விளக்கம், உரிமை மீறல்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் அநீதிகள் போன்றவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அப்பிரதேச மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

10) மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் தொழில்நுட்ப சாதனங்கள் பற்றியும் அதன் நுட்பமுறை, அதனை எவ்வாறு கையாளுதல் போன்றவற்றை தெரிவிக்கும் வகையில் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல்.

11) இணைய வழி மூலமான கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிரமப்படும் மாணவர்களை இனங்கண்டு வேறு வழிகளினூடாக (குருகெதர) கற்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல்.

### முடிவுரை

அக்கரைப்பற்று வலயத்திற்குட்பட்ட ஆலீம் நகரில் அஸ்-ஸிபாயா பாடசாலையை மையமாகக் கொண்ட ஆய்வில் அப்பாடசாலையில் இடம்பெறுகின்ற இடைவிலகலானது: முதல் நிலை தரவு சேகரிப்பான நேர்காணலுடன் (அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்) இரண்டாம் நிலை தரவு சேகரிப்பு முறையான மாணவர் வரவு இடாப்பு, வலயக் கல்வி அலுவலகம், கிராம சேவகர் அறிக்கை என்பனவற்றூடாக குடும்ப, சமூக, பொருளாதார, உளச்சார் பிரச்சினைகளின் விளைவு என கண்டறியப்பட்டது. ஆகவே இவற்றை மையமாக வைத்து நடமாடும் சேவை, விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் ஊடாக கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தல், பொதுநல அமைப்புகள் ஊடாகப் பொருளாதாரத்தை மேம்பாடு செய்தல், சமூக கலாசார ஆன்மீக வழிகாட்டல்களை வழங்குதல் பாடசாலை கலைத்திட்ட மேம்பாடு போன்றனவற்றூடாக இடைவிலகலை கட்டுப்படுத்த முடியும் என்பதுடன், இவ் ஆய்வானது சமூக ஆர்வளர்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் தமது செயற்திட்டங்களை அமைத்துக் கொள்வதற்கு துணையாகவும் அமையும்.

**உசாத்துணைகள்:**


01. Keeththaviny Gananasingam, Sithamparathan, Uthayakumar,(2014), “கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல்” Retrieved From: www.seu.ac.lk (accessed): 2021.02.02

02. Waseem Akram, W., Mazahir, SMM., Farshath, SLM., Insyraf, MNM., and Hidayathulla, MT., (2018), “அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர் இடைவிலகலும் அதற்கான காரணங்களும் - சம்புநகர் மற்றும் ஆலங்குளம் ஆகிய கிராமங்களை மையப்படுத்திய களஆய்வு”, Retrieved From: http://ir.lib.seu.ac.lk.handle/123456789/3404. (accessed): 2021.02.02

03. அருள்நேசன் அஜய், (2020), “கல்வியின் எதிர்கால தேவையும் கற்றல் பாதையின் முக்கியத்துவமும்” Retrieved From: https://www.neermai.com (accessed): 2021.02.04

04. இர்ஸாட், (2021.02.16) கிராம சேவகர், ஆலிம் நகர்.

05. கிருசாயிதன், (2017), “மாணவர்களின் இடைவிலகலுக்கான காரணங்களும் அதற்கான தீர்வுகளும்” Retrieved From: http://www.battinews.com (accessed): 2021.02.02

06. கோகிலாவனி, (2017), “பெரிய பிரச்சினையாக இன்னமும் உள்ள மாணவர் இடைவிலகல்” Retrieved From: https://www.tamilmirror.lk (accessed): 2021.02.02

07. சந்திரசேகரன், சோ. (2004), “கல்வி ஒரு பன்முக நோக்கு”, உமா பதிப்பகம், கொழும்பு-06.

08. திபாகரன், (2016), “மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகலும்” South Eastern University Arts Research Session - 2016.

09. Shamila Begum, M.S. Nafees, S.M.M. (2021), “பாடசாலை இடைவிலகலும் அதற்கான காரணங்களும்: அடம்பன் பிரதேசத்தின் சொர்ணபுரி கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு” Retrieved From: http://ir.lib.seu.ac.lk/handle/123456789/5680 (accessed): 2021.08.20

10. பிரியசகி. ச. (2020) “இலங்கையின் கல்வி வளர்ச்சியும் நவீன மாற்றங்களும்” Retrieved From: https://www.virakesari.lk (accessed): 2021.02.04

11. மாணவர் வரவு இடாப்பு, (2021.02.16), ஆலிம் நகர் அஸ்-ஸிபாயா பாடசாலை.

# இளம் வயதுப் பிரிவினரிடையே துரித உணவுகளின் பயன்பாடும்

## அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளும்.

**S.J.F. Farwin**
farwinfathima953@gmail.com

**N. Rasmiya**
rasmiyaniyas@gmail.com

**Independent Researchers,**
**Department of Geography, University of Colombo**



**1. முன்னுரை**

உலகமயமாக்கல் உணவு உற்பத்தியில் ஏற்படுத்திய பிரதான விளைவே துரித உணவாகும். 1990 களிலிருந்து துரித உணவு உற்பத்தி அதிகரிக்க தொடங்கியது. ஆரம்ப காலங்களில் அபிவிருத்தியடைந்த நாடுகளால் மாத்திரமே துரித உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இன்று துரித உணவு உற்பத்தியில் அபிவிருத்தியடைந்த நாடுகள், குறைவிருத்தி நாடுகள் என்ற பாகுபாடில்லாமல் பல நாடுகள் அதிகம் முதலீடு செய்கின்றன. குறிப்பாக மேற்கத்தய நாடுகள் இதில் முதலிடத்தைப் பெறுகின்றன. உலகம் முழுவதும் தொழிற்கழகங்களும், பன்னாட்டுக் கம்பனிகளும் தற்போது துரித உணவு உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றன. ஆபிரிக்க நாடுகளிலும் கூட துரித உணவுகளுக்கான உணவகங்கள் பல்தேசிய கம்பனிகளால் நிறுவப்பட்டுள்ளன. இலங்கையிலும் Macdonald's, Burger, Pizza Hut, Dinemore போன்ற உணவகங்கள் துரித உணவுகளை விற்பனை செய்யும் பிரதான மையங்களாக விளங்குகின்றன. நாட்டின் நகர்ப்புறங்களை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இத் துரித உணவகங்கள் இன்று கிராமப்புறங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வருகின்றன. சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என அனைத்து தரப்பினரும் துரித உணவுகளை விரும்பி உண்கின்றனர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் அதிகமாகத் துரித உணவை நுகர்பவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தேசிய சத்துணவுக் கழகத்தின் வரைவிலக்கணத்தின் படி துரித உணவு என்பது புரதம், விட்டமின், கனிச் சத்துக்கள் மிகக்குறைந்த அளவு அல்லது அறவே இல்லாத மிகுந்த உப்பும், கொழுப்பும் கொண்ட உணவுகள் ஆகும். மேற்குநாடுகளில் கெண்டக்கி பிறைட் சிக்கின், மக்டொனால்ட்ஸ் போன்ற உணவகங்களில் விரைவாக வழங்கப்படுகின்ற உணவுகளையே துரித உணவு என்கின்றனர். துரித உணவுகளில் விட்டமின்கள், கனியுப்புக்கள் சேர்க்கப்படுவதில்லை. மனித உடலின் ஆரோக்கியத்துக்கு உகந்ததாகவும் அவை சமைக்கப்படுவதில்லை. வெறுமனே சுவையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே துரித உணவுகள் சமைக்கப்படுகின்றன. இலாபத்தை பெறும் நோக்கில் மனித ஆரோக்கியத்திற்கு சவாலாக அமைகின்ற பலவகையான இரசாயனங்கள் துரித உணவுகளில் சேர்க்கப்படுகின்றன.

துரித உணவுகளில் சிட்ரிக் அமிலம், கொழுப்பு, அஜினமோட்டோ, நிறச் சாயங்கள், HFCS, Niacin, Monosodium Glumate போன்ற இரசாயனங்களே அதிகளவில் கலக்கப்படுகின்றன. துரித உணவுகளை உட்கொள்வதால் இந்த இரசாயனங்கள் மனித உடலினுள் சேர்ந்து பல்வேறு எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றது. பொதுவாக அனைத்து வகையான துரித உணவு வகைககளிலும் MSG (Mono Sadium Glautamate) எனும் இரசாயனப் பதார்த்தம் கலக்கப்படுகிறது. இந்த இரசாயனப் பதார்த்தத்தினால் மூளையினுடைய ஹைபோதலமஸ் பகுதி தூண்டப்படுகிறது. இன்சுலின், அட்ரினலின் சுரப்பதை ஹைபோதலமஸ் அதிகப்படுத்தி துரித உணவு உண்பதற்கான தூண்டுதலை அதிகரிக்கின்றது. அதிகமானவர்கள் அடிக்கடி துரித உணவகங்களை நாடிச் செல்வதற்கான காரணம் இதுவாகும். துரித உணவுகளில் சேர்க்கப்படும் அஜினோமோற்றோ, நிறச் சாயங்கள் போன்றன மனித சமிபாட்டுக் குடலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்த கூடிய துரித உணவு தொடர்பான இவ்வாய்வானது இன்று இளைஞர்களிடையே அதிகரித்துள்ள துரித உணவுப் பயன்பாட்டின் போக்கினை ஆய்வு செய்வதோடு துரித உணவுப் பயன்பாடானது மனித சுகாதாரத்தில் ஏற்படுத்துகின்ற இவ்வகையான பாதிப்புக்களைக் கண்டறியும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுகிறது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

மாறிவரும் நாகரிக வாழ்க்கை கோலமானது சமூகத்தில் இளம்வயது பிரிவினர்களுடைய நிலையையும் நடத்தையையும் மாற்றத்துக்குட்படுத்தியுள்ளது எனலாம். இவ்வாறான மாற்றம் இளம்வயதுப் பிரிவினரின் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையில் ஆரம்பகாலங்களில் உயர் வருமானம் படைத்தவர்களால் மட்டும் நுகரப்பட்டு வந்த துரித உணவுப் பழக்க வழக்கங்கள் இன்று வருமான குறைந்தவர்கள் மற்றும் வயது வேறுபாடின்றி அனைத்துப் பிரிவினரிடையையேயும் பொதுவான உணவு நுகர்வுப் பழக்கவழக்க நடவடிக்கைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அத்துடன் கிராமம், நகரம் என வேறுபாடு இன்றியும் சின்னச்சின்ன நகரங்களிலும் கூட இன்றைக்கு துரித உணவுகள் கடைகளில் சுறுசுறுப்பாக வியாபரம் செய்யப்படுகிறது. உண்ணுவதற்கு சுவையாக இருந்தாலும் இந்த துரித உணவுகளால் பல்வேறு நோய்களுக்கு ஆளாக்குகின்ற சாத்தியம் ஏராளமாக உள்ளதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

அந்த வகையில் இன்று ஏனைய வயதுப் பிரிவினர்களை விட இளம் வயது பிரிவினரே பல்வேறு நோக்கங்களுக்காக துரித உணவுகளையே அதிகம் நாடக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். ஒருவகையில் இது இவர்களின் தேவைக்கு ஏற்றாற்போல் வியாபாரத் தளங்களில் விற்கப்படுகின்ற போதிலும் இதனால் ஏற்படும் தாக்கங்கள் என்பது மறுபுறத்தில் தவிர்க்க முடியாததாகவுள்ளது. ஏனெனில் இவ்வாறு விற்கப்படும் துரித உணவுகள் குறைந்த ஊட்டச்சத்துக்கள் கொண்டனவாகவும் ஆரோக்கியமற்றதாகவும் காணப்படுகின்றன. அதனால் வாழ்க்கை முறை மாற்றத்தின் ஒரு அங்கமான துரித உணவு நுகர்வானது அவர்களிடையே நீண்ட மற்றும் குறுங்கால சுகாதார சீர்கேடுகளுக்கு சாதகமாக அமைந்துவிடுகிறது. குறிப்பாக எடுத்துக்காட்டுகின்றபோது இதனால் தொற்றா நோய்களால் பாதிக்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு தொற்றா நோய்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வரும் நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். அந்த வகையில் கடந்த சில பத்தாண்டுகளில் இலங்கை மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றமே தொற்றா நோய்களுக்கான காரணம் என அறியப்படுகின்றது. ஆகவேதான் வாழ்க்கை முறை மாற்றத்தில் ஒரு அங்கமாக நிகழக்கூடிய துரித உணவுப் பழக்கங்களின் மூலம் ஏற்படக்கூடிய சுகாதார சீர்கேடுகள் என்பது மக்களால் அறியப்பட வேண்டிய ஒன்றாகக் காணப்படுகின்றது. இதிலிருந்து மீள்வதன் ஊடாகவே எமது உடல் உள ஆரோக்கியத்தைப் பேண முடியும் எனும் ஆய்வுப் பிரச்சினையை மையப்படுத்தியே துரித உணவு நுகர்வுப் பழக்கங்களின் போக்கையும் அதனால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளையும் அடையாளப்படுத்தி இளம் வயதுப் பிரிவினர் இடையே ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வர வேண்டும் என்ற பின்னனியில் இவ் வாய்வானது முன்னெடுக்கப்படுகின்றது.

### 3. ஆய்வு நோக்கங்கள்

ஓர் ஆய்வினை கொண்டுசெல்ல ஆய்வு நோக்கங்கள் என்பது பிரதானமானதாக அமைகின்றது. அந்த வகையில் குறித்த தலைப்பிலான ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எடுத்தராயப்படுகின்றது.

#### 3.1 பிரதான நோக்கம்

- இளம்வயதுப் பிரிவினரிடையே துரித உணவு நுகர்வின் போக்கையும் அதனால் ஏற்படக்கூடிய சுகாதார சீர்கேடுகளையும் பகுப்பாய்வு செய்தல்.

#### 3.2 உப நோக்கங்கள்

- இளம்வயதுப் பிரிவினரிடையே துரித உணவு நுகர்விற்கான காரணங்களை கண்டறிதல்.
- துரித உணவு மூலம் ஏற்படக்கூடிய சுகாதார சீர்கேடுகளை பகுப்பாய்வு செய்தல்.

**ஆய்வு வினாக்கள்**

ஏனைய வயதுப் பிரிவினர்களைவிட இளம் வயதுப் பிரிவினரிடையே துரித உணவு நுகர்வுப் பழக்கமானது அதிகமாகக் காணப்படுகின்றது. ஆகவே அதனால் ஏற்படக்கூடிய சுகாதாரப் பாதிப்புகளை அடையாளம் கண்டு கொள்வது தொடர்பான இவ்வாய்வானது பின்வரும் வினாக்களை அடியொட்டியே அமைந்தது.


1. இளம் வயதுப் பிரிவினர் துரித உணவுகளை அதிகம் விரும்புவதற்கான காரணங்கள் யாவை?
2. வயதுப் பிரிவினர் இடையே காணப்படும் துரித உணவு நுகர்வுப் பழக்கவழக்கம் மூலம் எவ்வாறான சுகாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றன?

### 4. ஆய்வு முறையியல்

#### 4.1 தரவு சேகரிப்பு முறை

இவ்வாய்வில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் தரவு சேகரிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல்நிலைத் தரவுகளானது வினாக்கொத்து விநியோகம் மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்டது. நோக்க மாதிரியெடுப்பு முறையின் அடிப்படையில் துரித உணவினை நுகரும் இளம் வயதினர் பலர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடம் வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டது. வினாக்கொத்தானது திறந்த மற்றும் மூடிய வினாக்களை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டது. அதன்படி மொத்தமாக 50 நபர்கள் ஆய்வில் பங்கெடுத்து தரவுகள் தகவல்களை வழங்கினர். மேலும் துரித உணவினை உணவாகக் கொள்ளும் 08 இளைஞர்கள் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தரவுகளானது நூல்கள், ஆய்வுகள், ஆய்வுக் கட்டுரைகள், சர்வதேச ஆய்வுச் சஞ்சிகைகள், மற்றும் ஆவணங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் உத்தியோகப்பூர்வ இணையத்தளங்கள் மற்றும் பிரபல எழுத்தாளர்களின் நம்பத்தகுந்த இணையத்தளங்களின் மூலமாகப் பெறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



4.2 தரவுப் பகுப்பாய்வு


ஆய்விற்காகப் பெறப்பட்ட நம்பகமான முதலாம் நிலைத் தரவுகளானது அளவைசார், பண்பு சார் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. அளவை சார் பகுப்பாய்வானது கணினிப் பகுப்பாய்வு நுட்பங்களான Microsoft Excel ஐப் பயன்படுத்தி எளிய பகுப்பாய்வு முறைகளுக்கும் பண்புசார் பகுப்பாய்வின் மூலம் விபரண ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகள் வரைபுகள், படங்களும் மற்றும் அட்டவணைகளின் துணை கொண்டும் விபரிப்புகளாகவும் வடிவமைக்கப்பட்டு முன்வைக்கப்பட்டன.

**5. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

5.1 துரித உணவு நுகர்வு போக்கு

இவ்வாய்வானது இன்றைய சமூகத்தில் இளைஞர்களில் அனேகமானவர்கள் சுகாதாரச் சீர்கேடுகளைச் சந்திக்கக் காரணமான துரித உணவு நுகர்வுப் பழக்கவழக்கங்கள் தொடர்பாக ஆராய்கின்றது. அந்தவகையில் துரித உணவு நுகர்வில் அதிகம் ஈடுபடக் கூடியவர்கள் என்று நோக்கும்போது தெரிவு செய்யப்பட்ட ஆய்வு மாதிரிகளின் அடிப்படையில் பெண்களை விட ஆண்களே அதிகம் துரித உணவை நுகர்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

**பால் அடிப்படையில் துரித உணவு நுகர்வுப் போக்கு**





**மூலம் - கள ஆய்வு**

அந்த வகையில் ஆண்களில் குடும்பங்களை விட்டு வெளி பகுதிகளில் பணிபுரிதல், அதிகளவு நட்பு வட்டாரங்கள், நேரச்சிக்கனம் போன்றன அதிகமான அளவில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக காணப்படுகின்றன. புவியல் ரீதியாக துரித உணவு நுகர்வுப் பழக்கங்களை ஆராயும்போது கிராமப்புறங்களை விட நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் அதிகம் கூடியவர்களாக காணப்படுகின்றனர். குறிப்பாக இதில் விருத்தியடைந்த உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்பம் போன்ற நகர்ப்புறச் சூழல் அமைப்பானது பிரதான செல்வாக்கு செலுத்தக் கூடிய காரணிகள் எனவும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இளைஞர்கள் துரித உணவுகளை வாங்கும் போக்கு தொடர்பாக ஆராய்கின்ற போது தினமும் வாங்க கூடியவர்களே அதிகம் காணப்படுகின்றனர். இவர்கள் தமது பகல் உணவு, இரவு உணவு, இடை உணவு போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாங்கக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். இதில் மாதம் ஒருமுறை வாங்கக் கூடியவர்களே குறைவான வீதத்தை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

**துரித உணவு நுகர்வு கோலம்**



மூலம் - கள ஆய்வு

ஆகவே, இளைஞர்களின் துரித உணவு நுகர்வுப் பழக்கமானது பல்வேறுபட்ட சமூக சூழலியல் காரணிகளால் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதைக் குறிப்பிட முடியும்.

### 5.2 துரித உணவு நுகர்வில் செல்வாக்கு செலுத்தக் கூடிய காரணிகள்

இன்றைய இளைஞர்களால் அதிகளவாக துரித உணவானது நுகரப்படும் நிலையில் அதன் மீது பல்வேறு தனிப்பட்ட சமூக சுற்றுப்புறக்காரணிகள் செல்வாக்கு செலுத்தக் கூடியனவாக காணப்படுகின்றன. அந்த வகையில் செல்வாக்கு செலுத்தக் கூடிய காரணிகளை மூன்று வகையாக பிரிக்கலாம்:

- **தனிப்பட்ட காரணிகள்:-** ஒரு நபர் துரித உணவுகளை நுகர்வதில் அவருடைய சுய காரணிகள் செல்வாக்குச் செலுத்துமாயின் அவை தனிப்பட்ட காரணங்களாகும் இது ஒருவரின் விருப்பு வெறுப்பு சார்ந்தவையாக அல்லது தேவைகள் சார்ந்தவையாக காணப்படலாம். உதாரணமாக ஒரு நபர் தன்னுடைய வேலைப்பளுவினால் துரித உணவுகளை அவரது இலகுவின் பொருட்டு வாங்குதலாகும்.

- **சூழலியல் காரணிகள்:-** ஒரு இளம் வயதுப் பருவத்தினர் துரித உணவுகளை வாங்குவதற்கு தன்னுடைய சுய காரணங்களுக்கு அப்பால் சுற்றுப்புறச் சூழலும் செல்வாக்குச் செலுத்துமாயின் அவ்வாறான காரணிகளே இதனுள் அடங்கும். உதாரணமாக இருப்பிடம் குறிப்பிடதக்க ஒன்றாகும். அதாவது கிராமப்புற வாசிகளாக இருக்கும் இளம்வயதினரை விட இன்று நகர்புறவாசிகளாக இருக்கும் இளம்வயது பிரிவினரிடையே அதிகளவிலான துரித உணவு நுகர்வினை காணக்கூடியதாக உள்ளது. ஆகவே சூழலியல் காரணியான இருப்பிடம் என்பது கூட இன்று துரித உணவு நுகர்வில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஒன்று எனலாம்.

- **சமூகக் காரணிகள்:-** இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள சில சமூகவியல் மாற்றங்கள் துரித உணவு நுகர்விற்கான உந்துதலாக அமைகின்றன. வேலை நேரத்தை நீடிபப்பு, பெண்கள் வேலைக்குச் செல்லல் போன்ற சமூகப் போக்குகள், இதில் சிலவாகும்.

இவ்வாறான பிரிவுகளுக்கு அப்பால் பொதுவான ஒரு வடிவத்தில் இளம்வயது பிரிவினரிடையே துரித உணவுக்கான காரணங்களை பகுப்பாய்வு செய்கின்ற போது துரித உணவுகளிடம் இருக்கும் சில தனிப்பட்ட பண்புகளும் காரணங்களும் இளம்வயது பிரிவினரை அதன்பால் ஈர்ப்பதற்கு செல்வாக்கு செலுத்துகின்றன. அந்த வகையில் தரவு சேகரிப்பின் போதான கலந்துரையாடலின் போது இளம் வயது பிரிவினரிடையே இருந்து சில பொதுவான காரணங்கள் முன்வைக்கப்பட்டு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டன அவ்வாறான காரணிகள் பின்வருமாறு:

#### சுவை

இன்று வீடுகளில் சமைக்கப்படும் ஆரோக்கியமான உணவுகளை விட அதிகளவில் இளம்வயது பிரிவினரால் நுகரக்கூடிய ஒன்றாக துரித உணவுகள் காணப்படுகின்றன. இவ்வாறு நுகரப்படுகின்றமைக்கு துரித உணவின் சுவை என்பது ஒரு காரணியாக இருக்கிறது என்பதாகவும் அடையாளப்படுத்தபடுகிறது. துரித உணவுகள் இன்று பல்வேறு வடிவங்ளில் வேறுபட்ட சுவைகளில் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக அதிகளவு சக்தி, இனிப்பு மற்றும் உப்பு, உடையதாகவும் குறைந்த அளவு நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் நார்ச்சத்து ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றன (Majabadi et al.,2016). ஆகவே வடிவங்களுக்கு ஏற்ப மாறுபடும் சுவையானது இளம்வயதுப் பிரிவினரை ஈர்க்கின்றது.

#### நேரம்

நமது அன்றாட வாழ்க்கையில் துரித உணவுகளைத் தேர்ந்தெடுப்பதில் நேரம் ஒரு முக்கிய காரணியாகத் தெரிகிறது. நவீன வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் மதிப்புமிக்கதாகவும் முக்கியமானதாகவும் கருதப்படுகிறது. அதன் விளைவாக, எல்லோரும் வேலை, பொழுதுபோக்கு, அல்லது குடும்பத்திற்கு என கூடுதலான நேரத்தைத் தேடுகிறார்கள். இதனால் நேரத்தைச் சேமிக்கும் முறைகளில் ஒன்று துரித உணவு சேவைகளாகும்.

அதாவது துரித உணவுகள் என்பவை எளிமையாகவும் இலகுவாகவும் குறுகிய நேரத்தில் சமைக்கக் கூடியதாகவும் இருப்பதால் அவை மக்களின் நேரத்தை சேமித்து கொடுக்கின்றன. இதனாலேயே இளம்வயது பிரிவினரால் அதிகம் விரும்பப்படும் ஒன்றாக இருக்கின்றது ஏனைய உணவுகளை போன்று அதிக நேரம் காத்திருக்க கூடிய வாய்ப்புகளிலிருந்து தவிர்க்கப்பட்ட ஒன்றாக துரித உணவுகள் காணப்படுகின்றன.

### குடும்ப மற்றும் நட்பு உறவு வட்டாரங்கள்.

இன்று இளம் வயதினர் கொண்டுள்ள உறவு நிலைகளும் குறிப்பாக நட்பு வட்டாரங்கள் துரித உணவு-நுகர்வுக்கான தூண்டுதல் காரணிகளாக வெளிப்படுத்தப்பட்டன, கலந்துரையாடலின் போது பெறப்பட்ட முடிவுகளின் படி இளம் வயதுப் பிரிவினர் என்பவர்கள் அதிக அளவிலான நண்பர் கூட்டத்தை கொண்டிருப்பவர்களாகக் கருதப்படுகின்றனர். நண்பர்களின் ஒன்றுகூடலின் போது சில உணர்வு நிலைகளின் வெளிப்பாட்டிற்கு இன்று துரித உணவுகள் என்பவை சாதாரண ஒரு விடயமாகிவிட்டன. அதனால் இளம்வயதுப் பிரிவினர்கள் அதிகளவிலான துரித உணவுகளுக்கு ஆளாகின்றனர். ஆகவே வைபவங்கள்இகொண்டாட்டங்கள் (பிறந்தநாள், ஆண்டு விழா), பரிசளிப்புகள் என்ற பெயரில் வழங்குவதற்கும் மற்றும் குடும்ப உல்லாசப் பயணங்களின் போதும் துரித உணவுகளே அதிகம் நுகரப்படுகின்றன.

### சமூக மயமாக்கலை ஊக்குவித்தல்


துரித உணவுகள் என்பவை இன்று இளம்வயதுப் பிரிவினர்களின் சமூகமயமாக்கலை ஆதரிக்கின்றன. குறிப்பாக துரித உணவுப் பழக்கங்களானவை நண்பர்கள் மற்றும் குடும்பங்களுடன் வெளியில் சென்று தன்னுடைய நேரங்கழித்து குடும்ப உறுப்பினர்களுடன் நண்பர்களுடனும் சமூகமயமாக்கலுக்குற்படுவதற்கான வாய்ப்பினை வழங்கக் கூடிய ஒரு வழிமுறையாக காணப்படுவதால் இதுவும் இன்று இளம்வயது பிரிவினர் அதிகளவிலான துரித உணவு நுகர்வு பழக்கங்களுக்கு ஆளாவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

### வாழ்க்கை முறை மாற்றம்

வாழ்க்கைமுறை மாறுவதும், ஒன்றாகச் சாப்பிடும் குடும்பப் பாரம்பரியத்தை இழப்பதும் இளம்வயதுப் பிரிவினரிடையே துரித உணவுகளின் பிரபலம் அதிகரிக்கக் காரணமாக இருக்கலாம். (Jahan et al.,2020). ஆரம்பகாலங்களில் நகர்ப்புறங்களில் அதிகளவில் பிரபலமடைந்து வந்த துரித உணவுப் பழக்கங்கள் இன்று மூலை முடுக்கு எங்கும் பரவலடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அந்தளவிற்கு இன்று இளம் வயது பிரிவினருடைய வாழ்க்கை முறைகள் மாற்றமடைந்து நுகர்வுக் கோலங்களையும் மாற்றியுள்ளன. ஆரம்பகாலங்களில் இளம்வயது பிரிவினர் என்பவர்கள் குடும்பங்களில் தங்கி வாழ்ந்தன் காரணமாக அவர்கள் வீடுகளில் சமைக்கக் கூடிய ஆரோக்கியமான உணவுகளை குடும்பங்களுடன் இணைந்து உண்ண கூடியவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் காலப்போக்கில் இவர்கள் அவ்வாறான பாரம்பரிய பழக்கங்களில் இருந்தும் விடுபட்டு வாழ்க்கை முறை மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக அவர்கள் குடும்பங்களை விட்டு தனியே சென்று வேலை செய்யக் கூடியவர்களாக இருப்பதால் கூட இன்று இந்த பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இல்லாமல் போயியுள்ளன. இதனால் அவர்கள் அதிக அளவிலான துரித உணவுகளை அவர்களின் இலகுவின் பொருட்டு நுகரக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.

## 5.3 துரித உணவு நுகர்வினால் ஏற்படும் பாதிப்புக்கள்

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி தொற்றா நோய்களின் அதிகரிப்பிற்கான முதல் காரணம், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கமாகும். மனித உடல் வளர்ச்சிக்குத் தேவையான விட்டமின்கள், கனியுப்புக்கள், நார்ச்சத்துக்கள், ஏனைய போசணைக் கூறுகளைக் கொண்டிராத இரசாயனங்களையும் சுவையூட்டிகளையும் மாத்திரமே உள்ளடக்கியுள்ள உணவுகள் ஆரோக்கியமற்ற உணவுகளாகும். அதனடிப்படையில் துரித உணவுகள் ஆரோக்கியமற்ற உணவுகளாகவே கருதப்படுகின்றன. அதிகமான தொற்றா நோய்களுக்கும் அதன் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்கும் துரித உணவு நுகர்வே காரணமாக அமைவதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறான பாதிப்புக்கள் ஆய்வில் பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றன.




**நீரிழிவு**

துரித உணவுகளில் அடங்கியிருக்கும் கொழுப்பு, சீனி போன்ற பதார்த்தங்கள் நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன. துரித உணவினை அதிகமாக நுகரும் இளம் வயதினருக்கு இளமைப் பருவத்திலேயே இந்நோய் ஏற்படுகின்றது.

**அதிக உடற் பருமன்**

அனைத்துத் தரப்பினரிடையேயும் துரித உணவை உட்கொள்வதால் ஏற்படுகின்ற பொதுவான பாதிப்பாக உடற்பருமன் அதிகரித்தல் காணப்படுகின்றது. உடற் பருமனை அதிகரிக்கச் செய்கின்ற கலோரி, சீனி, கொழுப்பு போன்றன துரித உணவுகளில் அதிகம் சேர்க்கப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும். மேலும் நீரிழிவு நோய், இதய நோய்கள், மூட்டு வலி போன்ற நோய்களுக்கான ஆரம்பமாகவும் அதிக உடற் பருமன் அமைந்து விடுகின்றது.

**ஞாபக சக்திக் குறைபாடு**

துரித உணவை உட்கொள்வதன் மூலமாக அதிகளவு சீனியும் கொழுப்பும் உடலில் சேர்கின்றது. இது மூளையின் ஞாபக சக்திக்குப் பொறுப்பான கலங்களைப் பாதிப்படையச் செய்கின்றது. American Journal of Clinical ரேவசவைழைெ மேற்கொண்ட ஓர் ஆய்வில் அதிகம் துரித உணவினை நுகர்பவர்கள் மிகக் குறைந்தளவிலான ஞாபக சக்தியையே கொண்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

**உயர் இரத்த அழுத்தம்**

துரித உணவுகள் அதிகமாக பார சோடியத்தையே உள்ளடக்கியுள்ளன. இம் மூலகமானது இரத்த அழுத்தத்தை தூண்டக் கூடியது. இதனால் அதிகம் துரித உணவுகளை உட்கொள்பவர்கள் உயர் குருதி அமுக்கம், இதய செயலிழப்பு போன்ற பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

**கலோரிப் பெறுமானம் அதிகரித்தல்**

மனிதனுக்குத் தேவையான கலோரிப் பெறுமானத்தை விட துரித உணவில் அதிகமான கலோரிகள் சேர்க்கப்படுகின்றன. ஹோட்டல்கள், துரித உணவகங்களில் உணவை நுகர்பவர்கள் நாளாந்தம் தேவைக்கதிகமான கலோரிகளை உள்ளெடுப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**சுவாசப் பிரச்சனைகள்**

மிகையான கலோரிப் பெறுமானமானது உடல் எடையை அதிகரிக்கச் செய்வதோடு நாளாந்த செயற்பாடுகளின் போது விரைவாகக் களைப்பையும் ஏற்படுத்தும். இவைகள் தொடரும் போது நாளடைவில் சுவாசப் பிரச்சனைகளும் தோற்றம் பெறும்.

**பற் பிரச்சனைகள்**

துரித உணவுகளில் அடங்கியுள்ள காபோவைதரேற்றுக்களும் சீனியும் பல் வரிசையைப் பாதிக்கின்ற அமிலத்தைச் சுரக்கின்றன. இதன் மூலமாக பற்களில் துவாரங்கள் ஏற்படுவதோடு பற் சிதைவும் ஏற்படுகின்றது.

**மன அழுத்தம்**

மனிதனில் இயற்கையாகச் சுரக்கின்ற ஹோர்மோன்கள், சுரப்புகள் போன்றன துரித உணவுகளில் அடங்கியுள்ள இரசாயனங்களால் மாற்றமடைந்து மன அழுத்தங்களை உண்டாக்கிறது.

**முடிவுரை**

இன்று நவீனமயமாக்கலின் தாக்கங்கள் அனைத்துத் துறைகளிலும் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. உணவு உற்பத்தித் துறையில் மரபணுத் தொழில்நுட்பம் மற்றும் புதிய வகை உத்திகள் புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு மாற்றங்கள் உணவு உற்பத்தியில் ஏற்பட்டுள்ளன. அதில் பிரதானமான மாற்றம் துரித உணவாகும். துரித உணவு நுகர்வு உலகில் வேகமாகப் பரவி வருகின்றது. இன்றைய உலகில் துரித உணவை உணவாகக் கொள்ளும் மக்களே அதிகம் காணப்படுகின்றார்கள். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் துரித உணவை அதிகம் நுகர்கின்றனர். இதனால் இன்றைய இளைஞர் சமுதாயம் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்கிறது. தலைவலி, மூட்டு வலி, தோல் நோய்கள், ஞாபக சக்தி குறைதல், பற் பிரச்சனைகள் போன்ற நோய்களுக்கு அன்றாடம் உள்ளாகுவதோடு நீரிழிவு, புற்றுநோய், நரம்பு பாதிப்பு, இதய பிரச்சினைகள், சுவாசப் பாதிப்பு, இரைப்பை அழற்சி, அதிக உடற் பருமன், உயர் குருதி அமுக்கம் போன்ற பல்வேறு அபாய நோய்களுக்கும் இளைஞர் சமுதாயம் உள்ளாகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி தொற்றா நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணமாக முறையற்ற உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மையுமே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆரோக்கியமான வாழ்விற்குத் தகுந்த உணவு முறையையும் உடற்பயிற்சியையும் உலக சுகார ஸ்தாபனம் முன்வைத்துள்ளது. பெரும்பாலும் துரித உணவுகளில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் இன்றி ஊளைச் சதையே பெருகுகின்றது. இதனால் துரித உணவை உணவாகக் கொள்ளும் அதிகமான இளைஞர்கள் நோயாளிகளாக வைத்திய சாலைகளை அதிகம் நாடுகின்றனர்.

உலகம் முழுவதும் உள்ள மக்களின் பண்டைய உணவுக் கலாசாரத்தை துரித உணவுகள் மாற்றியமைத்துவிட்டன. பல்தேசியக் கம்பனிகள் துரித உணவு வகைகளை அறிமுகப்படுத்தி நம் மக்களை அடிமைகளாக மாற்றி வருகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்தி செய்யப்பட்ட தனிச்சுவையுடன் கூடிய உணவுவகைகள் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றன. இந்த துரித உணவுகளில் சுவைதான் அதிகமாக இருக்குமே தவிர உடல் நலத்திற்குத் தேவையான சத்துக்கள் இருப்பதில்லை. இவற்றில் சேர்க்கப்படும் இரசாயனப் பொருள்களினால் உடல் நலத்திற்கு தீமையே விளைகின்றது. எனவே தேசத்தின் எதிர்காலச் சந்ததிகளாகிய இளைஞர்கள் துரித உணவுகளுக்கு அடிமையாகி நோயாளிகளாக மாறுவதைத் தடுத்து ஆரோக்கியமான உணவுப்பழக்கவழக்கங்களை கைக்கொண்டு ஆரோக்கியமான இளைஞர் சமுதாயமாக மாற வேண்டும்.



உசாத்துணைகள்


01. Jahan,I.,Karmakar,P.,Hossain,M.,Jahan,N.,&Islam,M.Z.(2020). FastFood Consumption and its Impact on Health. Creative Commons Attribution. Pp 2520-5048 (online).

02. Islam,M.M.S.( 2020). The Impact of Fast Food on Our Life: A Study on Food Habits of Bangladeshi People. Global Journal of Medical Research: K Interdisciplinary Volume 20(8).

03. Garcia,G.,Sunil,T., & Hinojosa, P.(2012). The fast food and obesity link: Consumption patterns and severity of obesity. Obesity Surgery, (22)5, 810-818.

04. Gómez-Pinilla,F.(2008).Brain foods: The effects of nutrients on brain function.

05. Block JP et al(2013).Consumers' estimation of calorie content at fast food restaurants: Cross sectional observational study.

06. (2009).High-fat diet afects physical and memory abilities. Retrieved from https://cam.ac.uk/research/news/high-fat-diet-affects-physical-and-memory-abilities

07. Carbohydrates and blood sugar.(n.d.). Retrieved From https://hsph.harvard.edu/nutritionsource/carbohydrates/carbohydrates-and-blood-sugar/




# இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகம் ஓர் பகுப்பாய்வு



**M. Ibathur Rahman | M.H. Fathima Roshini**
**M.A. Fathima Anfaal**
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka.

**ஆய்வு சுருக்கம்**

பெண் அரசியல் என்பது ஒரு ஜனநாயக நாட்டின் நல்லாட்சிக்கான அடித்தளமாகும். ஏனெனில் நல்லாட்சி என்பது பெண்களின் சமமான பங்கேற்றலுடன் தீர்மானங்கள் எடுக்கப்படுவதாகும். அதன் ஏனைய குணாம்சங்களான ஒளிவுமறைவற்ற தன்மை,பொறுப்பேற்றல் போன்றவற்றை பூரணப்படுத்துவதற்கு பெண்களின் அரசியல் பங்களிப்பு அவசியமாகும். அந்த வகையில் இவ்வாய்வானது இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகம் பற்றி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் பெண்களின் பங்களிப்பானது அரசியல் ஊடாக இருக்கும் பட்சத்தில் அதிகாரத்துவம் தானாக கிடைக்கும். என்றாலும் பெண்கள் அரசியல் அமைப்புக்களில் செயற்படும் நிலைமையை ஒரு சமூக இயல்பாக கருதுவதில் பல்வேறு இடைவெளிகள் காணப்படுகின்றன. இவ்விடைவெளிகள் இல்லாமல் ஆக்கபடவேண்டும். இதனை ஆய்வு பிரச்சினையாக கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கங்களாக இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகத்தை பகுப்பாய்வு செய்து, பெண்களின் அரசியல் பங்குபற்றல் வளர்ச்சியை இணங்கண்டு பெண் அரசியலின் சவால்களை பிரதான தலைப்பினூடாக தெளிவாக ஆராய்ந்துள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையை கொண்டதாக அமைந்துள்ளது.இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள்,ஆய்வு சஞ்சிகைகள், இணையப்பக்கங்களின் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின் ஊடாக இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றல் வளர்ச்சியானது எத்தகைய சவால்களுக்கு மத்தியிலும் நிகழ்துள்ளது. எனவே இந்த ஆய்வின் மூலம் இன்னும் பல பெண்கள் அரசியல் அதிகாரத்துவத்தை எத்தணிக்க முனைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** பெண்ணியல் வாதம், அரசியல் நடத்தை, பால்நிலை

**அறிமுகம்**

மானுட வரலாறு என்பது பெண்களால் உருவானது. ஆனால், மிக நீண்ட உலக வரலாற்றில் பெண்களுக்கான இடம் பொதுச் சமூக வெளியில் வழங்கப்படவில்லை. நவீனச் சிந்தனைகள் மேலெழுந்து வந்தபோது வரலாறு, அரசியல், தத்துவம், பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றில் பெண்களுக்கான இடம் என்ன என்பது குறித்த காத்திரமான விவாதங்கள் எழுந்தன. அதுவரை எழுதப்பட்ட வரலாறு, இலக்கியம், உருவான சமூகக் கட்டமைப்பு, மதம், சடங்குகள் என எல்லாவற்றையும் பெண்களின் நோக்கில் கேள்வி எழுப்புவதும் விமர்சிப்பதும் வழக்கமாயின. சாதி, மதம், வர்க்கம் எனப் பல்வேறு வடிவங்களில் தொடரும் அதிகாரத்தின் சுமை பெண்கள் மீதுதான் அதிகம் இறங்குகிறது.

எனவே, பெண்களுக்கான விடுதலையும் பெண்களுக்கான உரிமையும் எல்லாச் சமூக அதிகாரங்களையும் கேள்விகேட்பதின் வழியாகவே நிலைபெற முடியும் என்ற புரிந்துணர்வும் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே அரசியல் வெளியில் பெண்களுக்கான இடத்தை கோரி நிற்கும் கருத்தியல் போக்குகள் சமகால சமூகவியல் மற்றும் ஏனைய துறைகளில் ஆக்கிரமிப்பு செய்யத் துவங்கின. குறிப்பாக சொல்வதெனின் பெண்ணியல் வாத கருத்தியல்கள் (பெண்ணியம் என்பதை ஒற்றைத் தன்மை கொண்டதாக வரையறுக்க முடியாது என்பதால் அதனை பன்மைச் சொல்லாடலாக பிரயோகம் செய்யப்படுகிறது.) தமது பிரதான தத்துவார்த்த அடிப்படையாக பெண்களின் அரசியல் பங்குபற்றலை உறுதி செய்தவதையும் அதற்கான சவால்களை பல்வேறு மட்டங்களிலான மறு வாசிப்புக்களின் மூலம் எதிர்கொள்வதையும் இங்கே குறிப்பிட முடியும்.

மறுபுறம் சமகால அரசியல் உரையாடல் தளங்களில் தனியான அரசியல் கருத்தியல்களில் ஒன்றாக விருத்தி அடைந்து இருக்கும் அரசியல் நடத்தைவாதம் (Political behaviourism) மிக அண்மைக்காலங்களில் தனது ஆய்வுப் பொருளாக கருதுவது அரசியல் வெளியில் பிரசைகளின் பங்கேற்பு பற்றியதான ஆய்வையாகும். இதன் பகுதிகளில் ஒன்றாக முன்னெடுத்துச் செல்லப்படும் ஒரு உரையாடல் தான் " அரசியலில் பெண்களின் பங்கேற்பு" என்பதாகும். எனினும் பிரசைகளின் அரசியல் பங்கேற்பு பற்றிய நடத்தை வாத அணுகுமுறை (Behaviourism approach) பெரும்பாலான வேளைகளில் விஞ்ஞானத் தரவுகளை மாத்திரம் மையமாகக் கொண்டு சுழல்வதால் அரசியலில் பெண்களின் பங்கேற்பு தொடர்பான நியாயபூர்வமான தர்க்கங்களையும், கண்ணோட்டங்களையும் அதனால் வெளிப்படுத்த முடிவதில்லை என்ற பலத்த விமர்சனமும் பெண்ணியல் வாதிகள் மத்தியில் நிலவுகிறது. இத்தகைய விமர்சனங்கள் நேர்மறைவாதம் (Positivism) மற்றும் நிகழ் தோற்றவியல் (Phenomenologism) ஆகிய மெய்யியல் ஆய்வுகளின் பின்னணியில் இருந்து வருபவை ஆகம்.

பெண்களின் அரசியல் பங்குபற்றலை கட்டுப்படுத்தும் பல்வேறு காரணங்களை பொதுவில் இனங்காண முடியும். பால்நிலை சாராம்சப்படுத்தல்களை கொண்ட பொது உளவியல், தொடர்ந்தும் நிபந்தனையற்ற கட்டுப்பாட்டை வலியுறுத்தி நிற்கும் ஆணாதிக்க மனோபாவம், அரசியல் பங்கேற்பு தொடர்பிலான கருத்துருவிற்கு பொது ஏற்பை பெற முடியாமை மற்றும் சமய மரபுகளில் காணப்படும் வாசிப்பு முறைமைகள் ஆகியவற்றை உதாரணமாக கொள்ள முடியும்.

**ஆய்வு நோக்கம்**

பிரதான நோக்கம் : இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகத்தை பகுப்பாய்தல்.

**துணை நோக்கம்**

இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றல் வளர்ச்சியை அனுமானித்தல் பெண்களின் அரசியல் பங்குபற்றலில் உள்ள சவால்களை கண்டறிதல் பெண்களின் அரசியல் பங்குபற்றலை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்பு ரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையினை கொண்டதாக அமைந்துள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளான ஆய்வு சஞ்சிகைகள், நூல்கள், இணையப் பக்கங்களை கொண்டு தரவுகள் திரட்டப்பட்டு பண்பு மற்றும் எண் ரீதியாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

தற்கால உலகில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கருத்தாடல்களில் ஒன்றாக பெண்களைப் வலுப்படுத்தல் என்ற அம்சம் காணப்படுகிறது. அந்தவகையில் இன்று பெண்கள் அரசியல், பொருளாதார, சமூக ரீதியான மாற்றங்களுடன் வலுப்படுத்தப்பட வேண்டும். இதற்கிடையில் சமூகத்தில் ஏற்படும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்க பெண்கள் முன்வந்து அரசியல் அதிகாரங்களில் முன்னிற்கும் போது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் சுலபமாக கிடைக்கும். என்றாலும் இவ்வாய்வுக்கான பிரச்சினையாக நாம் கருதுவது பெண்கள் அரசியல் அமைப்புகள் மற்றும் அதன்

பொது வெளியில்பங்கேற்கும் நிலைமையை ஒரு சமூக இயல்பாக கருதிவதில் பல்வேறு இடைவெளிகள் காணப்படுகின்றன. எனவே இந்த இடைவெளிகளை இல்லாமல் செய்யும் முகமாகவும், இலங்கையில் பெண்களின் அரசியல் அரசியல் வகிபாகத்தை தெளிவுபடுத்தவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**கடந்த கால இலக்கிய மீளாய்வு**

பொதுவாக பெண்களின் அரசியல் வகிபாகம் குறித்த கலந்துரையாடல்கள், ஆய்வுகள் தமிழ் மொழியிலும், ஆங்கிலம் மற்றும் பல மொழிகளிலும் காணப்படுகின்றன. என்றாலும், அதன் முழுப்பார்வை சமூகவியலின் ஊடாக ஆராய்வது, மற்றும் சவால்களின் தன்மைகள் மயக்கமான நிலையிலேயே காணப்பட்டது. எனவே, இத் தலைப்புத் தொடர்பான வரலாற்றுக் கண்ணோட்டத்தையும் பொதுத்தேர்ச்சிகளும் பெறப்பட்டது.

சரவணன் .என் எழுதிய இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும் என்ற நூலில் பிரதான மையமாக பெண் அரசியல் பற்றிய விழிப்புணர்வு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று கஷ்டப்படுகின்ற சமூகத்திற்கு பெண்களின் அதிகாரத்திவம் அவசியம் எனும் பாணியில் நூல் செல்கிறது. இன்னும் பெண்களின் அரசியல் பங்குபற்றலின் குறுக்கு வெட்டு முகத் தோற்றங்கள் மலர் காணப்பட்ட ஏற்றத்தாள்வான அம்சங்கள் முதலான பிரச்சினைகளை சமூகவியல் பார்வையில் விளக்கியது சிறப்பிற்குரிய விடயமாகும். மேலும் வரலாற்றுவியல் ஆய்வாக இவ்வாய்வு தொகுக்கப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் வகிபாகம் பற்றிய விளிப்பு மற்றும் வரலாற்று நோக்கு சம்பந்தமானவை இந்நூலில் பெறப்பட்டது.

Kribamune, Srima. Women and politics in Sri Lanka - a comparative perspective என்ற ஆய்வு நூலில் இலங்கையில் பெண்களின் அரசியல் வகிபாகத்தை ஒப்பிட்டு நோக்கி ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வானது தலைப்பு தொடர்பான போது கண்ணோட்டத்தை தந்தது. என்றாலும் சிறுபான்மை இனப் பெண்களின் அரசியல் பங்குபற்றல் பற்றி கூடியளவு கூடிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குமாரி ஜெயவர்த்தனா எழுதிய மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும் என்ற மொழிபெயர்ப்பு நூலில் மூன்றாம் உலக நாடுகளில் இடம்பெற்ற தேசிய அரசியல் எழுச்சி தேசிய வாத இயக்கங்களின் வளர்ச்சி, இவற்றுக்கு இணையாக பெண்ணிய அரசியல், பெண்களின் அரசியல் பங்குபற்றல் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

Drude debberubt and josefa fransisco, gender governance democracy: women in politics என்ற நூலில் வெவ்வேறு தேர்தல் முறைமைகளின் கீழ் பெண்களின் அரசியல் பிரதினிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான தந்துரோபாயங்களை மிக விரைவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சமகால பெண்களின் அரசியல் அரசியல் சவால்களையும் அதனை முகம் கொடுக்கும் பாங்கையும் விளக்கியுள்ளார். இந் நூல்களில் இருந்து இவ்வாய்வுக்கான சில தரவுகளையும், ஒரு பொது நோக்கையும் எடுத்துக் கொண்டதன்பிற்பாடு இவ்வாய்வானது பிரதானமாக மூன்று மையமாக பிரித்து ஆராயப்படுகின்றது.


**1. இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலின் வளர்ச்சி**

உலக நாடுகள் முழுவதிலும் ஜனநாயக ஆட்சியை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டபோதே பிரதிநிதித்துவ அரசியலின் இன்றியமையாத தன்மை உணரப்பட்டுவிட்டது. இதனாலேயே, நவீன ஜனநாயகம் ஆனது பிரதிநிதித்துவ ஜனநாயகமாக அழைக்கப்படுவதாக கலாநிதி கனகைய்யா இரகுநாதன் தெரிவித்துள்ளார். மேலும், அப் பிரதிநிதித்துவ ஜனநாயக அரசியலின் கருவியாகவே தேர்தல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இத்தகைய நிலையில் பிரதிநிதித்துவ அரசியலில் பெண்களின் பங்குபற்றல் என்பது மிக குறைவாகவே உள்ளது. உலகளவிலான பாராளுமன்றங்களில் பெண்களுடைய வகிபாகம் தொடர்பாக “இண்டர் பார்லிமெண்டரி யூனியன்” ஆய்வறிக்கையில் 1995ம் ஆண்டளவில் 11.3% ஆக இருந்த பெண்களின் பங்குபற்றல் 2020ம் ஆண்டில் 24.9% ஆக உயர்ந்திருக்கின்றது. குறிப்பாக பொலிவியா, ஆஸ்திரியா, ஸ்வீடன், பின்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல், நியூசிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இம் மாற்றத்தை கணிசமான அளவு அவதானிக்கலாம்.

இந்நிலையில், இலங்கை அரசியலில் பெண்களுடைய ஆர்வம் மற்றும் பங்குபற்றுதல்கள் தொடர்பில் நோக்க வேண்டியது இன்றியமையாதது. உலக தர வரிசையில் பெண்களது அரசியல் பங்குபெறல் கணிப்பீட்டின் படி நூற்றி எழுபத்தி ஏழாவது இடத்தில் இலங்கை உள்ளது. இலங்கையில் சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்பப் தற்கான அழுத்தங்களை வழங்க வேண்டுமாக இருந்தால் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவங்கள் எந்த அளவுக்கு அவசியமானவையே, அதே போல் தான், பெண்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு, பெண்களின் பிரதிநிதித்துவம் அவசியமாகும்.


இலங்கையை பொறுத்தவரை பெண்களின் சனத்தொகையானது 52.01 வீதம் காணப்படுகினற்து. (Gender statistics, 2020). 2015 இல் தெரிவான பெண் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது 2010 இல் தெரிவான 13 என்ற எண்ணிக்கையினையே பிரதிபலிக்கின்றதே தவிர இவற்றில் அதிகரிப்பு ஏற்படவில்லை. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் கடந்த ஆட்சியில் 13 பெண் உறுப்பினர்களே உள்ளமை இலங்கையில் பெண் அரசியல் பங்குபற்றலின் ஆர்வமின்மையை எடுத்துக்காட்டுகிறது. (Hand book of Parliament, 2017). இதனடிப்படையில் பார்க்கும் போது மொத்த பிரதிநிதிகளின் விகிதாசார அடிப்படையில் பெண் பிரதிநிதிகளின் விகிதாசாரமானது பாராளுமன்றத்தில் 6 சதவீதத்திலும் குறைவாகவே காணப்படுகின்றது. 2020 தேர்தலில் சுமார் 5.38 சதவீதம் பெண்கள் மாத்திரமே பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டனர்.




பிரித்தானிய காலணித்துவத்தின் கீழ் இருந்த நாடுகளில் 1931ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடாக இலங்கை காணப்படுகின்றது.




ஆனால், அதனை பின்பற்றிய நாடுகளில் காணப்படும் முன்னேற்றம் இலங்கையில் இல்லை. குறிப்பாக சார்க் நாடுகளில் அதிகரித்து காணப்படும் பிரதிநிதித்துவம் இலங்கையில் வீழ்ச்சியினை காட்டுகிறது. அதன்படி 2020 இல் வெளியிடப்பட்ட "inter-parliamentary union" கருத்துப்படி இலங்கையில் 5.3% உள்ளது. இந்தியாவில் 14.4% உள்ளது. அதே போல் பாகிஸ்தானில் 20.2% ஆனவர்களும், பங்களாதேஸில் 20.9% ஆனவர்களும், மாலைதீவில் 4.6% ஆனவர்களும், நேபாளத்தில் 32.7% ஆனவர்களும், பூட்டானில் 14.9% ஆனவர்களும், ஆப்கனிஸ்தானில் 27% ஆனவர்களும் பாராளுமன்றதிற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் குறைவாகவே பெண்களுக்கு வாய்ப்பு உள்ளது. இதனை பின்வரும் வரைபடம் மூலம் அவதானிக்கலாம்.




(Source: Women political participation -inter parliamentary union-2020)

அதேபோல் இலங்கையில் 1989 தொடக்கம் 2020 வரையான தேர்தலின்படி பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் அளவு மிகக் குறைவாக உள்ளது. 20 வருட காலத்தில் பெண் பிரதிநிதித்துவம் அதிகரிக்கவில்லை. குறிப்பாக 10 சதவீதத்தை கூட தாண்டவில்லை. 2004 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் பாராளுமன்றத்திற்கு 5.8% ஆனவர்களே தெரிவானார்கள். இது இன்றுவரை மாறாப்பெறுமானமாக இருக்கிறது. அந்தவகையில் 1989ஆம் ஆண்டு 5.8% ஆனவர்களும், 1994ஆம் ஆண்டு 5.3% ஆனவர்களும், 2000ஆம் ஆண்டு 4.0% ஆனவர்களும், 2001ஆம் ஆண்டு 4.4% ஆனவர்களும், 2004ஆம் ஆண்டு 5.8% ஆனவர்களும், 2010 ஆம் ஆண்டு 5.8% ஆனவர்களும், 2015ஆம் ஆண்டு 5.8% ஆனவர்களும், 2020இல் 5.3% பாராளுமன்றத்திற்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 94% ஆனவர்கள் ஆண்களாக தெரிவு செய்துள்ளனர். இதனால் பெண்கள் பங்கேற்பதற்கான தேவை இலங்கையில் அதிகமாக உள்ளதை காணலாம். இதனை பின்வரும் வரைபடம் மூலம் அவதானிக்கலாம்.

(Source: Election Results, Election Commission, Colombo)

பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவ உலக தரவரிசையில் ,இலங்கை 177ஆவது இடத்தில் அமைந்துள்ளது. உள்ளூராட்சி மன்றத்தில் 1.8 வீதம் பிரதிநிதித்துவம்தான் இதுவரையில் காணப்படுகின்றது. (Parliamentary union-2016). இந்த நிலமையினை மாற்ற பல தசாப்த காலமாக பெண் செயற்பாட்டாளர்கள், பெண் அமைப்புக்கள் என்பன குரல் கொடுத்து வந்ததற்கு பலனாக 2010ஆம் ஆண்டு 16ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உள்ளூராட்சி சபைகளுக்கான புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் பெண்களுக்கு 25வீதம் இட ஒதுக்கீடு உறுதிப்படுத்தப்பட்டது. (Parliament union-2016). 2018 பெப்ரவரி 10இல் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலே இம்முறை செயற்படுத்தப்பட்டது.

இத்தேர்தலில் 341 உள்ளூராட்சி சபைகளுக்கு 8356 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட இருந்தனர். அதற்காக 56000 அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இலங்கையில் மொத்தமாக 17000 பெண் வேட்பாளரகள் போட்டியிட்டமை குறிப்பிடத்தகக் விடயமாகும். 2011இல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் 100க்கும் குறைவானவர்களே உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். 2015 இல் தெரிவான பெண் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது 2010 இல் தெரிவான 13 என்ற எண்ணிக்கையினையே பிரதிபலிக்கின்றதே தவிர இவற்றில் அதிகரிப்பு ஏற்படவில்லை. 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 13 பெண் உறுப்பினர்களே உள்ளமை இலங்கையில் பெண் அரசியல் பங்குபற்றலின் ஆர்வமின்மையை எடுத்துக் காட்டுகின்றது (Hand book of parliament – 2017). இதனடிப்படையில் பார்க்கும் போது மொத்த பிரதிநிதிகளின் விகிதாசார அடிப்படையில் பெண் பிரதிநிதிகளின் விகிதாசாரமானது 6 வீதம் குறைவாகவே காணப்படுகின்றது.

மேலும், 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கு 50 வீதம் பெண் பிரதிநிதிகள் அமர்த்தப்பட வேண்டும் என கூறப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் தேர்தலில் உள்ளூராட்சி அமர்வில் கட்டாயம் 50 வீதம் பெண் பிரதிநிதிகள் அமர்த்தப்பட வேண்டுமெனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதில் பெண்கள் உண்மையிலேயே பிரதிநிதிகளாயினரா? இது நடைமுறைச் சாத்தியமா? என்பது பலரது மனதிலே எழுந்த சந்தேகமாகும். எனினும் தேர்தல் முடிந்த பின்பும் பெண் பிரதிநிதித்துவத்தின் அளவு அதிகரிக்க செய்தாலும் பெண்கள் தெரிவு, நியமனம் தொடர்பில் சிக்கலை உருவாக்கியது.

மேலே குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு குறைந்துவரும் பெண் பிரதிநிதித்துவத்தையும், பெண்களின் பங்குபற்றலையும் அதிகரிக்க வேண்டும். அவற்றை சரிவர கடைப்பிடிப்பதன் மூலம் பெண்களின் விகிதத்தை உள்ளூர் அரசியல் மன்றம் முதல் தேசிய அளவுவரை அதிகரிக்கலாம்.

## 2. பெண்களின் அரசியல் பங்குபற்றலிலுள்ள சவால்கள்

அரசியல் பங்குபற்றல் என்பது சமகால தேசிய அரசுகளின் கீழ் வாழும் பிரசைகளின் பிரசைத்துவத்தின் அசையும் தன்மையுடன் நெருங்கிய தொடர்புடையது. நவீன பிரசைத்துவத்தின் கீழ் தமது உரிமைகளை சுதந்திரமாக அனுபவிக்கும் பொருட்டு ஒவ்வொரு மனிதனும் அரசியல் எனும் சதுரங்கத்தில் தெரிந்தோ தெரியாமலோ பங்குபற்றியே ஆகின்றான். இதனடிப்படையில் எல்லா துறைகளிலும் போல் அரசியலிலும் பால்நிலை அசமத்துவம் பெருமளவில் நிலவுகிறது. பெண்களுக்கும் தனித்துவமான பிரச்சினைகள் உண்டு என்று சிரமப்பட்டு நிறுவும் ஒரு சமூக சூழமைவில் தான் வாழ நேர்ந்திருக்கிறது.

தொடர்ந்தும் பெண்களின் அரசியல் பங்குபற்றலை கட்டுப்படுத்தும் பல்வேறு காரணங்களை பொதுவில் இனங்காண முடியும். பால்நிலை சாராம்சப்படுத்தல்களை கொண்ட பொது உளவியல், தொடர்ந்தும் நிபந்தனையற்ற கட்டுப்பாட்டை வலியுறுத்தி நிற்கும் ஆணாதிக்க மனோபாவம், அரசியல் பங்கேற்பு தொடர்பிலான கருத்துருவிற்கு பொது ஏற்பை பெற முடியாமை மற்றும் சமய மரபுகளில் காணப்படும் வாசிப்பு முறைமைகள் ஆகியவற்றை உதாரணமாக கொள்ள முடியும். இவற்றை விரிவாக நோக்குவோம்.

### 2.1. ஆணாதிக்க மனோபாவத்தை கட்டுடைத்தல்.

ஏலவே கூறியது போல இதுவரை காலமும் அரசியல் தளத்தை (கோட்பாட்டு மற்றும் பிரயோக அரசியல் தளங்கள்) அலங்கரித்த சகல கோட்பாடுகளும், கருத்தியல்களும் ஆணியல்பின் ஆணாதிக்க அதிகார கண்ணோக்கில் இருந்து வருவதாக வாதிக்கும் அதேவேளை பல்வேறு வழிகளில் அத்தகைய அரசியல் கோட்பாடுகளையும் அரசியல் மைய அதிகார நிறுவனங்களின் கட்டமைப்புக்களையும் கேள்விக்குள்ளாக்குகின்றனர் அரசியல் வெளியில் பெண்களுக்கான பொது ஏற்பை கோரி நிற்போர். உதாரணமாக ஜோன் லொக் தோமஸ் ஹொப்ஸ் போன்றோர் தனித்தனியே அபிவிருத்தி செய்த அரசு தொடர்பான சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை பாலியல் ஒப்பந்தம் ( Sexual contract) என்கிறார்கள் பெண்ணியல் வாத சிந்தனையாளர்கள். அதாவது அடிப்படையில் நவீன பிராஜாவுரிமைச் சிந்தனையின் எண்ணக்கருக்கள் ஆணாதிக்கவாத உலக நோக்கைக் கொண்டவை என்பது அவர்களது வாதம் எவ்வாறு சம - பிரஜாவுரிமைச் சிந்தனை சிறுபான்மை சமூகங்களது கலாச்சார உரிமைகளை உள்வாங்கிக் கொள்வதில் தோல்வியடைந்ததோ , அதேபோன்று பெண்களுக்கு சம அந்தஸ்ததை பெற்றுக் கொடுப்பதிலும் அது தோல்வியடைந்திருக்கிறது. விளைவாக, பிரஜாவுரிமைச் சிந்தனையின் வீச்சு, அரசியல் நிறுவனங்களில் பெண்களின் நுழைவுரிமை, ஏனைய அரசியல் சார்ந்த கோட்பாட்டு பிரதியாக்கங்கள் என்பன பெண்களது உரிமையை உத்தரவாதப்படுத்தும் வகையில் மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என பெண்ணிலைவாத அரசியல் சிந்தனையாளர்கள் கருதுகிறார்கள்.

இது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக, பால் நிலை சமத்துவக் கண்ணோட்டதில் நின்று அரசியல் சிந்தனையை பகுப்பாய்வு செய்யும் ரூத் லிஸ்டரினுடைய 'Re - gendering the Citizenship' பிரதியைக் கலந்துரையாடலாம்.

அதேபோன்று அரசியல் என்பது பொதுமக்கள் அமைப்பின் (public sphere) மூலம் நடைபெறும் செயற்பாடு என கிரேக்கத்தில் காணப்பட்ட (ஆணாதிக்க மனோபாவ) அரசியல் ரீதியான கோட்பாட்டு புரிதலை மாற்றி பெண்களின் அரசியல் வகிபாகத்தை நிர்ணயம் செய்யும் பொருட்டு அரசியல் என்பதை பொதுமக்கள் அமைப்பின் மூலம் இடம்பெறும் செயற்பாடு என்பதை தகர்த்து தனியாள் பங்குபற்றல் என்பதை பிரதியாக்கம் செய்தல் என்பது பெண்களின் அரசியல் பங்கேற்பு தொடர்பாக முன்வைக்கப்படும் மற்றுமொரு மாற்றுச் சிந்தனை ஆகும்

### 2.2. பெண்களை சமூகமயப்படுத்துவதில் காணப்படும் கலாச்சார செல்வாக்கு.

பெண்களின் அரசியல் நுழைவுரிமைக்கு ஆணாதிக்க மனோபாவத்தை அடுத்து முன்வைக்க முடியுமான பிரதான காரணியாக இதனைக் கூற முடியும். இங்கு அதாவது பொதுச் சமூக வெளியில் “கலாச்சாரம்“ என்பது பெண்ணுடல் மீதே கட்டமைக்கப்படு இருக்கிறது. பெரியார் இதனை ”பெண்களைத் தான் எமது கலாச்சாரக் காவிகளாக கொண்டிருக்கிறோம்” என்பார். எனில் ஆண்களின் வகிபாகம் என்னவாக இருக்கிறது என்றால் கலாச்சாரக் காவிகளான பெண்களை பாதுகாப்பது தான். இத்தகைய பெண்ணுடல் மீதான புனித விம்பம் எப்போது தகர்க்கப்படுகிறதோ அப்போது தான் பெண்ணால் பொதுவெளியில் சுதந்திரமாக பயணிக்க முடியும் என்கிறது பெரியாரியம். “கற்பு“ என்பது பெண்ணுக்கு உரியதாக மாத்திரம் கட்டமைத்து அதன் மூலம் அவளை புனித உடலாக மாற்றி அவ்வுடலை பாதுகாக்கும் உத்தியோகபூர்வமான பணியை ஆண்களிடம் ஒப்படைத்ததில் இருந்து துவங்குகிறது பெண் மீதான ஒடுக்குமுறைகள். இதில் சமய மற்றும் இலக்கிய பிரதிகளின் செல்வாக்கும் காணப்படுகிறது. ஆழமாக நோக்கினால் பெண்ணின் சம்மதம் இல்லாமலேயே அரங்கேறும் கற்பழிப்புக்கு சமூகத்தின் முன்னால் யார் அதிகம் பழிச் சொல்லுக்கும் அவமானத்திற்கும் ஆளாகிறார் என்பதை வைத்து இதனை புரிந்து கொள்ள முடியும்.

இத்தகைய கலாச்சார காவலர்கள்களாக ஆண்களையும், கலாச்சார காவிகளாக பெண்களையும் கருதும் பொது உளவியலை தகர்த்து அவளின் பொது வெளிக்கான பங்கேற்பை உறுதி செய்வதன் நீட்சியாக அவளின் அரசியல் பங்கேற்பையும் சாத்தியப்படுத்த முடியும். அரசியலில் கற்பையும், மானத்தையும் வைத்து விடாமல் அதனை சமூகத்தின் நிலைபேறான இருப்பை உறுதி செய்யும் விழுமியங்களின் தொகுப்பாக முன்வைத்தால் பெண்களின் அரசியல் வகிபாகம் சாத்தியமாகும்.

### 2.3. பால்நிலை சாராம்சப்படுத்தல்களை கொண்ட பொது உளவியலை கேள்விக்குள்ளாக்குதல்.

பால்நிலை என்பது சமூகத்தினால் கட்டமைக்கப்படுகிறது என்கிறது பின்நவீன நிலை. குறித்த இக் கருத்தை பின் - அமைப்பியல் வாதக் கோட்பாட்டு புலத்தில் இருந்தே பின் நவீன நிலைச் சிந்தனையாளர்கள் பேசுகிறார்கள். பின் அமைப்பியல் வாதியான பேராசிரியர் ஜூடித் பட்லர் போன்றோர் ” பால் (Sex) என்பதை சாராம்சமாக புரிந்து கொள்வதை கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கினார். அதாவது ஆண் என்கிற பாலினம் வலிமையானது புத்தி கூர்மை உடையது எதிலும் தலைமை தாங்கக் கூடியது என்றும் பெண் என்கிற பாலினம் வலிமையற்றது புத்தி கூர்மை குறைவானது தலைமைத்துவ பண்பை கொண்டிருக்க முடியாதது என்று சமூகம் தான் நிர்ணயம் செய்கிறது என்பதையே பட்லர், வால்டர் மிங்கலோ போன்றோர் முன்வைத்துச் செல்கின்றனர்.

இத்தகைய பால்நிலை சார்ந்த சமூகத்தின் சாராம்சப் படுத்தல்களை கட்டுடைப்பதில் (Deconstruct) தான் பெண் விடுதலையை அடைந்து கொள்ள முடியும் என்பதோடு பெண்களுக்கான அரசியல் சார்ந்த இடைவெளிகளையும் ஏற்படுத்த முடியும் என்பது பெண்களின் அரசியல் வகிபாகம் தொடர்பான உரையாடல்களில் பங்கெடுத்து வருகின்ற இடதுசாரிகள், பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களின் சிந்தனைச் சட்டகம்.

அதாவது ஒரு குழந்தை பிறந்த உடனேயே கேட்கப்படும் முதல் கேள்வியான ”ஆணா பெண்ணா” என்ற கேள்வியிலேயே அது சமூகத்தின் பாலியல் இருமைக்குள் (அதாவது ஆண்×பெண் என்கிற அடையாளத்திற்குள்) நுழைகிறது. விளைவாக பேச்சு, நடை, உடை என்று வாழ்வின் சகல பயணங்களிலும் குறித்த பாலின அடையாளத்திற்குள்ளேயே அடைபட்டு கிடக்கிறது. பொதுக் கழிவறைகளை பயன்படுத்துவது ஆணா பெண்ணா என்பது வரை குறித்த அதிகார முனைப்புக்கள் ஒரு உடலில் நடைபெறுகிறது. இதன் தொடர்ச்சியான உரையாடலையே அரசியல் தளத்தில் பாலின அதிகாரத்துவம் தொடர்பாக உரையாடும் புலமைத்துவ வட்டாரத்தினர்கள் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

### 3. பெண்களின் அரசியல் பங்குபற்றலை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்

இலங்கையில் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை பெண்களின் பங்கேற்பு குறைந்து கொண்டு வருவதுடன், அவர்களை வலுப்படுத்தவும் யாரும் முன்வருவதில்லை. இதனால் அவர்களை அரசியல் ரீதியாக வலுப்படுத்தவும், பங்குபற்றவும் சில தீர்வுகளையும், பரிந்துரைகளையும் முன்வைக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

கோட்டா முறைமைகளை பெற பிரச்சாரங்களை அதிகரித்து, அதற்கான அமைப்புக்களை ஏற்படுத்துவது அவசியமாகும். அதற்காக அரசாங்கத்திற்கு தெளிவூட்டி, பெண் பிரதிநிதிகளின் அவசியம் குறித்து பேசப்படல் வேண்டும். உள்ளூராட்சி பயிற்சிகளுக்கு வரும் உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யவும், பெண்கள்சார் பிரச்சனை பேசப்படவும் வழிகளை உருவாக்க வேண்டும். இதனால் ஆண்களுக்கு சமனாக பெண்களுக்கும் என ஒதுக்கீடுகளை சகல தேர்தலிலும் ஏற்படுத்த வழிகளை உருவாக்க வேண்டும். இதனை தேசிய கட்சிகளின் ஊடாக ஜனாதிபதி, அமைச்சரவைக்கு கொண்டு சென்று அழுத்தங்களை கொடுக்கலாம். இதற்கு அரசசார்பற்ற நிருவனங்கள், பெண்கள் அமைப்புகளினது பங்களிப்பினையும் பெற வேண்டும். சமூக கலாசார செயற்பாடுகளை தொடர்ந்து செய்து தலைமைத்துவத்தை வளர்க்க வேண்டும். இதன் மூலம் தொடர்ந்து சேவை புரியவும், வாக்கு வங்கிகளை கட்டியெழுப்பவும், அனுபவத்தை பெற வேண்டும். அதேபோல் திடசங்கற்பத்துடன் செயற்படவும் வழிகளை உருவாக்க வேண்டும். ஒருமுறை வேட்புமனு நிராகரிக்கப்பட்டாலும் அதிலிருந்து விலகிச் செல்லாமல் தொடர்ந்து முன்னோக்கி செல்லும் தன்மையை வளர்க்க வேண்டும். கட்சி அரசியல் தலைமையுடன் பெண்கள் இறுதிவரை நெருங்கிய தொடர்பினை விருத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் அவர்களின் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். அது தேர்தலின் வெற்றிக்கு நேரடியாக பங்களிக்கும். உதாரணமாக அரசியல் தலைவர்கள் பங்குபற்றும் நிகழ்வில் கலந்து கொள்ளல், பெண் அமைப்புக்களால் ஏற்பாடு செய்கின்ற செயற்பாடுகளுக்கு அரசியல் தலைவர்களை அழைத்தல், கடிதம் மற்றும் தொலைபேசி ஊடாக தொடர்ந்து தகவலை பரிமாறல், அவர்களின் ஆலோசனைகளை பின்பற்றல் போன்றவற்றின் ஊடாக பெண்களுக்கு சாதகமான நிலைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சிறந்த தேர்தல் பிரச்சாரத்தினை உருவாக்குதல், அவற்றை நடைமுறைப்படுத்த ஆர்வத்துடன் செயற்படவும் வேண்டும். அவ்வாறு செயற்படும் போதுதான் அதிகமாக பங்குபற்றுவார்கள். வேட்பாளருக்கு ஆதரவும் அளிப்பார்கள். இன்றைய காலத்தில் ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்களின் பிரச்சார செயற்பாடுகள் கவர்ச்சி குறைந்தவை. மக்களை சந்தித்து அறிந்ததன் பின்புதான் பிரச்சாரத்திற்கு செல்ல வேண்டும். உதாரணமாக சிறு கூட்டங்களை வைத்தல், வீடு வீடாக செல்லல் என்பவற்றை குறிப்பிடலாம்.

தேர்தல் பிரச்சார செயற்பாடுகளுக்கு நிதியினை திரட்டிக் கொள்ளல் வேண்டும். அநேகமான பெண்கள் தேர்தலில் நிற்க முன்வராமைக்கு காரணம் நிதிப்பற்றாக்குறை ஆகும். இதனால் தேர்தலுக்கு முன்னரே அரசசார்பற்ற நிறுவனம், அமைப்புக்கள் போன்றவற்றின் மூலம் பெற்று சேமிக்க வேண்டும். பெண்ணொருவருக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவம் தொடர்பான வாக்காளர்களைப் தெளிவுபடுத்த வேண்டும். அதன் மூலம் ஒரு கட்சியில் இருந்து பல வேட்பாளர்களை உள்ளூராட்சி மற்றும் பாராளுமன்ற தேர்தலுக்கு அனுப்ப முடியும்.

இன்றும் பெருமளவிலான பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றிய தெளிவு மக்களிடம் இருக்கவில்லை. இதற்கு கிராம மட்டத்தில் செய்கின்ற பொது வேலைத்திட்டம் மூலமாக மக்களின் கவனத்தை பெண்கள் மீது திருப்ப வேண்டும். பெண்களுடன் அரசியல் பிரதிநிதித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக செயற்படக் கூடிய விசேடத்துவ நிறுவனத்தினை உருவாக்க வேண்டும். இன்று அனேக கட்சிகள் பெண்களை குறித்த ஒரு இடத்திலே வைத்துள்ளனர். பெரும்பாலும் கட்சி தலைவர்கள் பெண்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தினை வழங்க விருப்பமற்ற நிலையில் உள்ளனர். இதனை மாற்ற பெண்களுக்கு என ஒரு பங்கினை சட்ட ரீதியாக ஒதுக்கல் வேண்டும். இவர்களுக்கு குடும்பம், கல்வி நிலையம், மதத் தாபனங்கள், அரசியல் நிறுவனம், அரசசார்பற்ற நிறுவனம் போன்றவை ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறானதொரு நிறுவனம் மூலம் இளம்வயதினர் மற்றும் பெண்களுக்கு அரசியல் அறிவு மற்றும் தலைமைத்துவ பயிற்சியை அரசியலில் பெற்றுக்கொடுக்கலாம். அதேபோல அரசியலில் ஆர்வமுள்ள பெண்களின் பெயர்களை தயாரித்து குறைந்தபட்சம் ஒரு பெண்ணையாவது தேர்தலில் ஈடுபடுத்தல் வேண்டும். இதன் மூலம் அவர்களின் பங்குபற்றலை அதிகரிக்கலாம்.

பெண்களின் அரசியல் பங்குபெற்றலை அதிகரிப்பதற்காக மகளிர் அமைப்புகள், சிவில் அமைப்புக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலமாக அரசியல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை கிராம சேவகர் பிரிவின் ஊடாக நடாத்துதல் வேண்டும். அக்கருத்தரங்குகளில் பெண்களின் அரசியல் உரிமைகள், கடமைகள் என்பற்றின் அவசியத்தினை வலியுறுத்துவதுடன் பெண்களின் அரசியல் பங்குபெற்றுதல் இடம்பெறாமையின் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய விடயங்களை சுட்டிக் காட்டுவதுடன், கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் அரசியல்பங்குபற்றுதலை பெண்கள் பெறக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படும்.

தேர்தலில் போட்டியிட விரும்பும் பெண்களை முன்னுரிமை வழங்கி வழிகாட்டுபவர்களாக குடும்ப அங்கத்தினர் காணப்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்களில் அப் பெண்ணின் கணவர் அப்பெண்ணின் அரசியல் செயற்பாடுகள் அனைத்திற்கும் உறுதுணையாகவும், உதவி புரிபவராகவும் காணப்படுதல் வேண்டும். சமூக ரீதியாக அவப்பெயர் ஏற்பட்டு அப்பெண் சோர்வடைந்து கவலையடைகின்ற சந்தர்ப்பத்தில் உற்சாகம் அளிக்கக் கூடியவராக காணப்படுவதுடன் இப் பெண் வேட்பாளரின் வெற்றிக்கு முழு மூச்சாக உழைத்தல் வேண்டும். பெண் வேட்பாளர் போட்டியிட முன் வருகின்றபோது, குறித்த பிரதேச பெண்கள் இப்பெண்ணின் முயற்சிக்கு ஆதரவளித்து அப்பெண்ணுக்கு பக்க பலமாக இருந்து செயற்படுதல் வேண்டும்.

மேலும் குறித்த அப்பெண் வேட்பாளரை வெற்றி பெற செய்வதற்காக தமது வாக்குகளை வழங்க வேண்டும். அரசியல் கட்சிகளை பொறுத்த வரையில் தமது வேட்பு மனுப் பத்திரத்தினை குறித்ததொரு பெண் வேட்பாளரை இணைத்து அவரது வெற்றிக்கு பின் புலமாக நின்று செயல்படுவதன் மூலம் பெண் பிரதிநிதித்துவத்தை பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும். இன்றைய தேர்தல் நடைமுறையானது அதிகளவு செலவுத்தன்மை கொண்டதாக காணப்படுகிறது. எனவே அரசியல் கட்சியானது அப்பெண் வேட்பாளருக்கு தேர்தல் செலவினை ஈடுசெய்யக்கூடிய வழிவகைகளை செய்ய வேண்டும். அப்பெண் வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இறுக்கமான கலாச்சாரத்தன்மைகளை தகர்த்தெறிந்து பெண்களால் அரசியலில் போட்டியிட முடியாத சூழ்நிலை காணப்படுகிறது. எனவே அரசசார்பற்ற நிறுவனங்கள், மதப் பெரியார்கள், சமூக ஆர்வலர்கள், புத்துஜீவிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பெண்களின் கலாச்சார பின்னணிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போட்டியிடுவதற்கான அனுமதியை வழங்கி அப்பெண்ணின் வெற்றிக்கு முழு மூச்சாக செயற்படல் வேண்டும். கொள்கை தீர்மான செயற்பாடுகளில் பெண்களின் கருத்துக்களை உள்வாங்க வேண்டும். அதாவது கிராமிய அபிவிருத்தி சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், சிவில் சமூகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என்பற்றில் பெண்களை உள்வாங்குவதுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.



## முடிவுரை

செயற்பாட்டுப் பொறிமுறையுடன் கூடிய அரசியல் விழுமியங்களின் தொகுப்பாக ஜனநாயக ஆட்சி முறைமையை கருத முடியும். சுருக்கமாக கூறுவதென்றால் ஜனநாயக முறைமை மூலம் அரசு மற்றும் அது சார்ந்த நிறுவனங்கள் பிரசைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பெறுகின்றன. குறித்த அதிகாரக் கட்டமைப்புக்கள் சில வேளைகளில் சாதி, இனம், மொழி மற்றும் பால்நிலை சார்ந்த அடையாளங்களை முன்னிறுத்தி வன்முறைகளையும் நிகழ்த்தலாம். நெகிழ்வான ஜனநாயகத் தன்மையை கொண்டிருக்கும் மூன்றாம் உலக நாடுகளின் பொதுவான அரசியல் அனுபவம் இது.

அதிலும் குறிப்பாக பெண் என்கிற பால்நிலை அடையாளம் ஒடுக்கப்படும் போது அதற்கு எதிராக பெண் என்ற அடையாளத்துடனேயே போராட வேண்டி இருக்கிறது. ஹன்னாஹ் அரண்டிட் கூறுவது போல எந்த அடையாளத்தை நோக்கி வன்முறை நிகழ்த்தப்படுகிறதோ அந்த அடையாளத்துடன் தான் களத்தில் போராட வேண்டும். இதன் நீட்சியாக பெண் என்கிற பால்நிலை அடையாளத்தின் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளையும் அநீதிகளையும் அரசியல் ரீதியாக முன்வைத்துச் செல்ல பெண்களின் அரசியல் பங்குபற்றல் என்பது இன்றியமையாதது. இதற்கான தயார்படுத்தல்களை சமூக மட்டங்களில் மிக விரைவாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

**உசாத்துணைகள்:**

01. குமாரி ஜெயவர்த்தனா, (2003). மூன்றாம் உலகில் பெண்ணியமும் தேசியமும். முதலாம் பாகம் சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

02. சரவணன். என், (2001). இலங்கை அரசியலில் பெண்களும், பெண்கள் அரசியலும். மூன்றாவது மனிதன் பதிப்பகம், கொழும்பு.

03. பெருந்தேவி (2019). உடல், பால், பொருள். காலச் சுவடு பதிப்பகம்.

04. ரமேகூஷ். இரா, சோபனா. ரா, (2012). "ஆண்- பெண் அரசியல் பிரதிநித்துவம் சமமானதா? பங்குமுறை கோட்பாடு மற்றும் பயன்பாடு" (மொழிபெயர்ப்பு) இட்ரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங் வெளியீடு, கொழும்பு.

05. Liyanage, Kamala and Rajendran, shobana (2012). "*Increasing women's representation in local government in central province of sri Lanka: Trends and problems".* paper presented at the 13th national convention on women's studies, Colombo: center for women's Research.

06. Pujika.R, (2017). *"Women's political representation in Sri Lanka*". leading towards prosperity or peril, The Asian peacebuiders scholarship programme, university of peace.



# உள ஆரோக்கியத்தை பேணுதலில் அல்குர்ஆனின் வகிபாகம்:

## அல்குர்ஆன் வசனங்களுடனான ஓர் ஆய்வு

**Noorul Shifa Jafeer**
Department of Islamic Studies
South Estern University of Sri Lanka
jnoorulshifa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதன் சிறப்பாக வாழ வேண்டுமானால் அவன் ஆரோக்கியத்துடன் காணப்பட வேண்டும். அந்தவகையில் ஒரு மனிதனைப் பொருத்தவரையில் அவன் மகிழ்ச்சியாக வாழ உடல் ஆரோக்கியம் எந்தளவுக்கு முக்கியமோ அதேயளவு உள ஆரோக்கியமும் முக்கியமானதாகும். ஆனால் இன்று மனிதர்களில் பெரும்பாலானோர் நாளாந்தம் இவ் உளவியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு அவற்றை சரியான முறையில் கையாளத் தெரியாது பல தவறான முடிவுகளையும் எடுக்க முயற்சிக்கின்றனர். எனவே இவ் ஆய்வுப் பிரச்சினையை மையப்படுத்தி முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சினைகளைச் சிறந்த முறையில் கையாள்வதற்கான அல்குர்ஆனிய வழிகாட்டல்களை தெளிவுபடுத்தலை நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு முதன்மை மூலாதாரமான அல்குர்ஆனும் இரண்டாம் நிலைத் தரவுகளான தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள ஆக்கங்கள் என்பன மீளாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளதோடு குறியீட்டுப் பகுப்பாய்வு முறை மூலமான உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை மூலம் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக மக்கள் தம் வாழ்வில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைத் தீர்த்து, எதிர்மறை எண்ணங்களை இல்லாதொழித்து நேர்மறையான எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகளின் பக்கம் முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துவதில் அல்குர்ஆனிய வசனங்களின் பங்கு காத்திரமானது என்பது அவதானிக்கப்பட்டது.

**திறவுச் சொற்கள்:** அல்குர்ஆன், உள ஆரோக்கியம், இஸ்லாம்

**அறிமுகம்**

இஸ்லாம் மார்க்கமானது அல்லாஹ்வினால் முழு மனித சமூகத்திற்குமான ஓர் அருளப்பட்ட மார்க்கமாகும். அந்தவகையில் இறுதித்தூதர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு சுமார் 23 வருட காலமாக கால, இட, சந்தர்ப்ப சூழலுக்கேற்ப இறக்கியருளப்பட்ட அல்குர்ஆனானது "ஹுதன் லின்னாஸ்- மனித சமூகத்திற்கான நேர்வழி" என போற்றப்படுகிறது. எனவே இதனடிப்படையில் இஸ்லாத்தின் வழிகாட்டலானது முழு மனித சமூகத்திற்குமான பூரண வழிகாட்டல்களைக் கொண்ட ஓர் பூரண வாழ்க்கைத் திட்டமாகும். இவ் வாழ்க்கை நெறியில் முழு மனித சமூகத்திற்கும் தேவையான அரசியல், பொருளாதார, ஆன்மீக, சமூக, கலாசார, உளவியல், விஞ்ஞான, கல்வி முதலான அனைத்து வழிகாட்டல்களும் காணப்படுகின்றன. அத்துடன் இவ்வழிகாட்டல்களின்படி ஒருவர் ஒழுகும் போது அவர் ஈருலகிலும் வெற்றி பெறுகிறார்.

அல்குர்ஆன் அல் பயான், அஷ்ஷிபா, அந்நூர், அத்தன்ஸீல், அல்புஷ்ரா போன்ற பல சிறப்புப் பெயர்களையும் கொண்டுள்ளது. அல்குர்ஆன் இறக்கியருளப்படதன் நோக்கங்களிலொன்றாகவும் மனித உள்ளங்களை குணப்படுத்துலும் காணப்படுகின்றது என்பதை பின்வரும் திருமறை வசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**“மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து திட்டமாக ஒரு நல்லுபதேசமும் (உங்கள்) இதயங்களிலுள்ளவற்றைக் குணப்படுத்துவதும்) உங்களுக்கு வந்துவிட்டது. மேலும், (அது) விசுவாசங் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கிறது”. (10:57)**

**“விசுவாசங்கொண்டோருக்கு எது குணப்படுத்துமோ அதையும், இன்னும் அருளையும் இந்தக் குர்ஆனிலிருந்தும் நாம் இறக்கி வைக்கிறோம். இன்னும், அக்கிரமக்காரர்களுக்கு இது நஷ்டத்தையே தவிர (வேறெதையும்) அதிகமாக்காது”. (17:82)** (Morteza Khorrami,2010)

இஸ்லாம் என்றால் சாந்தி, சமாதானம், கட்டுப்படுதல், அடிபணிதல் முதலான பொருள்களைக் கொண்டுள்ளது. அல்லாஹ் விரும்பும் பிரகாரம் அவனது கட்டளைகளுக்கு முழுமையாக அடிபணிந்து கட்டுப்பட்டு வாழ்வதே இஸ்லாம் ஆகும் (Sabry& Adarsh Vohra, n.d).

இஸ்லாம் எதிர்மறையான வாழ்க்கை நிகழ்வுகளில் இருந்துமுஸ்லிம்களைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுகிறது. அது விரக்தியைத் தடுப்பதற்கும் அதற்கான சிகிச்சைகளை வழங்குவதிலும் உதவுகிறது. பிரச்சினை இல்லாதவர்கள் என யாருமில்லை. முஸ்லிம்களும் வாழ்வில் எதிர்மறையான விடயங்களை சந்திக்கவே செய்வர். எனவே இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களை மீளவும் நேர்மறையான எண்ணங்களின்பாலும், நேர்மறையான செயற்பாடுகளின் பாலும் தூண்டுவதில் இஸ்லாத்தின் பங்களிப்பு அளப்பரியது (Sabry & Adarsh Vohra, n.d).

**“ஆகவே, நிச்சயமாக கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது. நிச்சயமாக, கஷ்டத்துடன் இலேசு இருக்கிறது”. (94:04-05)**

இஸ்லாம் மக்களை நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பதை ஊக்குவிக்கிறது. சில பாவங்களில் ஈடுபட்டாலும் அல்லது வாழ்வில் ஏதாவது இடர்பாடுகளில் சிக்கிக் கொண்டாலும் அங்கு இறைவனின் கருணை, அருள் இருக்கிறது என்பதே இஸ்லாத்தின் போதனையாகும்.

**“…அல்லாஹ்வின் அருளிலிருந்து நீங்கள் நம்பிக்கை இழந்து விடாதீர்கள்! நிச்சயமாக (அல்லாஹ்வின் மீது நம்பிக்கையற்ற) நிராகரிப்போரைத் தவிர (மற்றெவரும்) அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழந்து விடமாட்டார்கள்….”**.(12:87)

உளவியல் நோயென்பது ஒரு நபரின் அறிவாற்றல், சமூக, உணர்ச்சி, நடத்தை ஆகியவற்றைப் பாதிக்கும் ஒரு கோளாறு என பரவலாக வரையறுக்கப்படுகிறது (American Psychiatric Association, 2000). இஸ்லாம் உளவியல் நோயை ஒர் சமநிலையற்ற வாழ்க்கை முறையின் நிலையாகக் கருதுகிறது (உணவு, உறங்கும் முறை, ஆன்மீக நடவடிக்கைகள், அல்லாஹ்வை நினைவு கூறல்) (Rahma, 1998).

உள ஆரோக்கியம் என்பது உடல் ஆரோக்கியத்தைப் போன்று முக்கியமானதோகும். உளப்பிரச்சினைகளைக தீர்ப்பதற்கான வழிகாட்டல்கள் அல்குர்ஆன் வசனங்களிலிருந்து எடுக்கப்பட வேண்டுமென சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் தலைவர் அஹ்மட் யூஸுப் திரய்வீஷ் தெரிவித்தார; (International Diploma on Mental Health, Law and Human Rights, 2019). உலக சுகாதார அறிக்கையின்படி ஆரோக்கியம் என்பது “ஆரோக்கியம் என்பது உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நன்நெறிகளின் கூட்டு மொத்தமே” ஆகும் (Hiruni et al,2019). ஆன்மீகம் சார்ந்த விடயங்கள் மனிதனது உடல்,உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் முக்கியமானதொரு அம்சமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது (Uyun, 2019).

உளவியல் பிரச்சினைகளைச் சிறந்த முறையில் கையாள்வதற்கான வழிகாட்டல்களும் இஸ்லாத்தில் மிகத் தெளிவான அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் எதிர்கொள்ளும் மனஅழுத்தங்களை சிறந்த முறையில் முகங்கொடுப்பதற்கு இஸ்லாமானது சமயஉணர்வு, பொறுமை, திக்ர், ஈமான், அல்லாஹ் மீதான உறுதி, வணக்க வழிபாடுகள், துஆ, அல்குர்ஆன் ஓதுதல், சகிப்புத் தன்மை, நன்றி செலுத்துதல் போன்றன போதனைகளை முன்வைத்துள்ளது (Ahmed & Abdel-Khalek, 2011).

### ஆய்வுப் பிரச்சினை

இன்றைய மக்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றே உளவியல் ரீதியான பிரச்சினையாகும். இதனை சரியான முறையில் எதிர்கொள்ளத் தெரியாமையானது மக்களை தவறான வழியின்பால் இட்டுச் செல்கிறது.

### ஆய்வு நோக்கம்

உளவியல் பிரச்சினைகளை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கான அல்குர்ஆனிய வழிகாட்டல்களை தெளிவுபடுத்தல்.

### ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது முதலாம் தர மூலாதாரமான அல்குர்ஆனை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன் ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், இணையத்தள ஆக்கங்கள் போன்ற இரண்டாம் நிலைத்தரவுகள் மீளாய்விறகுட்படுத்தப்பட்டு குறியீட்டுப் பகுப்பாய்வு முறை மூலமான உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையைக் கையாண்டு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### இலக்கிய மீளாய்வுகள்

1. Monireh (2013) என்பவரால் "The Effects of Holy Quran Voice on Mental Health" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது மருத்துவ விஞ்ஞானத்தின் Zahedan பல்கலைக்கழக மாணவர்களிடையே அல்குர்ஆனிய ஓதலைக் கேட்பதானது அவர்களது தனிப்பட வாழ்வில் எந்தளவு தாக்கத்தை செலுத்துகிறது என்பதை அளவிடும் முகமாக மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவாக மன அமைதி மற்றும் அதிக மன ஆரோக்கியத்தை அடைய அல்குர்ஆன் கேட்பதை உளவியலாளர்கள் பரிந்துரைக்க முடியும் என்பது குறிப்பிடப்பட்டிருந்தது.

2. Ali Ahmad Naseh என்வரால் மேற்கொள்ளப்பட்ட "Elements of Mental Health from the Viewpoint of the Quran and Hadiths" எனும் ஆய்வில் மன ஆரோக்கியத்தைப் பாதுகாத்து அவற்றைப் பாதுகாப்பதற்கான காரணிகள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அவை தனிமனிதனுக்கும் சமூகத்துக்குமான மன அமைதியை உறுதி செய்வதில் பங்காற்றுவதாக இவ் ஆய்வு குறிப்பிடுகிறது. அந்தவகையில் அல்லாஹ் மீதான நம்பிக்கை, தொடர்ந்து இறைவனை நினைவு கூர்தல், தொழுகையைப் பேணல், நோன்பு, பிரார்த்தனை முதலான விடயங்கள் மனிதனது மன ஆரோக்கியத்தைப் பாதுகாத்து நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக இவ்ஆய்வின் முடிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. Assessment of Anxiety, Depression, Stress, and Associated Psychological Morbidities among Patients Receiving Ayurvedic Treatment for Diferent Health Issues: First Study from Sri Lanka. எனும் தலைப்பில் Hiruni என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மக்கள் பெரும்பாலும் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்சினைகளான கவலை, மனச்சோர்வு, மனஅழுத்தம் என்பன அடையாளப்படுத்தப்பட்டு அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவாக உள நோயாளர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள உளவியல் ஆலோசனைகளைப் பெறுவது பயனுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது.

4. Human health and religious practices in Quraan எனும் தலைப்பில் Hossein Yousofi என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உளநோய்களானது உடலியல் நோய்களை விடவும் குறைவானதோர் விடயமல்ல எனும் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு அறிஞர்களால் அதற்கான தீர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் மனித வாழ்க்கையில் பொதுவான ஒரு பிரச்சினையாக இது காணப்படுகிறது எனவும் அதற்கான சிறந்த தீர்வுகளை எடுப்பது அவசியம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக இஸ்லாமிய சமயத்தில் காணப்படும் நம்பிக்கை மற்றும் வணக்க வழிபாடுகள் மனித உள்ளங்களைப் பாதுகாப்பதற்கான கவனத்தையும் தீர்வுகளையும் ' தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5. Muhammad Thahir & S.A.Zubairi என்போரால் Exploring Qur'anic Stance on Mental Health: An Analytical Review மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தற்காலத்தில் மக்கள் மத்தியில் சூடுபிடிததுள்ள ஒரு பிரச்சினையாக மன ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகள் மாறி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய வழிகாட்டலினூடாக உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களும் வஹியின் ஒளியில் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக மனநலப் பிரச்சினைகளுக்கான அல்குர்ஆனிய உத்திகள் மனித இயல்புடன் ஒத்துச் செல்லக் கூடியதாகவும் முஸ்லிம் சமூகத்தில் நேர்மறையான மனநலத்தை மேம்படுத்துவதிலும் கட்டாயம் இருக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 01. மனிதன் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்சினைகள்

### 1. கவலை

“According to the Anxiety and Depression Association of America அமெரிக்கா எதிர்கொள்ளும் பிரதான மனக்கஷ்டங்களில் கவலையும் ஒன்றாகும். இதனால் கிட்டத்தட்ட 40 மில்லியன் அமெரிக்கர்கள் பாதிக்கப்படுகின்றனர்” (Lailakhan, 2016).

ஒரு சாதரண வாழ்வில் ஏற்படும் இழப்புக்களின் போதான ஓர் மனநிலையின் வெளிப்பாடே கவலையாகும். முஸ்லிம்கள் வாழ்வில் ஏற்படும் நோய்கள், இறப்பு, சந்தோசம், மகிழ்ச்சி அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே வருகிறது. இத்தகைய இழப்புக்கள், பற்றாக்குறை அனைத்தும் அல்லாஹ் தன் அடியானை சோதிப்பதற்காகவும் அவன் அதனை எவ்வாறான பொறுமையுடனும், இறைவனுடான நம்பிக்கையுடனும் எதிர் கொள்கிறான் என்பதை சோதிப்பதற்காகவேயாகும். (Sabry). இந்த நம்பிக்கையானது அவனுக்கு ஏற்படும் கவலைகளை குணப்படுத்த உதவி செய்கிறது.

கவலைகள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் மக்கள் அதிகமாகக் கூறும் எதிர்மறை வார்த்தைகளே,

ஏன் இது எனக்கு நடைபெறுகிறது? ஏன் மற்றவர்களுக்கு நடைபெறுவதில்லை?
ஏன் அல்லாஹ் என்னைத் தேரந்தெடுத்தான் தாங்க முடியாத இக்கஷ்டத்தை சுமக்க?

இவையெல்லாம் தடுக்கப்பட வேண்டிய சொற்களாகும். அல்லாஹ் எந்தவொரு ஆத்மாவையும் அது தாங்கிக் கொள்ள முடியாத அளவு துன்பத்தைக் கொண்டு சோதிப்பதில்லை. அதனையே அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

“அல்லாஹ் எந்த ஓர் ஆத்மாவிற்கும் அதன் சக்திக்கு மேல் சிரமம் கொடுப்பதில்லை. அது சம்பாதித்துக் கொண்ட நன்மை அதற்கே (பயனளிக்கும், அவ்வாறே,) அது சம்பாதித்துக் கொண்ட தீமை அதற்கே கேடாக அமையும்...”(02:286)

“(விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் தைரியத்தை இழந்துவிட வேண்டாம். கவலையப்பட வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், நீங்கள்தாம் மிக்க மேலானவர்கள்”. (03:139)

“...இன்னும், ஒரு பொருளை அது உங்களுக்கு நன்மையாக இருக்க (அதை) நீங்கள் வெறுக்கலாம். இன்னும், ஒரு பொருளை அது உங்களுக்கு தீமையாக இருக்க (அதை) நீங்கள் விரும்பலாம். (அவற்றில் உண்மை உண்டா? இல்லையா? என்பதை அல்லாஹ்வே அறிவான். நீங்கள் அறியமாட்டீர்கள்”. (02:216)

“இன்னும், (நபியே! உம்மை இழிவாகக் கூறும்) அவர்களுடைய கூற்று(கள்) உம்மைக் கவலைப்படுத்த வேண்டாம். நிச்சயமாக, கண்ணியம் (அது) அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனே செவியேற்கிறவன்: யாவையும்) நன்கறிகிறவன்”. (10:65)

(எனினும்) நிச்சயமாக “எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான் என்று கூறி பின்னர், (அதன் மீது) உறுதியாக நிலைத்துமிருந்தார்களே அத்தகையோர்-அவர்களின் மீது மலக்குகள் (மரண வேளையில்) இறங்கி (செல்ல இருக்கும் மறுமையைப் பற்றி) நீங்கள் பயப்படாதீர்கள். நீங்கள் இவ்வுலகில் நீங்கள் வாக்களிக்கப்பட்டுக் கொண்டிருந்தீர்களே,அத்தகைய சுவனபதியைக் கொண்டு நன்மாரயம் பெறுங்கள்” (எனக் கூறுவார்கள். விட்டுச் செல்லும் மனைவி, மக்கள், சொத்து, சுகம்யாவற்றையும் பற்றி) கவலையும்படாதீர்கள். (41:30)

“அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் பீடித்தால் “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கின்றோம்” என்று கூறுவார்கள். (02:56)

“மேலும், எத்தனையோ பிராணிகள்-அவை தங்கள் உணவைச் சுமந்து திரிவதில்லை. அல்லாஹ்தான் அவர்களுக்கும் உங்களுக்கும் உணவளிக்கிறான். (இவ்வாறிருக்க, அதற்காக நீங்கள் ஏன் அதிகக் கவலைப்பட வேண்டும்? அவனே (யாவையும்) செவியேற்கிறவன் நன்கறிகிறவன்”. (29:60)

### 1. பயம் மற்றும் சோதனை

“விசுவாசங்கொண்டோரே பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும் செல்வங்கள், உயிர்கள், கனிகளின் விளைச்சல்கள் ஆகியவற்றில் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும், நபியே இவற்றைப் பொறுத்துக் கொள்பவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக” (02:155)

“.....அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். (அவர்களுக்கெதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். இன்னும், சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் மிக்க மேலானவன்”. (08:30)

3. சங்கடம்

“......(அன்றியும், எவர் அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கிறாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான்”.

மேலும், அவர் எண்ணியிராத விதத்தில் அவருக்கு வாழ்வாதாரங்களை அவன் வழங்குவான். எவர் அல்லாஹ்வின் மீது (தன் காரியத்தை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கிறாரோ அவருக்கு அவனே (முற்றிலும்) போதுமானவன். நிச்சயமாக, அல்லாஹ் தன் காரியத்தை அடைந்தே தீருவான். (ஆயினும்) அல்லாஹ் ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் அளவை திட்டமாக நிர்ணயம் செய்திருக்கிறான்”. (65:02-03)

4. விரக்தி

“மேலும், (மறுமையெனும்) பிந்தியதானது (இம்மையெனும்) முந்தியதை விட உமக்கு மிகச் சிறந்ததாகும்”. (93:04)

“அல்லாஹ் (தன்) அருளிலிருந்து மனிதர்களுக்குத் திறந்து விட்டால், அதனைத் தடுத்து விடக்கூடியவர் (ஒருவரும்) இல்லை. அவன் (தன் அருளைத்) தடுத்துக் கொண்டால் அதன்பின் அதனை அனுப்பக் கூடிய (ஒரு)வரும் இல்லை. இன்னும், அவன் (யாவரையும்) மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன்” (35:02)

“(விசுவாசிகளே!)அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்தால், உங்களை மிகைப்பவர் எவருமில்லை. உங்களை அவன் (உதவி செய்யாது) விட்டுவிட்டாலோ, அதற்குப் பின்னர், உங்களுக்கு உதவி செய்பவர் யார்? இன்னும், அல்லாஹ்வின் மீதே விசுவாசிகள் (தங்களின் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்”. (03:160)

“(நபியே!) நீர் கூறுவீராக: “நிச்சயமாக என் இரட்சகன் தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு, வாழ்வாதாரத்தை விசாலப்படுத்துகிறான். (தான் விரும்பியவர்களுக்கு) அளவோடும் கொடுக்கிறான். எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்த போதிலும் அதற்குப் பகரமானதை அவன் அளிக்கிறான். இன்னும், வாழ்வாதாரங்களை நல்குவோரில் அவன் மிகச் சிறந்தவன்”. (34:39)

**01. உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான இஸ்லாமிய வழிகாட்டல்கள்**

1. நன்றி செலுத்தல்

“ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூறுங்கள். நானும் உங்களை அருள் புரிந்து நினைவு கூறுவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள. இன்னும், எனக்கு மாறு செய்யாதீர்கள்”. (02:152)

“அன்றியும், உங்கள் இரட்சகன் (இதற்காக) நீங்கள் (எனக்கு) நன்றி செலுத்தினால் (என் அருளை) நிச்சயமாக உங்களுக்கு அதிகப்படுத்துவோன். இன்னும், நீங்கள் மாறு செய்தீர்களானால், நிச்சயமாக என்னுடைய வேதனை மிகக் கடினமானது” என்று அறிவித்ததையும் (நபியே!) நீர் நினைவு கூறுவீராக!. (14:07)

2. பிரார்த்தனை

“மேலும், (நபியே!) என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால், (அதற்கு நீர் கூறுவீராக!) நிச்சயமாக நான், (அவர்களுக்கு) மிகச் சமீபமாகவே இருக்கின்றேன். அழைப்பவரின் அழைப்புக்கு அவர் என்னை அழைத்தால் நான் பதிலளிப்பேன். ஆகவே, அவர்கள் நேரான வழியை அடைவதற்காக, அவர்கள் (என்னுடைய கட்டளைகளை ஏற்று) எனக்கு பதில் அளிக்கவும். மேலும், அவர்கள் என்னையே விசுவாசிக்கவும்”. (02:186)

“இன்னும், உங்களுடைய இரட்சகன் கூறுகிறான்: “நீங்கள், என்னையே அழை(த்துப் பிரார்த்தி)யுங்கள். நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்கு பதிலளிப்பேன். நிச்சயமாக, என்னை வணங்குவதை விட்டும் பெருமை அடிக்கிறார்களே, அத்தகையோர்-அவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகம் புகுவார்கள்”. (40:60)

“என்னுடைய துக்கத்தையும் கவலையையும் நான் முறையிடுவதெல்லாம் அல்லாஹ்விடமேதான்.....”.(12:86)

### 3. பொறுமை

"நீங்கள் பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (இரட்சகனிடத்தில்) உதவி தேடுங்கள். நிச்சயமாக, அது உள்ளச்சம் கொண்டவர்களுக்கன்றி, ஏனையோருக்கு மிகப் பாரமானதாக இருக்கும்".(02:45)

"விசுவாசங்கொண்டோரே! பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்". (02:153)

"(விசுவாசங்கொண்டோரே) உங்கள் செல்வங்களிலும், உங்கள் ஆத்மாக்களிலும் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள். உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்டவர்களாலும், இணைவைப்பவர்களாலும் (வசைமொழி நிபந்தனைகளான) அதிகமான நோவினையை நிச்சயமாக நீங்கள் செவியேற்பீர்கள். மேலும், (இத்தகைய கஷ்டங்களில்) நீங்கள் பொறுமையை மேற்கொண்டுபயபக்தியோடும் இருந்தீர்களானால், நிச்சயமாக அதுதான் அனைத்துக் காரியங்களிலும் ஆக்கமான செயலாகும்". (03:186)

"விசுவாசங்கொண்டோரே! நீங்கள் பொறுமையைக் கடைப் பிடியுங்கள்....."(03:200)

"மேலும், (நபியே) பொறுமையுடன் இருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் அழகானவற்றைச் செய்தோரின் கூலியை வீணாக்கி விடமாட்டான்". (11:115)

"எத்துன்பமும் அல்லாஹ்வுடைய அனுமதி கொண்டே தவிர (எவரையும்) பீடிப்பதில்லை. ஆகவே, எவர் அல்லாஹ்வை விசுவாசிக்கிறாரோ அவருடைய இதயத்திற்கு (அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்டதை பொருந்திக் கொண்டு பொறுமையுடனிருக்க) அவன் வழிகாட்டுகிறான். அன்றியும், அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நன்கறிகிறான்". (64:11)

(நபியே!) உமதிரட்சகன் உம்மைக் கைவிடவில்லை உம்மை அவன் வெறுக்கவுமில்லை". (93:03)

### 4. பாரம் சாட்டல்

"அவர்கள் எத்தகையோரென்றால், (ஒருசில) மனிதர்கள் அவர்களிடம் (வந்து) உங்களுக்கு விரோதமாக) யுத்தம் புரிய) நிச்சயமாக மனிதர்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்குப் பயந்து கொள்ளுங்கள்" என்று கூறினர். அப்போது இ(க்)கூற்றானது அவர்களுக்கு(ப் பயம் ஏற்படுவதற்கு பதிலாக) விசுவாசத்தை (ஈமானை) அதிகப்படுத்தியது. மேலும், "அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். பாதுகாவலரில் அவன் மிக்க நல்லவன்" என்றும் அவர்கள் கூறினார்கள்". (03:173)

"...(யாதொரு காரியத்தை) நீர் முடிவு செய்தால், அல்லாஹ்வின் மீது நீர் (உம்முடைய காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்பீராக! (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் (தம் காரியங்களைஅவனிடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைப்போரை நேசிக்கின்றான்". (03:159)

"மேலும் என்னுடைய காரியத்தை அல்லாஹ்விடம் நான் ஒப்படைக்கிறேன். நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களைப் பார்க்கிறவன்..."(40:44)

### 5. இறைநினைவு

"(இத்தகுதிக்குரியோர்) எத்தகையோரென்றால், அவர்கள் (மெய்யாகவே) விசுவாசங்கொண்டார்கள். இன்னும், அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன. (ஏனென்றால்,) அல்லாஹ்வை நினைவு கூர்வதால் இதயங்கள் நிச்சயமாக அமைதி பெறும் என்பதை அறிந்து கொள்வீராக!" (13:28)

"அறிவுடைய அத்தகையோர், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப்புறங்களின் மீது (சாய்ந்து)ம் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்....."(03:191)

"(நபியே!) உம் மனதிற்குள் மிக்க பணிவோடும் பயத்தோடும் (மெதுவாக) சொல்லில் உரத்த சப்தமின்றியும், காலையிலும் மாலையிலும் உமதிரட்சகனை நினைவு கூர்வீராக! (அவனை) மறந்திருப்போரில் நீர் ஆகியும் விடாதீர்!". (07:105)

"(அல்லாஹ்வின் இல்லங்களான அவ்)வீடுகளில் (வணக்க வழிபாடுகளின் மூலம்) அவை உயர்த்தப்படவும், அவற்றில் அவனது பெயர் கூறப்படவேண்டுமெனவும் அல்லாஹ் கட்டளையிடுகிறான். அவற்றில் காலையிலும் மாலையிலும் அவனை (நல்லடியார்கள்) துதி செய்வார்கள்". (24:36)

“காலையிலும் மாலையிலும் அவனைத் துதி செய்யுங்கள்”. (33:42)

“எனவே, (நபியே!) நீர் (கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு) பொறுமையாக இருப்பீராக! நிச்சயமாக, அல்லாஹ்வுடைய வாக்குறுதி உண்மையானதாகும். மேலும், நீர் உம்முடைய பாவத்திற்காக மன்னிப்புக் கோருவீராக! மேலும், மாலையிலும், காலையிலும் உமதிரட்சகனின் புகழைக் கொண்டு துதி செய்து கொண்டிருப்பீராக!”. (40:55)

“மேலும், காலையிலும் மாலையிலும் உமதிரட்சகனின் (சங்கையான) பெயரை நினைவு கூர்வீராக!”. (76:25)

“மேலும், எவர் என்னுடைய நல்லுபதேசத்தைப் புறக்கணிக்கிறாரோ, நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கிறது. மேலும், மறுமைநாளில் நாம் அவனைக் குருடனாகவே எழுப்புவோம்”. (20:124)

**6. அல்லாஹ் மீதான உறுதி**

“அல்லாஹ் உமக்கு ஒரு இடரை அடையச் செய்தால் அதனை நீக்குகிறவன் அவனைத் தவிர (வேறு) எவரும் இல்லை. மேலும், அவன் உமக்கு யாதொரு நன்மையை நாடினால் அவனது பேரருளைத் தடுப்பவர் எவருமில்லை. தன்அடியார்களில் அவன் நாடியவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு செய்கின்றான். அவனோ, மிக்க மன்னிப்போன், மிகக் கிருபையுடையோன்”. (10:107)

...விசுவாசங்கொண்டோரே! ஒரு கூட்டத்தினர் உங்களுக்குத் தீங்கிழைக்கத் தீர்மானித்துத் தங்கள் கைகளை உங்கள் அளவில் நீட்டியபொழுது அவர்கள் கைகளை உங்களை விட்டுத் தடுத்து அல்லாஹ் உங்கள் மீது அருள்புரிந்ததை நீங்கள் நினைத்துப் பாருங்கள். இன்னும், அல்லாஹ்வையே பயப்படுங்கள். அன்றியும் விசுவாசிகள் (யாவரும்) அல்லாஹ் (ஒருவன்) மீதே (தங்களின் காரியங்களை ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கவும்”. (05:11)

7. தௌபா

“ஆகவே, (முந்திய உங்கள் பாவங்களுக்காக) உங்கள் இரட்சகனிடம் மன்னிப்புத் தேடுங்கள். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனாக இருக்கின்றான்” என்றும் கூறினேன்.
“அவ்வாறு செய்வீர்களாயின்,, தடைப்பட்டிருக்கும்) மழையை உங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்புவான்”
“செல்வங்களையும், ஆண் மக்களையும் (கொடுப்பது) கொண்டு உங்களுக்கு உதவி புரிவான். உங்களுக்காகத் தோட்டங்களையும் ஆக்குவான் உங்களுக்காக ஆறுகளையும் (அவற்றில்) ஆக்குவான்”. (7-10-12)

**முடிவுரை**

எனவே தொகுத்து நோக்குமிடத்து முஸ்லிம் சமூகம் உளவியல் ரீதியாக எதிர்கொள்ளும் கவலைகள், விரக்தி, சோதனை முதலியன பிரச்சினைகளைச் சமாளித்து அவர்களுக்கான நம்பிக்கையையும் தைரியத்தையும் வழங்கி நேர்மறையான சிந்தனைகளின் பக்கமும் செயற்பாடுகளின் பக்கமும் ஊக்கப்படுத்துவதில் அல்குர்ஆனின் பங்கு மிகக் காத்திரமானதாகும். அதனது வழிகாட்டல்கள் ஈருலகிலும் வெற்றி பெறுவதற்கான வழிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றமையை இவ் அல்குர்ஆன் வசனங்களின் பகுப்பாய்வினூடாக இவ்ஆய்வின் முடிவாக கண்டுகொள்ள முடிகிறது.

**பரிந்துரைகள்**

1. முஸ்லிம்கள் அல்குர்ஆனுடனான தமது தொடர்பை அதிகரித்துக் கொள்ளல்
2. முஸ்லிம்கள் தமக்கிடையே மார்க்கம் சார்ந்த ஈமானிய பேச்சுக்களை அதிகரித்துக் கொள்ளல்
3. வாழ்வின் எல்லா நிலைகளிலும் அல்குர்ஆன், ஸுன்னாவைக் கடைப்பிடித்தல்
4. சமூகத்தில் மார்க்கத்தைக் கற்றறிந்த உலமாக்கள் சாதாரண மக்களிடம் உளவியல் நிலைகளைக் கையாள்வதற்கான வழிகாட்டல்களை தெளிவுபடுத்தல்
5. இது தொடர்பான இன்னும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு அவற்றை சமூகத்தில் சரியான முறையில் அமுல்படுத்துவதற்கான, கையாள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடல்
6. முஸ்லிம் உளவளத்துணையாளர்கள் இது தொடர்பில் கவனம் எடுத்தல்
7. உள ஆரோக்கியத்தைப் பேணுதல் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகள் நடத்தப்படல்.

Ali Ahmad Naseh. (2019). Elements of Mental Health from the Viewpoint of the Quran and Hadiths. *Religious Inquiries.* 9(17). P.169-168.

Monireh, M., Jalil, N., Alireaza, H. & Bakhshani. (2013) The Effect of Holy Quran Voice on Mental Health. *Journal on Religion & Health.* 52(4).

Muhammad Tahr & Zubairi,S.M. (2019). Exploring Qur'anic Stance on Mental Health: An Analytical Review. University of Wah Journal of Social Sciences.2(2).p.46-71

Baasher, T.A. (2001). IAslam and mental health. *La Revue Sante de la Mediterranee orientaie.*7(3).

Hossein Yousofi (2011).Human health and religious practices in Quraan.*Procedia-Social and Behavioral Sciences.*V.30.p.2487-2490

Ahmed, M., & Abdel-Khalek. (2011). Islam and mental health: A few speculations.*Mental Health, Religion & Culture*, *14*(2), 87–92speculations.*Mental Health, Religion & Culture*, *14*(2), 87–92. https://doi.org/10.1080/13674676.2010.544867

Hiruni, J.G. Pemasiri, V., Lahiru, U. & Naysana, G. (2019). Assessment of Anxiety, Depression, Stress, and Associated Psychological Morbidities among Patients Receiving Ayurvedic Treatment for Different Health Issues: First Study from Sri Lanka. *BioMed Research International.* https://doi.org/10.1155/2019/2940836

முஹம்மட் இயாஸ்இ L. T. (2017). இலங்கை முஸ்லிம்களின் உளப்பிரச்சினைகளைக் கையாள்வதில் இஸ்லாமிய உளவளத்துணையின் பங்கு. *4th International Symposium of FIA.* Published. http://ir.lib.seu.ac.lk./handle/123456789/2793

Quranic verses to help address mental health issues. The news.com.pk. from: https://www.thenews.com.pk/amp/522775-quranic-verses-to-help-address-mental-health-issues

Khizra Zaheer. (20, February 2021). Mental Health: Quran Verses and Sunnah to Help with Mental Distresses. The Muslim kit.com. from: https://www.themuslimkit.com/mental-health-quran-verses-sunnah-to-help

Lailakhan. (26, November 2016). 6 VERSES FROM THE QURAN TO HELP YOU THROUGH ANXIETY. Muslimgirl.com From: https://muslimgirl.com/6-verses-quran-help-anxiety/

Morteza Khorrami. (2010). Mental Health in The Holy Quran. *Centro Studi sulle Nuove Religioni*

Studioarabiya institute. (10, October 2020).2 Mental Health Tips From The Quran And Sunnah. Studioarabia.com. https://studioarabia.com/blog/12-mental-health-tips-from-the-quran-and-sunnah.

Malika Khan. (18, May 2021). 5Verses about Depression in the Quran. Getquranic.com. https://www.getquranic.com/5-verses-about-depression-in-the-quran/



# உரப்பிரச்சினை காரணமாக இலங்கை விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள்


**M.N.Aaysha | M.N.F.Akeela | M.A.F.Ashfa**

3rd Year

Department of Islamic Studies

South Eastern University of Srilanka


**ஆய்வு அறிமுகம்.**

ஒரு மனிதனிற்கு அடிப்படைத் தேவைகளாக விளங்குகின்ற உணவு, உடை, உறையுள் ஆகியவற்றில் மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு மிக அவசியமானதாகும். உணவு இல்லையேல் மனிதனில்லை எனும் நிலையில், அவ்வுணவை மனிதர்களுக்கு அள்ளித்தருவதில் முதன்மையான இடத்தை வகிப்பது விவசாயமாகும். ஆரம்பகால மனிதன் நாடோடியாகவே வாழ்ந்து வந்தான். பின் நதிக்கரையோரப் பகுதிகளில் தமது நாகரீகங்களை உருவாக்கிக் கொண்டான். நதிக்கரையோரங்களில் அவன் நாகரீகங்களை உருவாக்கக் காரணம், விவசாயத்தை மேற்கொள்ளத் தேவையான நீரைப் பெறுவதற்கேயாகும். எனவே, ஆரம்பகாலத்திலிருந்தே மனிதன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறான். காலத்திற்கு காலம் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்குட்பட்டு தற்போது இது சிக்கலான மனித நடவடிக்கைகளில் ஒன்றாக வளர்ச்சியடைந்துள்ளது. சனத்தொகை அதிகரிப்போடு உணவத் தேவையும் அதிகரிக்கவே விவசாய நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் செயற்பாடுகளும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது.

அந்தவகையில் நோக்கும்போது, இலங்கையானது ஒரு விவசாய நாடாகவே காணப்படுகின்றது. வரலாற்று ஆதாரங்களின் படி 2500 வருடகால விவசாய வரலாற்றைக் கொண்ட நாடாகவும், அன்றைய காலத்திலிருந்து விவசாயப் பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் நாடாகவுமே இலங்கை காணப்படுகின்றது. ஆரம்பகாலத்திலிருந்தே விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பின்றி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும்,1960ஆம் ஆண்டு உலகில் ஏற்பட்ட பசுமைப் புரட்சியினால் பாரம்பரிய விவசாயம் வர்த்தக விவசாயமாக மாறியது. வர்த்தக விவசாயம் என்பது குறுகிய காலத்தில் பாரிய அறுவடையைப் பெறுவதாகும். எனவே, விதைகளின் அறிமுகம், அசேதனப் பசளைகளின் அறிமுகம், பூச்சிகொல்லிகளின் பயன்பாடு போன்றன விவசாயத்தில் உட்புகுத்தப்பட்டன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. எனவே, காலப்போக்கில் இலங்கை விவசாயிகள் பெருந்தோட்டப் பயிர்செய்கை உள்ளிட்ட அனைத்து விவசாய உற்பத்திகளுக்கும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். இலங்கையில் 15 இலட்சம் ஹெக்டயர் விவசாய நிலங்கள் காணப்படுவதுடன், தற்போது பயன்படுத்தப்படும் இரசாயன உரத்தில் 95% இறக்குமதி செய்யப்படுவதுடன், இதற்காக கடந்தாண்டு இலங்கைக்கு உர இறக்குமதிக்காக 259 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது (Vijanandhan, 2021). இதேவேளை, இலங்கையில் இரசாயன உரப் பாவனை ஆண்டொன்றுக்கு 1.3 மில்லியன் மெற்றிக் தொன்களாகும். இத்தொகையானது முன்னர் குறைவாகவே காணப்பட்டது. அரசால் உரமானியம் வழங்கப்பட்ட பின்னர் தான் இது இருமடங்காக அதிகரித்துள்ளது. அதேபோல், விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதற்காக அரசு 40 பில்லியன் ரூபாயும், தனியார் உர இறக்குமதி நிறுவனங்கள் 25 மில்லியன் ரூபாய்களும் செலவிடுவதாகவும் அறியக்கூடியதாக உள்ளது. மேலும், இலங்கையின் இரசாயன உரப் பயன்பாடானது 2018 ஆம் ஆண்டில் 06 இலட்சத்து 32 ஆயிரம் மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் 12 இலட்சம் மெற்றிக் தொன் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Samyukthan, 2021). இவ்வாறே, இலங்கையின் விவசாயத்தில் இரசாயன உரத்தின் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுவதுடன், விஷமெனத் தெரிந்தும் எமது நாக்குகளும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுகளுக்குப் பழகிவிட்டன.

ஆரோக்கியமான உணவை மக்கள் நுகர வேண்டும் எனவும், சிறுநீரக நோயாளர்கள் அதிகரிக்க இரசாயன உரம் தான் காரணம் எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இலங்கையில் சேதன பசளையை மாத்திரம் முழுமையாகப் பயன்படுத்தி விவசாயத்தை முன்னெடுக்கவும் அசேதன பசளை பயன்பாட்டை குறுகிய காலத்திற்குள் முற்றாகத் தடை செய்வதாகவும் அறிவித்தார். உண்மையில் நோக்கும் போது இது சிறந்த முடிவாகக் காணப்பட்டாலும், முன்ஆயத்தம் இன்றி இரசாயன உரத்தை தடைசெய்ததால் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். எனவே, கடந்த சில மாதங்களாக ஏற்பட்டுள்ள உரப்பிரச்சினை காரணமாக விவசாயிகள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்? என்பதை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை.**

பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டிருக்கும் நாடாகவே இன்றைய இலங்கை காணப்படுகின்றது. கடந்த வருடத்தில் பரவிய கொரோனா வைரஸ் தொற்று நோயின் காரணமாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதனால் அரசாங்கத்தால் நோயைக் கட்டுப்படுத்த முடிந்த போதிலும், நாட்டின் பொருளாதாரம் மோசமான அளவில் பாதிப்பை எதிர்நோக்கியது. இதனால் இலங்கைவாழ் மக்கள் ஏராளமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இந்நிலையிலேயே, இரசாயன உரத்தினால் நிலத்தடிநீர் மாசடைவதாகவும், மக்கள் நோயாளர்களாகவுமே மாறுகின்றனர் இதனால் சேதனப் பசளையை மாத்திரம் பயன்படுத்தியே விவசாயம் செய்ய வேண்டும் எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இரசாயன உர இறக்குமதிக்கான தடை விதிக்கப்பட்டமையினால் நாட்டில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அதிகமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். அதனடிப்படையில் எவ்வாறான பிரச்சினைகளை இதனூடாக விவசாயிகள் எதிர் கொள்கின்றனர்? என்பதே ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்.**

இலங்கை விவசாய நாடாகக் காணப்படுவதோடு காலவோட்டத்துக்கமைய விவசாயத் துறையிலும் தொழில்நுட்பங்கள் புகுந்துள்ள சூழ்நிலையில், குறுகிய காலத்துக்குள் அதாவது ஹைபிரிட் முறையில் விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் முறை உருவானது. இதற்காக குறைந்த காலத்துக்குள் அதிக விளைச்சளைத் தரக் கூடிய ஹைபிரிட் விதைகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு ஹைபிரிட் விதைகளால் விளைச்சலை அதிகம் பெறுவதற்காக இரசாயன உரங்களும் அதிகம் பயன்படுத்தப்பட்டன. ஆரோக்கியமான எதிர் காலத்தை உருவாக்கும் நோக்கில் அரசாங்கம் இரசாயன உரப் பயன்பாட்டை தடை செய்துள்ளது. இது ஒரு நல்ல முடிவாகக் காணப்படினும், விவசாயிகள் இதனால் பல சவால்களை எதிர் கொள்கின்றனர். எனவே, உரப் பிரச்சினையினால் விவசாயிகள் எதிர் கொள்ளும் சவால்களை அடையாளப்படுத்துவதோடு, அதற்கான தீர்வுகள், மாற்றுவழிகளை பரிந்துரை செய்வதுமே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்.**

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள் (primary data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (secondary data) மூலம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் முதலாம் நிலைத் தரவுகள் கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன.

**ஆய்வு கலந்துரையாடல் மற்றும் தரவுப்பகுப்பாய்வு.**

ஒரு பயிர் சரியாக வளர்ந்து குறிப்பிட்ட காலத்திற்குள் அறுவடைக்குத் தயாராக வேண்டும் எனின் அதற்கு சரியான முறையில் உரம் வழங்கப்பட வேண்டும். விளைநிலங்களில் உள்ள ஊட்டச்சத்துக்களை பெருக்கும் பொருட்டு இடப்படுவதே உரமாகும். மண்ணில் குறைந்து வரும் இயற்கையான சத்துப்பொருட்களை ஈடு செய்யும் பொருட்டு மேலதிக சத்துப் பொருட்களை மண்ணிற்கு இடுவதையே உரமிடல் என்பர். நைட்ரஜன், பொட்டாசியம், பொஸ்பரஸ், மெங்னீசியம், கந்தகம், இரும்பு போன்ற பொருட்கள் இயற்கையாகவே மண்ணில் காணப்படுகின்றன. இவ்வாறான வேதியல் பொருட்கள் தாவரங்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. மேலும், மண்ணிற்கு வளமூட்ட பொதுவாக மாட்டு சாணம், இலை, தழை, ஆட்டுப்புழுக்கை, போன்றன இடப்படுகின்றன. இவைகளும் இயற்கை வளங்களாகவே காணப்படுகின்றது. அவ்வாறே, இயற்கை உரங்களின் தன்மைகளைக் கொண்ட செயற்கை உரங்களை வேதியல் அடிப்படையில் தொழிற்சாலைகள் தயாரிக்கின்றன. இவற்றையே செயற்கை உரம் என்போம். கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் விவசாயத்தில் இரசாயன உரமே பயன்படுத்தப்படுகின்றது. எனவே, திடீரென அரசாங்கத்தின் தடையினால் இந்த உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். அவர்களால் அவர்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர். கடந்த காலங்களில் அரசாங்கத்தால் வழங்கப்படும் உரத்தைக் கொண்டே விவசாயத்தை நடத்தி வந்தனர். இவ்வாறு காணப்படும் போது இரசாயன உரத்தை அரசாங்கம் தடை செய்துள்ளது, விவசாயிகளை மனஉளைச்சளுக்கு ஆளாக்கியுள்ளது. அரச மானிய விலையில் உரம் கிடைக்காததைத் தொடர்ந்து, அதனை வெளிச் சந்தையில் வாங்க விவசாயிகள் முற்பட்டுள்ளனர். இருப்பினும் வெளிச் சந்தையிலும் உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என கலந்துரையாடலின் போது விவசாயிகள் தெரிவித்தனர்.

ஒரு தாவரத்திற்கு உரம் என்பது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. தழைச்சத்து நைட்ரஜன் எனும் உரமானது தாவரத்திற்கு சரியான முறையில் கிடைக்கும் போது, தாவரங்கள் உயரமாக, அடர்ந்து, படர்ந்து, வளரும். அதேநேரம், இலைப்பரப்பில் பச்சயத்தை அதிகரிப்பதோடு, தாவரதித்திற்கு பெரிய உருவத்தையும் கொடுக்கும். மேலும், மணிச்சத்து பொஸ்பரஸ் எனும் உரம் தாவரத்திற்கு சரியாகக் கிடைக்கும் பொழுது வேர்பகுதி அதிகமாக வளர்வதால் பயிர் கீழே சாய்ந்து விடாமல் மண்ணிலே நிற்கிறது (Jeyaraj, 2019). இவ்வாறே, ஒவ்வொரு உரத்தையும் சரியான முறையில் தாவரங்கக்கு வழங்கும் போதே அது செழிப்பாக வளர்ந்து, சரியான அறுவடையையும் பெற்றுத் தரும். சரியான முறையில் இரசாயன உரம் கிடைக்கப்பெறாமையினால் தமது விளைச்சலில் பாதிப்பை சந்தித்துள்ளதாக இலங்கை விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். இதுவரை காலமும் சரியான முறையில் தங்களுக்கு உரம் கிடைத்ததாகவும், இதனால் தமது விவசாயத்தை முறையாக மேற்கொள்ள முடிந்ததுடன், விளைச்சலிலும் திருப்தியையே கண்டனர். ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள உரத்தட்டுப்பாட்டினால் விளைச்சல் பாதிக்கு பாதி குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அனைத்து விளைச்சலுமே குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையில் முன்னர் ஒன்றுக்கு பதினைந்து என்ற விகிதத்தில் விளைந்த வெங்காயம், உரம் இல்லாத காரணத்தினால் ஒன்றுக்கு நான்கு அல்லது ஒன்றுக்கு ஐந்து என்ற விகிதத்திலேயே அறுவடை செய்ய முடிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே, உரத் தட்டுப்பாட்டின் காரணமாக பாரிய அளவில் விளைச்சல் குறைந்துள்ளதாகவே விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விவசாயத்தை மேற்கொள்ளும் போது உரமானது சரியான அளவில் வழங்கப்படுவது மிக அவசியமானதாகக் காணப்படுகின்றது. சரியான அளவில் உரத்தை இடுவதனூடாகவே நாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெறக் கூடியதாக இருக்கும். உரத்தின் அளவு குறைந்தாலோ, கூடினாலோ அது தாவரத்திற்கு பாதிப்பையே ஏற்படுத்தும். அந்தவகையில், தழைச்சத்து நைட்ரஜன் எனும் உரமானது தாவரங்களுக்கு குறைவாகக் கிடைக்கும் போது, செடியின் உயரமும் வடிவமும் சிறிதாகிப் போகும். இலைகள் சின்னச் சின்னதாக பசுமை நிறம் குறைந்து காணப்படும். மேலும், இலைப்பரப்பு சிறிதாகக் காணப்படுவதன் காரணத்தினால் மகசூலும் குறைந்து போகும். அவ்வாறே, மணிச்சத்து பொஸ்பரஸ் எனும் உரமானது தாவரங்களுக்கு குறைவாகக் கிடைக்கும் பொழுது பழைய இலைகள் கருநீல சாம்பல் நிறத்தில் தோன்றும். வேரினைப் பிடுங்கிப் பார்த்தால் தவறான வடிவமைப்பில் காணப்படும். இவ்வாறே, உரமானது சரியான அளவில் கிடைக்கும் போதே தாவரமானது செழிப்பாக வளரும். எனவே, தற்போது இலங்கை விவசாயிகளுக்கு போதுமான அளவு உரம் கிடைப்பதில்லை என கலந்துரையாடலின் போது குறிப்பிட்டுள்ளனர். முன்னர் அரசாங்கம் விவசாயத்திற்கு தேவையான அளவு உரத்தை மானிய விலையில் வழங்கியது எனவும், உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள பின்னர் விவசாயத்திற்கு தேவையான அளவு உரம் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒரு ஏக்கருக்கு 106 கிலோ யூரியாவும், 30 கிலோ எம்.ஏ.பியும், 35 கிலோ டி.எஸ்.பியும் மானிய விலையில் விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டது. இப்போது யூரியா 64 கிலோவாகவும், பொட்டாசியம் 16 கிலோவாகவும், பொஸ்பேட் 16 கிலோவாகவும் குறைக்கப்பட்டுள்ளது (இயற்கை வேளான்மைக்கு…,2021). ஒரு ஏக்கரில் விவசாயம் செய்யும் போது இது விவசாயத் தேவைக்கு போதாததாகவே காணப்படுகின்றது என விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். அத்தோடு இவ்வாறு குறைந்த அளவு உரத்தை இட்டு விவசாயத்தை மேற்கொள்ளும் போது பயிர்கள் செழிப்பில்லாமலும், வாடிய அமைப்பிலுமே காணப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு முன்னர் மேற்கொண்ட பசுமையான அறுவடையைப் போன்ற அறுவடையைக் காண முடிவதில்லை, இதற்குக் காரணம் குறைவான அளவு உரமேயாகும் என விவசாயிகள் பதிவுசெய்துள்ளனர்.

ஒரு விவசாயம் மேற்கொள்ளும் போது மண் என்பது அடிப்படையானதாகக் காணப்படுகின்றது. மண்ணின் Ph பெறுமானத்தை வைத்தே விவசாயம் மேற்கொள்ளப்படுகின்றது. Ph என்பது ஹைட்ரஜன் ஆற்றல் என்பதையே குறிக்கும். ஒரு மண்ணின் Ph மதிப்பு மண் துகள்களால் தக்கவைக்கப்பட்ட அயனிகளின் செறிவு மற்றும் கரிமப் பொருள்களாகும். Ph அளவு 0 முதல் 14 வரை இருக்கும். Ph 7 நடுநிலையாகும். 7 க்குக் கீழ் உள்ள அளவீடுகள் மண் அமிலமானது என்றும் 7 க்கு மேலே உள்ள அளவீடுகள் கார மண் எனவும் குறிக்கப்படுகின்றது. எனவே பல ஆண்டுகளாக இலங்கை விவாசாய நிலங்களில் இரசாயனப் பசளையைப் பயன்படுத்தியே விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதனால் மண்ணின் தன்மையில் மாற்றங்கள் ஏற்பட்டள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது அமிலத்தன்மையானது அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிக காலம் இரசாயன பசளையைப் பயன்படுத்திய மண்ணில் திடீரென சேதனப் பசளையைப் பயன்படுத்தி சரியான விளைச்சலைப் பெற முடியாது என விவசாயிகள் கூறுகின்றனர். பல ஆண்டுகளாக அசேதனப் பசளைக்கு பழகிவிட்ட எமது விவசாய நிலங்களில் உரிய முறைகளைப் பின்பற்றி சேதனப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படாவிடின் அது பாரிய பிரச்சினையைத் தோற்றுவிக்கும் என, இலங்கை மணல் சார் ஆய்வு சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, திடீரென சேதனப் பசளையைப் பயன்படத்தி விவசாயம் செய்வதென்பது முடியாதவிடயம் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். மேலும் விவசாயிகள் குறிப்பிடும் போது, தற்போது நாம் பயன்படுத்தும் விதைகள் விஞ்ஞான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்பட்ட விதைகளாகும். அவற்றுக்கு இரசாயன உரங்களே தேவைப்படும். மாறாக இயற்கைப் பசளையைப் பயன்படுத்துவதால் எதிர்பார்க்கும் விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளனர். மேலும், எதிர்பார்க்கும் உரங்களைப் பாவிக்கும் போது முதலில் மண்ணைப் பதப்படுத்த வேண்டும். அதன் பின்னரே விதைகளையோ, கன்றுகளையோ நட வேண்டும். எனவே, மண்ணைப் பண்படுத்தும் பொறிமுறைக்கு நேரமும் செலவும் அதிகமாகும். எனவே, இரசாயனப் பசளைக்கு பழக்கப்பட்ட மண்ணுக்கு முழுமையாக சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்வது மிகவும் கடினமான விடயம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

ஆரம்ப காலத்திலிருந்தே மனிதன் விவசாயத்தை மேற்கொள்ள சேதனப் பசளைகளையே பயன்படுத்தி வந்தான். சேதனப் பசளையைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ளும் போது சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும். அதற்கென்றே உள்ள நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறான முறையில் விவசாயத்தை மேற்கொள்ளும் போதே சரியான, எதிர்பாரத்த அறுவடையைப் பெறக் கூடியதாக இருக்கும். பல வருடங்களாக இரசாயன உரத்தைப் பயன்படுத்தி வந்துள்ள இலங்கை விவசாயிகளுக்கு சேதனப் பசளையைப் பயன்படுத்தும் முறையானது புதிதானதாகவும் கடினமானதாகவும் காணப்படுகின்றது. சரியான முறையில் சேதனப் பசளையைப் பயன்படுத்தும் முறைகள் அவர்களுக்கு பழக்கமில்லாமலேயே காணப்படுகின்றது. எனவே, சரியான முறையில் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். அத்தோடு, அரசாங்கம் இரசாயன உரத்திற்கான தடையை அறிவித்தவுடன் அதிக வசதிபடைத்தவர்கள் அதிகமான பணத்தைக் கொடுத்து இரசாயன உரத்தை வாங்கி பதுக்கி வைத்து, மிகக் கூடுதலான விலைக்கு அவற்றை விற்று வருகின்றனர். தமது அறுவடையினூடே கிடைக்கப் பெறுகின்ற மொத்தப் பணமுமே வெறும் உரத்திற்கே செலவாகின்றது எனவும், இவ்வாறான அறுவடையினூடே தமக்கு நட்டம் தான் ஏற்படுகின்றது எனவும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் தற்போதைய சிறுபோகத்துக்கு தேவையான இரசாயன உரம் கையிருப்பில் உள்ளதாகவும் அடுத்துவரும் பெரும்போகத்துக்கே உரத்தட்டுப்பாடு நிலவும் என்றும் அரசு அறிவித்துள்ளது. ஆனால் மலையகம் போன்ற இடங்களில் அனைத்து நாட்களுமே மரக்கறிப் பயிர்செய்கை இடம்பெறுகின்றது. எனவே, இவ்வாறான விவசாயிகளின் நிலையே கவலைக்கிடமானதாகக் காணப்படுகின்றது.

உண்மையில் ஏனைய தொழிளாலர்களை விட அதிகம் கஷ்டப்பட்டு குறைந்தளவு வருமானம் பெறுகின்றவர்கள் விவசாயிகளே. அந்தக் கொஞ்ச வருமானத்தை வைத்தே தமது வாழ்வை நடத்தி வருகின்றனர். விவசாயத்தில் ஏற்படும் நட்டத்தையே ஈடு செய்ய முடியாமல் உள்ளனர். இந்நிலையில் விவசாயிகளுக்கு உரத்தட்டுப்பாடு என்பது பெரும் இடியாகவே உள்ளது. அவர்கள் அவர்களது அறுவடைப் பணத்தை நம்பியே உள்ளனர். தமது வீட்டுத் தேவைகள், பிள்ளைகளின் கல்விச் செலவு போன்ற அனைத்தையுமே அதனைக் கொண்டே நிறைவு செய்ய வேண்டும். நாட்டில் ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்புமே விவசாயிகளின் பொருளாதார நிலைக்கு பாரிய சவாலாக உள்ளது. இவ்வாறு இருக்கையில் உரக் தட்டுப்பாட்டின் காரணமாக விளைச்சலானது பாதிக்கு பாதி குறைவடைந்துள்ளது. அதேநேரம் செலவும் முன்னைய நாட்களை விட அதிகமாகும். எனவே, உரத் தட்டுப்பாட்டின் காரணமாக எதிர்பார்த்த விளைச்சலைப் பெற முடியாத நிலையில் விவசாயிகளின் பொருளாதார நிலையானது கேள்விக்குறியாகவே உள்ளது. அதிலும் அநேகமான விவசாயிகள் நிலத்தை குத்தகைக்கு எடுத்தே விவசாயம் மேற்கொள்கின்றனர். இவ்வாறு குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் போது பாரிய முதலீடு தேவைப்படுகின்றது. எனவே, இந்த உரத் தட்டுப்பாட்டின் காரணமாகக் கிடைக்கும் இலாபமானது முதலீடுகளை விடவும் குறைவானதாகவே காணப்படுகின்றது என விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். எனவே, உரத்தட்டுப்பாட்டின் காரணமாக எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியாமல் குடும்பச் செலவுகளுக்கும் பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்கும் தேவையான அளவு வருமானம் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். அத்தோடு அதிகமான விவசாயிகள் கடன் பெற்றே தமது விவசாயத்திற்குத் தேவையான முதலீடுகளை மேற்கொள்கின்றனர். வரக் கூடிய அறுவடை வருமானத்தைக் கொண்டே கடனை அடைக்கவிருப்பதோடு அவர்களது ஏனைய செலவீனங்களையும் பார்க்க வேண்டும். எனவே, தற்போது விளைச்சலினால் வரக்கூடிய வருமானமானது முன்னைய விடவும் குறைவாகக் காணப்படுவதால் தமது கடனை அடைக்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறான பல்வேறுபட்ட சாவால்களையே உரத் தட்டுப்பாட்டின் காரணமாக இலங்கை விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர்.

**முடிவும் பரிந்துரைகளும்.**

ஆரம்பகாலத்திலிருந்தே விவசாயம் என்பது இலங்கையின் முக்கிய பொருளாதார முறையாகவே காணப்படுகின்றது. முன்னைய கால விவசாயத்திற்கு முழுமையாக சேதனப் பசளையே பயன்படுத்தப்பட்டது. ஆனால், காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டும், அதிகரிக்கும் சனத்தொகையின் காரணமாகவும் கூடிய விளைச்சலைக் குறுகிய காலத்திற்குள் பெற வேண்டும் என்ற நிலை தோன்றியது. எனவே, இரசாயன விதைகள் மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாடானது படிப்படியாக அதிகரித்து வந்தது. அந்தவகையில், கடந்த சில தசாப்தங்களாக இலங்கையின் விவசாயமானது முழுமையாக இரசான உரத்தை நம்பியே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இரசாயன உரமானது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அரச மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இவ்வாறான இரசாயன உரத்தின் பயன்பாட்டால் இலங்கை விவசாயிகளுக்கு எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருந்தது. இவ்வாறிருக்கையிலே, ஆரோக்கியமான எதிர்காலத்தை முன்னிட்டு இலங்கை அரசாங்கமானது இரசாயன உரத்தை தடை செய்துள்ளது. திடீரென இரசாயன உரம் தடைசெய்யப்பட்டுள்ளமையினால் விவசாயிகள் பல்வேறான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இரசாயன உரம் இன்றிய காரணத்தினால் முன்பை விட அறுவடையானது பாதிக்கு பாதி குறைந்துள்ளது. அதேநேரம், முன்னர் ஒரு ஏக்கருக்குக் கிடைத்த உரத்தின் அளவை தற்போது பெற்றுக்கொள்ள முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். அத்தோடு, சேதனப் பசளையைப் பயன்படுத்தி சரியான முறையில் பயிர்செய்கை செய்யும் முறையை அறியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். பல ஆண்டுகளாக இரசாயன உரத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்த நிலத்தில் இயற்கை உரப்பாவனை என்பது சாத்தியமில்லாத ஒன்று, என்றே விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான உரத்தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிகள் எதிர்கொண்டிருக்கும் சவால்களை எவ்வாறு குறைகக்லாம் அல்லது அதற்கான மாற்று வழிகள் என்ன? என்பதை நோக்குவோம். இரசாயன உரப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் நடைமுறை ரீதியில் விவசாயிகளுக்கு உடனடியாக சில சிக்கல்களை ஏற்படுத்தினாலும் எதிர்கால சந்ததியும், அவர்களுக்கு நஞ்சற்ற நிலமும் மீதமாகும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். என்றாலும், தற்போது விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கம் உடடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அந்தவகையில், சரியான, தரமான சேதனப் பசளையை உடனடியாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். ஏற்னவே சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதனப்பசளையானது இலங்கை மண்ணுக்குப் பொருந்தாது என ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பசளையை இறக்குமதி செய்ய முன்னர் அதனை நன்கு ஆய்வு செய்து தரமான பசளையையே இறக்குமதி செய்ய வேண்டும். அதேநேரம், முன்னர் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு பசளை வழங்கப்பட்டதோ அதே அளவான பசளையையே தற்போதும் வழங்க வேண்டும். சேதனப் பசளையைப் பயன்படுத்தி எவ்வாறு செழிப்பான அறுவடையைப் பெற்றுக் கொள்ளலாம்? எனும் விடயத்தை அரசாங்கமானது விவசாயிகளுக்கு அறிவூட்ட வேண்டும். இலங்கையிலேயே சேதனப் பசளையை உற்பத்தி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மண்ணுக்குப் பொருத்தமான தரமான சேதனப் பசளையை இலங்கையிலேயே உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொண்டு விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதேநேரம், ஆரோக்கியமான எதிர்காலத்தை முன்னிட்டு இது ஒரு சிறந்த முடிவு என்பதை விவசாயிகள் புரிந்து கொண்டு, மாற்றுவழிகளினூடாக முன்பைப் போன்று விவசாயத்தை மேற்கொள்ள விவசாயிகளும் முயற்சிக்க வேண்டும் எனவும் இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

**உசாத்துணைகள்**


- Jeyaraj, M. (2019, October 08) வேளாண்மையில் உரங்கள் ஏன்? ஏதற்கு? எப்படி? Kalanipoo. https://www.kalanipoo.com
- Vijayanandhan, M. (2021, October 17). உக்கிரமடையும் உரப் பிரச்சினை. Tamilmirror. https://www.tamilmirror.com
- Samyukthan. (2021, October 31). அரசு உறுதியளித்த பின்னரும் இன்னுமே முடிவுக்கு வராத விவசாயிகள் போராட்டம். *Vaaramanjari.* https://www.vaaramanjari.com
- இயற்கை வேளாண்மைக்கு மாறியதால் இலங்கையில் உணவுப் பஞ்சமா? உண்மை என்ன?. (2021. September 17). bbc. https://www.bbc.com
- இரசாயன உரத்தடை! புயிர் வளர்த்தவர்கள் அச்சத்தில். (2021, August 03). Tamiljourno. https://www.tamiljourno.com
- விவசாயம் அன்றும் இன்றும். (2019, July 07). Altamiltips. https://www.altamiltips.com

# பெற்றோரின் வெளிநாட்டு வாழ்வும் பிள்ளைகளின் தவிப்பும்

**M.J.F. Sana Anjum**

Department of Arabic Language,
South Eastern University of Sri Lanka.

*fathimasanaanjum@gmail.com*



**ஆய்வு அறிமுகம்.**

மனிதன் கல்விக்கும் பொருளாதாரத்துக்குமே அதிகப் பிரயத்தனம் எடுப்பதாக அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். மனப் பசிக்கு கல்வியும், உடற்பசிக்கு பொருளாதாரமுமாக மனிதன் ஆக்கப் படுகிறான். (ஏ.எல் நௌபீர், 2016)

இன்றைய இளைஞர்களின் இலட்சியமாக வெளிநாட்டு மோகம் காணப்படுகிறது. அவர்களுடைய கல்வி வாழ்வை முடிக்க முன்பே வெளிநாடு நோக்கிப் பயணிக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேவைக்காக பயணிக்கிறார்கள். அவர்களுக்கு குறிப்பிட்ட வயது வந்த பிறகு சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து திருமணம் முடித்துவிட்டு மீண்டும் வெளிநாட்டிற்கே பயணிக்கிறார்கள். அதில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அவர்களுடைய குடும்பத்தையும் அழைத்துக்கொண்டு வெளிநாடு செல்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய சம்பளம் அவர்களுடைய குடும்பத்தையும் வெளிநாட்டில் வைத்துப்பார்க்க போதாமையாகும்.

இன்னும் சில குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் பொறுப்பற்றுக் காணப்படுகின்ற போது, பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக குடும்பத் தலைவிகள் வெளிநாடு நோக்கிப் பயணிக்கிறார்கள் இன்னும் சிலர் குடும்ப செலவுகள் அதிகரிக்கும் போதும் வெளிநாடு நோக்கிப் பயணிக்கிறார்கள். வெளிநாட்டு வேலைக்காக பயணித்தல் இலங்கைக்கு அந்நிய செலாவணியை தரும் துறைகளில் மிக முக்கியமான துறையாக காணப்படுகிறது. (வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், 2018) இதனாலேயே இலங்கை அரசாங்கம் இதனை தடை செய்யாமல் இருக்கிறது.

முக்கியமாக, குடும்ப வறுமையை நீக்குவதற்கும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கும் மற்றும் வெளிநாடு சென்று சம்பாதிக்க வேண்டும் என்ற மோகம் போன்ற சில காரணங்களுக்காக வெளிநாடு நோக்கி பயணிக்கிறார்கள். (வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ,2018)

இலங்கையில் வெளிநாட்டு வீட்டுப் பணியாளர்களாக செல்கின்ற வரிகளில் 86% மானோர் பெண்களாகவே இருக்கிறார்கள். வீட்டுப் பணியாளர்களாகச் செல்லும் பெண்களில் அதிகமானோர் (90% மானோர் ) பிள்ளைகளைக் கொண்ட தாய்மார்கள் ஆவர். (சுஹீரா ,ஸாதிபா, சுனுமி, 2020)

ஒரு குடும்பத்தில் பெற்றோரானது அக்குடும்பத்தின் பிரதான உறுப்பினர்கள் ஆகும். ஒரு குழந்தை பிறந்தது முதல் அக்குழந்தைக்கு பெற்றோர்களே ஆசிரியர்களாக செயற்படுகின்றனர். பெற்றோரின் அன்பையும், பாசத்தையும் வேறு யாராலும் ஈடு செய்ய முடியாது. குறிப்பாக தாய்மார்கள் வெளிநாடு செல்லும்போது தமது பிள்ளைகளுக்கு குடும்ப ரீதியான, சமூக ரீதியான, உணர்வு ரீதியான பாதுகாப்புகளை வழங்குவதற்காக அத்தாய்மார்கள் குடும்ப உறவினர்களின் கண்காணிப்பில் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு தொழிலுக்காகச் செல்கின்றனர். தாய்மார்கள் வெளிநாடு செல்வதாயின் அவர்களின் ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை உறவினர்களின் அல்லது தந்தையின் பராமரிப்பில் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு செல்வதனை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அனுமதித்துள்ளது. (சுஹீரா ,ஸாதிபா, சுனுமி, 2020) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியானது இலங்கையில் அதிகமான தாய்மார்கள் வறுமையை காரணமாக வைத்து வெளிநாடு செல்வதற்கு காரணமாக அமைகிறது.

இவ்வாறு பெற்றோர் வெளிநாடு செல்கின்றமையால் குடும்பங்களில் பொருளாதார நிலை அதிகரித்துள்ளது மற்றும் குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதித்தலும் வெற்றி அடைகின்றது. அதே சமயம் குடும்ப ரீதியாக அவர்களை தங்கி வாழ்பவர்களுக்கு பல பாதகமான தாக்கங்கள் ஏற்படுத்தியுள்ளதை ஆய்வுகள் முன்வைக்கின்றன.

### ஆய்வுப் பிரச்சினை

குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக பெற்றோர் வெளிநாடு செல்கின்றனர். இதனால் அவர்களுடைய குடும்ப பொருளாதாரத்தில் பல சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. (Antman, Francisca, 2014 :;Dias, 2004: Ismiya begam, mazahir, shajahan, 2015) பல சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தினாலும் அவர்களை தங்கி வாழ்கின்ற அவர்களின் குடும்பத்தில் குறிப்பாக பிள்ளைகளிடத்தில் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பல பாதகமான தாக்கங்கள் ஏற்படுத்தியுள்ளதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. (Rasika, 2015 ; : Ismiya begam, mazahir, shajahan, 2015 )

ஆகவே பெற்றோர் வெளிநாடு செல்கின்ற மையால் அவர்களை தங்கி வாழ்கின்ற பிள்ளைகளிடம் ஏற்பட்டுள்ள உடல் உள்ள தாக்கங்களை அடையாளப்படுத்துவதை ஆய்வு பிரச்சினையாக கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

### தரவுப் பகுப்பாய்வு.

தனிமனிதன் சேர்ந்து குடும்பம் உருவாகிறது. குடும்பம் பல சேர்ந்து சமூகம் உருவாகிறது. ஆண் எனும் தனிமனிதனும், பெண் எனும் தனிமனிதனும் சட்டரீதியாக இணைந்து உருவாக்கும் நிறுவனமே குடும்பமாகும். ஒரு குடும்பம் சீராக வாழ்வதற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சில கடமைகளையும், வழிகாட்டல்களையும், உரிமைகளையும், மதங்களும் மூத்த தலைவர்களும் கூறியுள்ளனர். அவ்வாறு வாழும் போதே குடும்பம் சீராக அமையும்

ஒரு பிள்ளை சீரான முறையில் வளர்வதற்கு தாயின் அரவணைப்பும், தந்தையின் கண்டிப்பும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. உலகம் நவீனத்துவத்தை நோக்கி முன்னேறிக் கொண்டே செல்கிறது. மனிதனுடைய தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தேவைகளை நிறைவேற்றுவதற்கும், உலக பொருளாதார அமைப்புக்கேற்ப வாழ்வை திட்டமிட்டுக் கொள்வதற்கும் மக்கள் அவர்களது பொருளாதார நிலையை அதிகரிக்க முயற்சிக்கினறாரகள். குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படுகிறது. இதற்காக குடும்ப பொறுப்பில் இருக்கின்ற தாய் தந்தையர்கள் வெளிநாடு சென்று சம்பாதிப்பதை தேர்ந்தெடுக்கிறார்கள். தாய் தந்தையர்கள் வெளிநாட்டு வாழ்வை தேர்ந்தெடுப்பதால், அவர்களுடைய பிள்ளைகள் பல பிரச்சினைகளையும் சவால்களையும் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் முகம் கொடுக்கின்றனர். இது தொடர்பாக பல ஆய்வுகள் ஆராயப்பட்டுள்ளன. (Suheera, sadhifa,zunoomy,2020 ; Ismiya begam, mazahir, shajahan, 2015).

பெற்றோர் வெளிநாடு நோக்கி பயணிப்பதற்கு முக்கிய காரணங்களை ஆய்வுகள் முன்வைத்துள்ளன. அதனடிப்படையில், கடன் சுமை, வீட்டின் பொருளாதார சுமைகள் , உள் நாட்டில் போதிய வருமானம் பெற முடியாமை, பிள்ளைகளின் கல்விச் செலவுகள், உள் நாட்டில் ஒழுங்கான தொழிலை பெற்றுக் கொள்ள முடியாமை, குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்க வேண்டிய தேவை, வெளிநாட்டு அவா போன்ற சில காரணங்களுக்காக வெளிநாடு நோக்கி பயணிக்கிறார்கள். குறிப்பாக தாய்மார்கள் வெளிநாடு செல்வதற்கு முக்கிய காரணம் பொறுப்பற்ற, குடி போதையில் மூழ்கி இருக்கின்ற கணவன்மார்கள் மற்றும் கணவனை இழந்ததால் குடும்ப வறுமைக்காகவுமே பயணிக்கிறார்கள். மேற்படி காணரங்களையே ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளும் அடையாளப்படுத்தியுள்ளன. பெற்றோர் வெளிநாடு நோக்கிப் பயணிப்பதில் அதிகமாக பாதிக்கப்படுவது பிள்ளைகளின் கல்வி நிலையும் அவர்களின் எதிர்காலமும் தான்.

ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி பெற்றோர் வெளிநாட்டுக்கு சென்றமையால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களாக, கடன் பிரச்சினை தீர்ந்து உள்ளதாகவும், பெண் பிள்ளைகளுக்கு திருமணம் முடித்துக் கொடுக்க முடியுமாக இருந்தது, கடுமையான வறுமை நீங்கியது, பிள்ளைகளின் உயர் கல்வியைத் தொடர முடிந்தது, கணவருக்கு தொழில் கிடைத்தது என அடையாளப்படுத்தியுள்ளனர்.

ஆனால் அவ்வாறு வெளிநாடு சென்றமையால் ஏற்பட்ட தாக்கங்களையும், பிரச்சினைகளையும் நோக்கும்போது, பிள்ளைகளின் கல்வி நிலை பின்னடைவு, பிள்ளைகள் துஷ்பிரயோகங்களை எதிர்நோக்கல், உறவினர்கள் அப்பிள்ளைகளிடம் வேலை வாங்குதல், பெண் பிள்ளைகளை துன்புறுத்துதல், பெண் பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்நோக்கல், ஆண் பிள்ளைகள் தாய்க்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் கட்டுப்படாமை, பேராசை அதிகரித்தல், ஆடம்பர மோகம், கெட்ட பழக்க வழக்கங்களுக்கு உள்ளாதல், குடும்ப உறுப்பினர்களை மதிக்காமை, பிள்ளை தந்தை உறவில் விரிசல், பிள்ளை தாய் உறவில் விரிசல், பிள்ளைகள் தந்தையை வெறுத்தல், பிள்ளைகள் தாய் பாசத்திற்காக அல்லது தந்தை பாசத்திற்காக ஏங்குதல், வீட்டில் ஒழுங்கான பாதுகாப்பின்மை, குழந்தைகள் மன அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளமை போன்ற பாதகமான தாக்கங்களையும் அடையாளப்படுத்தியுள்ளனர்.

வெளிநாட்டு மோகம் வந்துவிட்டாலே குடும்பம் மற்றும் பிள்ளைகளின் நிலைமை கேள்விக்குறியாக மாறுவது யதார்த்தம். வெளிநாட்டு மோகத்தினுள்ளே தம் வாழ்வை புதைத்துக்கொண்டு மீள முடியாமல் உடல் உள ரீதியாக பாதிக்கப்பட்டு தவிக்கும் தனிமனிதர்கள் சில சமயம் உயிர்களையும் இழந்திருக்கின்றனர்.

அவ்வாறு வெளிநாட்டில் உயிர்களை இழந்த பின் அவர்களை தங்கி வாழ்கின்ற அவர்களின் பிள்ளைகளின் அழுகையையும், கதறல்களையும் பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கும். பாடசாலையில் பெற்றோர் வெளிநாட்டில் இருக்கின்ற பிள்ளைகளுக்கும், பெற்றோர் பிள்ளைகளுடனே இருக்கின்ற பிள்ளைகளுக்கும் அதிக வேறுபாடுகளை அவதானிக்கலாம். பெற்றோர் வெளிநாட்டில் இருக்கின்ற பிள்ளைகள் தாயன்பு அல்லது தந்தை பாசத்திற்காக ஏங்குவதையும், மாணவர்கள் அவர்களுடைய குடும்பக் கதைகளை கதைக்கும் போது அக்குறிப்பிட்ட பிள்ளைகள் மட்டும் அமைதியாக கேட்டுக் கொண்டு விட்டு பின்பு கண்ணீர் வடிப்பதும் காணலாம். பாடசாலை என்பது ஒரு வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் ஒன்று சேரும் இடமே. அங்கு கல்வி கற்பது மட்டுமல்லாமல் மாணவர்கள் சேர்ந்து பலவாறான விடயங்களும் கதைப்பார்கள். பெற்றோர் வெளிநாட்டில் இருக்கின்ற பிள்ளைகளின் கல்வி நிலையை அவதானிக்கும்போது அதிகமானோரின் கல்விநிலை பின்தங்கியதாகவே காணப்படுகிறது. அப்பிள்ளைகள் கல்வியில் காட்டுகின்ற விருப்பும் குறைவாகவே காணப்படுகிறது. அம்மாணவர்கள் அதிகமாக பணம் செலவு பண்ண கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்களிடம் கெட்ட பழக்க வழக்கங்களையும் அவதானிக்க முடியுமாக உள்ளது. கெட்ட நண்பர்களுடனும், தன்னுடைய வயதுக்கு மேற்பட்ட நண்பர்களுடனும் நட்பு கொள்வதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சுஹீரா,சாதிபா,சுனுமி மற்றும் ஏனையோரின் ஆய்வின்படி, தாய் அவர்களின் தாயிடம் பிள்ளைகளை பொறுப்பில் வைத்துவிட்டு வெளிநாடு சென்ற பின்னர். தாயின் தாயிக்கு வயது முதிர்வு காரணமாக அவர்களால் பிள்ளைகளை பராமரிக்க முடியாததால் இக்குடும்பத்தின் முதல் பெண் பிள்ளைகள் அவர்களின் சகோதர சகோதரிகளின் கடமைகளை செய்து அவர்களைப் பராமரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இதனால் மூத்த பெண் பிள்ளைகள் தாமாகவே பாடசாலைக் கல்வியை கைவிட வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளியுள்ளது. இவ்விடயம் பற்றி அப்பெண் பிள்ளைகள், எனக்கு படிக்க வேண்டும் என்ற ஆசை இன்னும் உள்ளது ஆனாலும் பாடசாலை கல்வியை கை விட்டேன். தம்பி தங்கைகள் பாடசாலை செல்வதனால் அவர்களின் ஆடைகளை கழுவ வேண்டும் நேரத்திற்கு உணவு சமைத்து கொடுக்க வேண்டும் நானும் பாடசாலைக்கு செல்வதானால், காலை உணவு பகலுணவு இரண்டையும் சமைத்து விட்டேன் பாடசாலைக்குப் போக வேண்டும். தம்பி தங்கை சுகவீனமுற்றால் அவர்களை கவனிக்க வேண்டும். இவ்வாறான பல வேலைகளை நான் பார்க்க வேண்டியுள்ளது. எனது தாயின் தாய் வயதானவராக இருப்பதனால் இவற்றை அவரால் செய்ய முடியாதுள்ளது. அதனால் நான் தான் அனைத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது.

எனவே இரண்டாம் நிலை தரவுகளை மையப்படுத்தி எழுதப்பட்ட இந்த ஆய்வுக் கட்டுரையின் படி, பெற்றோர் வெளிநாடு செல்வதால் பொருளாதாரத்தில் சாதனமான தாக்கங்கள் இடம்பெற்றாலும் பாதகமான தாக்கங்களை அதிகம் காணப்படுகின்றன. என்பதனை இக்கட்டுரை மூலம் விளங்கலாம்.

## முடிவுரை

அதிகமானோர் குடும்ப வறுமை காரணமாகவே வெளிநாடு நோக்கி பயணிக்கின்றனர். வறுமை காரணமாக வெளிநாடு சென்று பொருளீட்டுவதில் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. அதேநேரம் அவர்களை தங்கி வாழ்கின்ற அவர்களின் குடும்பத்தினரின் மத்தியில் பிரச்சினைகளும், பாதகமான தாக்கங்களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. என்பதனை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் விளங்கலாம்.

## உசாத்துணைகள்,


- இஸ்மியா பேகம் எம்.எஸ், மதாஹிர் எஸ்,எம், எம்,ஜஹான் வை.எம், (2015), ஆண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதனால் ஏற்படும் குடும்பவியல் தாக்கங்கள்: நிக்கவேவ கிராமத்தை மையப்படுத்திய ஆய்வு.
- சுஹிரா எம்.வை.எம், சாதிபா எம்.சி.எஸ், சுனூமி எம்.எட், (2020), தாய்மார்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பும் பெண் பிள்ளைகள் மீதான அதன் தாக்கமும்.
- மெய்மனா ஏ.டீ.பீ, ஆதில் ஏ.எஸ், ஷப்னா எம்.ஏ.எப், ஷப்னா எம்.எட்.எப், வேலைக்குச் செல்லும் பெற்றோரது பிள்ளைகளின் நிலைப்பாடு : ஹெம்மாதகமை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு.
- கோபிகா.கே,ஜயபிரிய.ஏ,(2016),மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலகப்பிரிவில் பெண்களின் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மூலமான பொருளாதார தாக்கங்கள் பற்றிய ஆய்வு.
- மங்கல ரன்தெனிய,(2013),வெளிநாடு செல்லும் ஆண்களுக்கு வட்டியில்லா கடன் இலங்கை அரசு, Retrieved from: https://www.bbc.com
- அஹ்ஸன் எம்.ஏ.எம்,(2019),வெளிநாட்டில் பெற்றோர் சீரழியும் பிள்ளைகள், Retrieved from: https://www.vidivelli.lk
- நௌபீர்.ஏ.எல்,(2016),பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பி வைத்தல் சமூகப் பிரச்சினை
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,2018



# தற்காலத்தில் மஸ்ஜிதில் பணிபுரியும் இமாம்கள், முஅத்தின்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினைகள்

**S.M.M. Mazahir**
**(mazahirsmm@seu.ac.lk)**
Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka,

**M.S. Zunoomy**
**(zunoomy@seu.ac.lk)**
Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka,

**ஆய்வுச் சுருக்கம்:**

இஸ்லாமிய சமூக கட்டமைப்பில் மஸ்ஜித்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. மனிதனை இறைவனோடு ஐக்கியமாக்குகின்ற புனித இடமாக கருதப்படும் மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்களும், முஅத்தின்களும் வாழ்வாதார நிலையை பேணுவதில் இறுக்கமான நிலையில் உள்ளனர். குறிப்பாக, கொரோனா ஊரடங்கு காலப்பகுதி இவர்களின் நடைமுறை வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆய்வுப் பிரச்சினையாக முன்வைத்து இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. இலங்கையில் காணப்படும் மஸ்ஜித்கள், அவற்றின் பணிகள் தொடர்பான ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அந்த மஸ்ஜித்களில் பணிபுரியும் இமாம்கள், முஅத்தின்கள் ஆகியோரின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான வெகுசில ஆய்வுகளையே ஆய்வாளர்களின் தேடலுக்கு உட்பட்ட வகையில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இந்தவகையில், வாழ்வாதார நிலைமையை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கிய கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் இவ்விரு சாராரும் எதிர்நோக்கிய பிரச்சினைகளைப் பற்றியதாக அமைவதனால் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது. மஸ்ஜித் இமாம்கள், முஅத்தின்கள் ஆகியோர் ஊரடங்கு காலப்பகுதியில் எதிர்கொண்ட பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். பண்பு ரீதியில் அமைந்த இக்கள ஆய்வானது, முதல்நிலைத் தரவுகளுக்காக ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் மஸ்ஜித்களில் பணியாற்றும் ஆறு இமாம்கள், ஆறு முஅத்தின்கள் நேர்காணப்பட்டனர். இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வுகள், நூற்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) விரிதாள் மூலம் விபரிக்கப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியில் அவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினை, மாத சம்பளம் குறைதல், திருப்தியின்மை, மன உளைச்சல், உதவிகளின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கியதாக இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

**திறவுச்சொற்கள்**: கொரோனா, ஊரடங்கு, மஸ்ஜித், இமாம், முஅத்தின்

## 1. அறிமுகம்:

இஸ்லாமிய சமூக கட்டமைப்பில் மஸ்ஜித்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. மனிதனை இறைவனோடு ஐக்கியமாக்குகின்ற புனித இடமாக கருதப்படும் மஸ்ஜித்கள் எனப்படும் இறையில்லங்கள், முஸ்லிம் சமூகத்தின் மத்தியதலம் என்றவகையில் இஸ்லாமிய வரலாற்றில் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றல் என்ற நிலையைத் தாண்டி அறிவுப்பணி, அரசியல் பணி, சமூகப்பணி, தனிமனித உருவாக்கம், ஆன்மீக விருத்தி, பண்பாட்டு சீர்திருத்தம், பொருளாதார நடைமுறைகள், கலந்தாலோசனை, நீதி செலுத்தல், சர்வதேச உறவுகளைப் பேணல் என பல உயர்ந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. இந்த அடிப்படையில் இஸ்லாமிய வரலாற்றில் குடும்ப, சமூக விவகாரங்கள் குறித்த கலந்துரையாடல்கள், அரசியல் விவாதங்கள், பொருளாதார சீர்திருத்தம், சமூக ஐக்கியம், இராணுவ பாசறை, கல்விச் சீர்திருத்தம் பண்பாட்டுப் பயிற்சியளித்தல், நீதி செலுத்தும் சட்டமன்றமாக இயங்குதல், சீர்திருத்த சபையாக இயங்குதல் என அவற்றின் பணிகள் விரிவுபடுத்தப்பட்டிருந்தன.

ஏனெனில் முஸ்லிம் சமூகம் வரலாற்றில் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மஸ்ஜித்களின் மேற்குறிப்பிட்ட பணிகள் தீர்வாகவும் வெற்றியாகவும் அமைந்தன. மஸ்ஜிகளின் பணி வெறும் வணக்கவழிபாடுகளுக்குள் மாத்திரம் எப்போது கட்டுண்டு முஸ்லிம்கள் தமது அனைத்து நடைமுறைகளையும் மஸ்ஜிதை விட்டு தூரமாகினார்களோ அன்றே வாழ்வின் அனைத்து துறைகளிலும் அவர்கள் வீழ்ச்சியையே சந்தித்தார்கள் என்பது இஸ்லாமிய வரலாறு புகட்டும் பாடமாகும். ஏனெனில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் ஒவ்வொரு தனிமனிதனையும் இஸ்லாமியமயப்படுத்தி, அதன் மூலம் ஆரோக்கியமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குவதில் பங்காற்றக் கூடிய ஒரு பொருத்தமான நிறுவனம் மஸ்ஜிதை தவிர வேறொன்றும் இருக்க முடியாது (நைரூஸ், 2017).

இவ்வாறு சமூக உருவாக்கத்தில் பங்களிப்பு செய்யும் மஸ்ஜித்களில் இமாம்கள், முஅத்தின்கள் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். மஸ்ஜிதுகளின் நம்பிக்கையாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்டு மஸ்ஜித்களில் கடமையாற்றும் இமாம்களின் பிரதான பணிகளாக ஐங்காலத் தொழுகைகளை தொழுவித்தல், அல்குர்ஆன் மத்ரஸா நடாத்துதல், பயான் நிகழ்ச்சிகளை நடாத்தல் போன்றன காணப்படுகின்றன. அவ்வாறே, மஸ்ஜிதுகளைப் பராமரிப்பதற்காக முஅத்தின்கள் நியமிக்கப்பட்டு, மாதாந்த சம்பளம் வழங்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதான், இகாமத் கூறுதல் அவர்களது பிரதான பணிகளாக இருப்பதோடு பள்ளிவாயில்களைத் துப்பரவு செய்தல், ஜனாஸா கடமைகளை மேற்கொள்ளல் போன்றவையும் அவர்களால் நிறைவேற்றப்படுகின்றன. இலங்கை முழுவதிலும் இவ்வமைப்பிலேயே மஸ்ஜிதுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (ஹில்பான் மற்றும் மஸாஹிர், 2019).

இவ்வாறானதொரு பின்னணியில் 2020இன் ஆரம்பத்தில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கம் இலங்கையை மாத்திரமல்லாது முழு உலகையுமே முடக்கிப் போட்டது. இதன்போது, உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும் ஊரடங்குகளும் தனிமைப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மார்ச் 20ஆம் திகதி முதல் நாடு தழுவிய ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது (பீபீஸி நியூஸ் தமிழ், 11 மே 2020). இச்சந்தர்ப்பத்தில் மஸ்ஜித்கள் அனைத்தும் மார்ச் 15ஆம் திகதி 2020 மூடப்படுவதற்கான அறிவித்தல் வெளியாகியது (பரீல், 2020). ஆனபோதிலும், ஐவேளை அதான் கூறுவதற்கு மாத்திரம் முஅத்தின்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு இலங்கை நாடே ஸ்தம்பிதமாகிய நிலையில் முஅத்தின்கள் தங்கள் பணியை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். ஊரடங்கால் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமம் காணப்பட்ட நிலையில், அவர்கள் தங்கள் பணியில் தொடராக இருந்தனர். இந்தவகையில், கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் அக்கரைப்பற்று மேற்குப் பகுதியான குடியிருப்பை மையமாக கொண்ட அக்கரைப்பற்று பிரதேச சபையில் அமைந்துள்ள மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை பற்றி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**2. ஆய்வுப் பிரச்சினை:**

கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் மஸ்ஜித்களில் பணிபுரியும் இமாம், முஅத்தின் ஆகிய இருசாராரின் நடைமுறை வாழ்வில் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது.

**3. ஆய்வின் முக்கியத்துவம்:**

இலங்கையில் காணப்படும் மஸ்ஜித்கள், அவற்றின் பணிகள் தொடர்பான ஆய்வுகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அந்த மஸ்ஜித்களில் பணிபுரியும் இமாம்கள், முஅத்தின்கள் ஆகியோரின் வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான வெகுசில ஆய்வுகளையே ஆய்வாளர்களின் தேடலுக்கு உட்பட்ட வகையில் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இந்தவகையில், வாழ்வாதார நிலைமையை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கிய கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் இவ்விரு சாராரும் எதிர்நோக்கிய சவால்களைப் பற்றியதாக அமைவதனால் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

**4. ஆய்வின் நோக்கம்:**

மஸ்ஜித் இமாம், முஅத்தின் ஆகியோர் ஊரடங்கு காலப்பகுதியில் எதிர்கொண்ட பிரச்சினைகளை அடையாளப்படுத்தல்.

**5. ஆய்வு முறையியல்:**

பண்பு ரீதியில் அமைந்த இக்கள ஆய்வானது, முதல் நிலைத் தரவுகளுக்காக ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் மஸ்ஜித்களில் பணியாற்றும் ஆறு இமாம்கள், ஆறு முஅத்தின்கள் நேர்காணப்பட்டனர். இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்விடயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வுகள், நூற்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் (MS Excel) விரிதாள் மூலம் விபரிக்கப்பட்டுள்ளன.

## 6. இலக்கிய மீளாய்வு:

"மஸ்ஜித்களில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலை: ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு", எம்.எல்.எம். ஹில்பான், எஸ்.எம்.எம். மஸாஹிர் (2019). இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட ஆறாவது சர்வதேச ஆய்வரங்கிற்கு சமர்பிக்கப்பட்ட இவ்வாய்வானது, ஏறாவூர் மஸ்ஜித்களில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலையையும், தொழில் திருப்தியையும் மதிப்பிடுவதாக அமைந்தது. மஸ்ஜித்களின் ஊடாகக் கிடைக்கப் பெறும் மாதாந்த வருமானம் போதாமையானது முஅத்தின்களின் வாழ்க்கையில் தொழில் திருப்தியின்மையையும் வாழ்வாதார சிக்கலையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆய்வுப் பிரச்சினையாக முன்னிறுத்தி இவ்வாய்வு நகர்ந்து செல்கின்றது. இலங்கையில் தனிநபர் வருமானம் மாதத்திற்கு சராசரியாக 55,568 ரூபாவாக அமையும் போது தான் அவரின் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியும். எனினும் குறித்த ஆய்வின் நேர்காணப்பட்டோரின் வருமானம் 30,000 ரூபாவை தாண்டிச் செல்லவில்லை என இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. அவ்வாறே, குறைந்த வருமானம் கிடைத்தாலும் இறைத் திருப்திக்காக தொடர்ந்து மஸ்ஜித்களில் முஅத்தின்கள் பணியாற்றி வருவதாக இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. முஅத்தின்களின் சேவைக்கேற்ப தனியான சம்பளத் திட்டத்தை வரையறுத்தல், வட்டியற்ற கடன் வழங்குதல், ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்தல் போன்ற பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.


இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட ஆறாவது சர்வதேச ஆய்வரங்கிற்கு சமர்ப்பிக்கப்பட்ட "சமூக புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு – கெகிராவை பிரதேச ஜூம்ஆ மஸ்ஜித்களை மையப்படுத்திய ஆய்வு", எம்.எச்.எம். நைரூஸ், எம்.எஸ். இஸ்மியா பேகம், ஐ. சப்னாஸ் (2017) எனும் ஆய்வானது மஸ்ஜித்களின் பணிகள் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மஸ்ஜித்கள் சமூகப் பங்களிப்புகள் போதியளவு இடம்பெறவில்லை என்பதை கண்டறியும் இவ்வாய்வானது இமாம்களுக்கான பொருத்தமான சம்பளமின்மை, பொதுமக்கள் ஐக்கியமின்மை, நிர்வாகிகளின் சுயநலமான போக்கு ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள பொறாமை, பொதுநலன்களில் மக்கள் ஆர்வம் காட்டாமை, மஸ்ஜித்களின் பணி குறித்து மக்களுக்கு போதிய விளக்கமின்மை, பிரதேச மக்களின் மஸ்ஜித்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருத்தல், வெறுமனே தொழுகைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டால் போதும் என்ற மனோநிலை, ஆய்வுப் பிரதேசங்களில் சமூக நல இயக்கங்கள் அரிதாக காணப்படுகின்றமை, இருக்கின்ற ஓரிரு அமைப்புக்களும் மஸ்ஜித்களுடன் தொடர்பற்று இயங்குகின்றமையும், இயக்கங்களுக்கடையில் ஐக்கியமின்மை, இருக்கின்ற ஓரிரு இயக்கங்களதும் பணிகள் போதியதாக இன்மை போன்ற பல விடயங்கள் மஸ்ஜித்களின் அனைத்துத் துறைகளையும் மையப்படுத்திய பணிகள் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதற்கான காரணங்களாக கண்டறியப்பட்டன. சமூக பணிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ள பிற மஸ்ஜித்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் பணிகளை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட முயற்சித்தல், மஸ்ஜித் நிர்வாகிகளின் தெரிவுகளை தகைமை அடிப்படையில் அமைத்துக் கொள்ளலும் தகைமையற்ற நிர்வாகிகளை பதவிவிலக்கி பொருத்தமானவர்களை தெரிவு செய்தலும் மஸ்ஜித் இமாம்களுக்கு போதிய சம்பளங்களை வழங்கல் ஊடாக அவர்கள் ஆர்வத்துடன் மஸ்ஜித் பணிகளை முன்னெடுக்க வழியமைத்தல் போன்றன ஆலோசனைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

"இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்குக் கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜிதுகளை மாதிரியாகக் கொண்ட ஆய்வு", எஸ்.எம்.எம். மஸாஹிர் (2015) எனும் ஆய்வுக் கட்டுரையானது இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள் பொது மக்களுக்கு மார்க்க அறிவை வழங்குவதில் தமது பங்களிப்பை உரிய முறையில் வழங்குவதில்லை. அதற்கான ஓர் ஒழுங்கும் திட்டமும் அவசியம் என்பதனை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொது மக்களுக்கு சமயக் கல்வியூட்டுவதில் மலேசியப் பள்ளிவாசல்கள் சிறந்த வழிமுறைகளை முன்னெடுத்துள்ளன. அவை இலங்கையிலுள்ள பள்ளிவாசல்களிலும் அமுல்படுத்தத்தக்கனவாக உள்ளன. மலேசியப் பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை இடம்பெறும் குத்பாக்கள், அதற்கு முன் இடம்பெறும் தத்கிரா, அன்றாட வகுப்புகள், அல் குர்ஆன் வகுப்புகள், நூல்நிலையங்கள், துண்டுப் பிரசுரங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலமாக மார்கக் கல்வி வழங்கப்படுகின்றது. அவற்றை இலங்கைச் சூழலுக்கு ஏற்றவகையில் அமைத்துக் கொண்டால் இலங்கை முஸ்லிம்களுக்கு பயன்மிக்கதாக அமையும் என்பன இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாக உள்ளன.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் மஸ்ஜித்களின் பணிகள் தொடர்பாக ஆராய்வதாகவும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலையைப் பற்றிப் பேசுவதாகவும் அமைகின்றன. எனினும் இவ்வாய்வானது மஸ்ஜித்களின் பணிபுரியும் இமாம்களும் முஅத்தின்களும் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை மையப்படுத்தி ஆராய்கின்றது. குறித்த காலப்பகுதியில் இவர்கள் எதிர்கொண்ட சவால்களை அடையாளங் காண்பதினூடாக எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்களுக்கான முன்னேற்பாடுகள் எவ்வாறு அமையப் பெற வேண்டும் என்பதையும் இவ்வாய்வு மையப்படுத்தியுள்ளது.


### 7. கலந்துரையாடல்:

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள் அனைவரும் 26 இற்கும் 40 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக உள்ளனர். அங்குள்ள முஅத்தின்கள் 40 இற்கும் 75 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். ஒருவர் மாத்திரம் 24 வயது கொண்டவராகக் காணப்படுகின்றார். இதனை பின்வரும் வரைபு (1) விபரிக்கின்றது.





**வரைபு (1)**

அவ்வாறே அங்குள்ள மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களின் சேவைக்காலம் இரண்டிற்கும் பத்திற்கும் இடைப்பட்ட வருடங்களாக காணப்படுகின்றது. இதனை வரைபு (2) விபரிக்கின்றது.





**வரைபு (1)**

இந்த மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள் அரச தொழிலின் பணிபுரிகின்றவர்களாக இல்லை. அதேநேரம் இருவர் மஸ்ஜித் ஊடாக இடம்பெறும் குர்ஆன் மத்ரஸாவை நடத்துபவர்களாக உள்ளனர். ஒருவர் மாத்திரம் கடையொன்றை நடத்துபவராக காணப்படுகின்றார். அவ்வாறே, முஅத்தினகள் அனைவரும் இதனையே பிரதான தொழிலாகச் செய்கின்றனர். இவர்களுள் இருவர் ஆரம்பத்தில் விவசாயம் செய்தனர். ஒருவர் வாகன சாரதியாக இருந்தவர். எனினும், இவர்கள் முஅத்தினாக பணிபுரிய ஆரம்பித்ததில் இருந்து வேறு தொழில் எதனையும் மேற்கொள்ளவில்லை. இதனை வரைபு (3) விளக்குகின்றது.





**வரைபு (3)**

இவ்வாறான நிலையில், இவர்கள் மஸ்ஜித் வருமானத்தை வைத்து தங்கள் வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர். இந்தவகையில், இவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளமானது 7,000.00 – 15,000.00 ரூபாவிற்கும் இடையிலேயே 83 வீதமானோர் பெறுகின்றனர். இமாம்களில் 7,000 ரூபா சம்பளம் இருவரும், 10,000 ரூபா வருமானம் ஒருவரும், 15,000 ரூபா மாத வருமானம் இருவரும் பெறுகின்றனர். இவர்களுள் ஒருவர் நிபந்தனை அடிப்படையில் மாதம் 37,000 ரூபா சம்பளமாகப் பெறுகின்றார். முஅத்தின்களைப் பொறுத்தவரையில் நான்கு பேர் 10,000 ரூபா சம்பளம் பெறுகின்றனர். ஏனைய இருவரும் 12,000 மற்றும் 15,000 ரூபா சம்பளம் பெறுகின்றனர். இதனை வரைபு (4) தெளிவுபடுத்துகின்றது.




வரைபு (4)

இவ்வாறு வழங்கப்படும் மாத சம்பளத்தின் திருப்தி நிலை பற்றி வினவிய போது, இருவர் திருப்தியளிப்பதாக தெரிவித்தனர். ஏனைய 10 பேரும் திருப்தியற்ற நிலையில் இருப்பதாக கூறினர். எனினும் இறைத் திருப்திக்காக செய்து கொண்டிருப்பதாகக் கூறினர். இதனை பின்வரும் வரைபு (5) விபரிக்கின்றது.




வரைபு (5)

ஆய்வுப் பிரதேசத்திற்கு உட்பட்ட மஸ்ஜித்களில் பணிபுரியும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களுடனான நேர்காணலின் போது அவர்கள் கொரோனாக் காலத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டன.

**வாழ்வாதாரப் பிரச்சினை:**

கொரோனா ஊரடங்கு காலப்பகுதியிலும் மஸ்ஜிதை பராமரிக்க வேண்டியதால் அவர்கள் தொடர்ந்து மஸ்ஜிதுக்கு சென்று, அதான் கூறிவிட்டு, தனியாக தொழுதுவிட்டு வந்தனர். இந்தவகையில், இவர்களுள் ஏழு பேருக்கும் வழமையான சம்பளத் தொகை வழங்கப்பட்டன. எனினும் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதில் இறுக்கமான நிலை உருவாகியதாக தெரிவித்தனர். அதாவது, ஊரடங்கு தளர்த்தப்படும் வேளையில் வீட்டுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் வாங்க வேண்டிய நிலை உருவாகியதால் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன்போது, குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் நிலைமையை சமாளித்துக் கொண்டதாக இவர்கள் தெரிவித்தனர். ஏனைய ஐவருக்கு அவர்களின் வழமையான மாத சம்பளம் குறைவாக வழங்கப்பட்டதாக தெரிவித்தனர். இதனால், வழமையாக மாத வருமானத்தை வைத்து திட்டமிடப்பட்டிருந்த செலவுகளுக்கு தடை ஏற்பட்டதனால் உறவினர்களிடம் கடன் பெற வேண்டிய நிலை உருவாகியது. இவ்வாறு மஸ்ஜித் நிர்வாகமானது தங்கள் வைப்பிலிருந்த பணத்திலிருந்தும், பிரதேச மக்களின் ஸதகா மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் மூலமும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களின் மாத சம்பளத்தை வழங்கியதாக நேர்காணப்பட்டோர் தெரிவித்தனர்.

**மாத சம்பளம் குறைவாக கிடைத்தல்:**

இக்காலப் பகுதியில் குர்ஆன் மத்ரஸாக்கள் நடைபெறாத காரணத்தினாலும் பிரதேச மக்களின் சந்தாப் பணத்தை பெறுவதிலுள்ள சிரமத்தினாலும் வழமையாக கிடைத்த மாத சம்ளத்தில் குறைபாடு ஏற்பட்டது. எனினும் நான்கு மஸ்ஜித்களும் தங்களின் வைப்பிலிருந்த பணத்தை சம்பளமாக வழங்கியிருந்தனர். இதனால், வழமையாக பெறுகின்ற சம்பளத்தை விட குறைந்த அளவில் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. குறைந்த சம்பளம் பெறுகின்ற இவர்களுக்கு கொரோனா காலத்தில் அதனை விடக் குறைந்த சம்பளம் கிடைத்தது அவர்களது குடும்ப செலவுகளுக்கு சுமையாக அமைந்தது. வழமையாக 10,000 ரூபா சம்பளம் பெறுகின்றவருக்கு 7,000 ரூபாவும், 15,000 ரூபா சம்பளம் பெறுகின்றவருக்கு 10,000 ரூபாவும் வழங்கப்பட்டது.

**திருப்தியின்மை:**

இவர்களுள் 83 வீதமானோர் திருமணம் முடித்திருந்தனர். இவர்களுக்கு மாதாந்த வருமானம் திருப்தியளிக்காத நிலையில் ஊரடங்கு காலப்பகுதி அவர்களுக்கு கவலையை உண்டு பண்ணியதாக தெரிவித்தனர். இதனால் தொழில் மீதான விரக்தியை உணர்ந்ததாக இமாமாக பணியாற்றுபவர்களில் மூவர் கூறினர். ஏனெனில், அவர்கள் தங்கள் சிறு பிள்ளைகளையும் மனைவியையும் கவனிக்க வேண்டிய தேவை இருந்ததாக தெரிவித்தனர்.

**மன உளைச்சல்:**

இக்காலப் பகுதியில் மஸ்ஜிதுக்கு வருகை தரும் போது மனதளவில் பயத்தை உணர்ந்த அதேவேளை மஸ்ஜித்கள் வெறுமையாக இருப்பதை பார்த்து கவலைப்பட்டதாகவும் தெரிவித்தனர். இந்தவகையில், தாங்கள் மன உளைச்சலுடன் தங்கள் பணியை நிறைவேற்றி வந்ததாகவும் இவர்கள் கூறினர்.

**உதவிகளின்மை:**

இவ்வாறு இக்கட்டான காலகட்டத்திலும் தங்கள் பணியை நிறைவேற்றிய இவர்களுக்கு நலன்புரி அமைப்புக்கள் உதவிகளை வழங்கவில்லை என்பதையும் மஸ்ஜித் இமாம்கள் தெரிவித்தனர். அதேவேளை, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவினால் மஸ்ஜித்களில் பணிபுரியும் முஅத்தின், இமாம்களுக்கான சிறுதொகைப் பணம் வழங்கப்பட்டதாகவும் கூறினர்.

**8. முடிவுரை:**

முஸ்லிம் சமூகத்தில் இறையில்லங்களைப் பராமரிக்கும் இமாம்களும் முஅத்தின்களும் வாழ்வாதார நிலையை கொண்டு செல்வதில் பல வருடங்களாக சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக அவர்களுக்கு வழங்கப்படும் மாத சம்பளமானது திருப்தியான நிலையை அடையாமை பிரதான விடயமாக உள்ளது. எனினும், அவர்கள் கொரோனா ஊரடங்கு காலப்பகுதியிலும் தங்கள் பணியை தொடராக செய்து வந்தனர். இதன்போது அவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினை, மாத சம்பளம் குறைதல், திருப்தியின்மை, மன உளைச்சல், உதவிகளின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கியதாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசத்திலுள்ள மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்களுடனான நேர்காணல்கள் மூலம் அடையாளப்படுத்த முடிந்தது.

**9. பரிந்துரைகள்:**

- நிலையான வருமானத்தை பெறுவதற்கான வழிவகைகளை மஸ்ஜித் நிருவாகம் ஒழுங்கு செய்தல்.
- மஸ்ஜித் இமாம்கள், முஅத்தின்களுக்கான சம்பளத்தை தீர்மானிப்பதற்கான, வருடாந்த சம்பள அதிகரிப்பிற்கான பொதுவான பொறிமுறையை உருவாக்குதல்.
- இறுக்கமான நிலைமைகளில் மஸ்ஜித்களில் பணியாற்றும் இமாம்கள், முஅத்தின்களுக்கான வட்டியற்ற கடன்களை வழங்க மஸ்ஜித் நிர்வாகங்களும், நலன்புரி அமைப்புக்களும் ஏற்பாடுகளை செய்தல்.
- சுயதொழிலொன்றை செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவுகளை மஸ்ஜித் நிருவாகத்தின் கண்காணிப்பின் கீழ் வழங்குதல்.
- சேவைக்காலம் அதிகரிப்பதற்கு ஏற்ப அவர்களின் மாத சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தல்.
- நலன்புரி அமைப்புக்களினூடாக தொடர் நன்கொடைகளை பெறுவதற்கான ஏற்பாடுகளை மஸ்ஜித் நிருவாகம் செய்தல்.
- தொற்று ஏற்படுகின்ற நிலைமைகளில் அவற்றுக்கு முகங்கொடுப்பதற்கான ஒழுங்கு முறையொன்றை பேணல்.

**உசாத்துணைகள்:**


01. அக்கரைப்பற்றில் உள்ள முஸ்லிம் பள்ளிவாயல்கள், (2020) அக்கரைப்பற்று பிரதேச சபை: அக்கரைப்பற்று. இலங்கையில் இன்று முதல் தளர்த்தப்படும் ஊரடங்கு. (11.05.2020). Retrieved from: https://www.google.com/amp/s/www.bbc.com/tamil/sri-lanka on 18.08.2020.

02. பரீல், ஏ.ஆர்.ஏ. (2020). ஐம்பது பேருடன் ஜும்ஆ தொழுகையை நடாத்துவதில் சிக்கல்கள். Retrieved from: https://www.jafnamuslim.com/2020/06/50_16.html?m=1 on 18.08.2020.

03. நைரூஸ், எம்.எச்.எம்., இஸ்மியா பேகம், எம்.எஸ். சப்னாஸ், ஐ (2017). சமூக புனரமைப்பில் மஸ்ஜித்கள் ஆற்ற வேண்டிய பங்களிப்பு – கெகிராவை பிரதேச ஜும்ஆ மஸ்ஜித்களை மையப்படுத்திய ஆய்வு. South Eastern University of Sri Lanka: 4th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language.

04. நெளஸாத், ஏ.எஸ்.எம். (2017). ஊரை இஸ்லாமிய மயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு. பயணம், இதழ் :50 மார்ச் 2017. கொழும்பு: ஸலாமாஹ் பப்ளிகேஷன்.

05. மஸாஹிர், எஸ்.எம்.எம். (2015). இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்குக் கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜிதுகளை மாதிரியாகக் கொண்ட ஆய்வு. South Eastern University of Sri Lanka: “ KALAM” Journal Vol. IX.(1), 2015 of Faculty of Arts and Culture.

06. ஹில்பான், எம்.எல்.எம்., மஸாஹிர், எஸ்.எம்.எம். (2019). மஸ்ஜித்களில் கடமையாற்றும் முஅத்தின்களின் வாழ்வாதார நிலை: ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு. South Eastern University of Sri Lanka: 6th International Symposium, Faculty of Islamic Studies and Arabic Language.


**நேர்காணப்பட்டோர்:**

- அப்துல் மஜீத் அஹமத் ரிஸ்வான், இமாம், (09.08.2020). அரூஸ் பள்ளி.
- அஸ்கர் மெளலவி, இமாம், (09.08.2020), மஸ்ஜித் ஆதம் வகதீஜா.
- இஹ்ஸான், ஏ.ஏ., இமாம், (09.08.2020), பட்டியடிப்பிட்டி ஜும்மா மஸ்ஜித்.
- உதுமான் லெப்பை முஹம்மது அசனார், முஅத்தின், (09.08.2020), பட்டியடிப்பிட்டி ஜும்மா மஸ்ஜித்.
- சீனி முஹம்மது கால்டீன், முஅத்தின், (08.08.2020),
- பள்ளிக் குடியிருப்பு ஜிம்மா மஸ்ஜித்.
- சீனி முஹம்மது யூசுப் லெப்பை, முஅத்தின், (09.08.2020).
- அரூஸ் பள்ளி. சுஹைல், ஏ.ஆர்., முஅத்தின், (09.08.2020), மஸ்ஜிது பிலால்.
- பதுருத்தீன் மிஸ்பாஹுத்தீன், முஅத்தின், (08.08.2020), மஸ்ஜித் ஆதம் வகதீஜா.
- ரில்ஸாத் அபூபகர், இமாம், (09.08.2020), மஸ்ஜிது பிலால்.
- ரஜிபான், முஅத்தின், (08.08.2020), மஸ்ஜிதுல் ஜன்னா.
- முபீத் மெளலவி, இமாம், (09.08.2020), மஸ்ஜிதுல் ஜன்னா.
- முஹம்மத் சித்தீக் முஹம்மத் அஜ்மல், இமாம், (08.08.2020),
- பள்ளிக் குடியிருப்பு ஜும்மா மஸ்ஜித்.



# COVID-19 தொற்றும், நிகழ்நிலை கல்வியினால் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்: ஓர் ஆய்வு

A.L.F. NUSKIYA
3RD YEAR
SOUTH EASTERN UNIVERSITY
OF SRI LANKA

**ஆய்வுச் சுருக்கம்**

கொரோனாத் தொற்று பரவலின் காரணமாக கல்வி ரீதியாக பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டதன் விளைவாக நிகழ்நிலை கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அதனால் அதிகளவில் பாதகங்களும், பிரச்சினைகளும் உள்ளன. எனவே இவ்வாறான தொரு அசாதாரண சூழ்நிலையினால் எடுக்கப்பட்ட மாற்றீட்டுக் கல்வி முறையான நிகழ்நிலை கல்வி முறையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரச்சினைகள், இடையூறுகள் என்பன சரிசெய்யப்பட வேண்டும் என்பது அவசியமானதொரு கட்டாயத் தேவையாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

கொரோனா தொற்றுப் பரவலின் காரணமாக ஊரடங்கு உத்தரவின் பிரகாரம் அனைத்து பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களும் மூடப்பட்டன. அத்துடன் சமூக இடைவெளி பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இதனால் பாடசாலை திறப்பதிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பல தடைகள் காணப்பட்டன. இதற்கேற்றாற் போல் தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் இடர் காலத்திற்குப் பொருத்தமான கல்வி முறையாக நிகழ்நிலை கல்வி காணப்படுகிறது. இதனால் கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையாவிட்டாலும் இக்கற்கை முறை மூலம் பல பாதக விளைவுகள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் எவ்வாறான பாதகங்கள் காணப்படுகின்றன. அவை மாணவர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதே ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

கொரோனா தொற்றுப் பரவலின் காரணமாக கல்வி ரீதியாக பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டு கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டதன் விளைவாக நிகழ்நிலை கல்வி ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அதனால் சாதகங்கள் காணப்படினும் அதிகளவில் பாதகங்களும் பிரச்சினைகளும் உள்ளன. எனவே நிகழ்நிலை கல்வியினால் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அதை நாம் எவ்வாறு எதிர் கொள்வது என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

மேற்படி ஆய்வுக்கான தரவுகள் வாராந்தப் பத்திரிகைகள், கட்டுரைகள் ,சஞ்சிகைகள், இணையம் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் மறைமுகமாக வினவப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.மேற்படி ஆய்வுக்கான தரவுகள் வாராந்தப் பத்திரிகைகள், கட்டுரைகள் ,சஞ்சிகைகள், இணையம் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் மறைமுகமாக வினவப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டு சீனாவின் வூஹான் மாநிலத்திலிருந்து வந்து முழு உலகையும் ஆட்டிப்படைக்கும் நுண்ணுயிர்க்கொல்லியே கொரோனா வைரஸ். உலக அளவில் இது பரவி வந்ததனால் உலக சுகாதார அமைப்பானது (WHO) covid-19 ஐ சர்வதேச தொற்றுநோயாக வர்ணித்துள்ளது.இப் பெருந்தொற்றின் பாதிப்புக்கள் எண்ணிலடங்காதவை. சாமானியர்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை இந்த காலகட்டத்தில் வழக்கத்திற்கு மாறாக சிறிதேனும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றால் அது மிகையாகாது.

பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை, இடம்பெயர்வு என பல பிரச்சினைகளை மக்கள் ஓராண்டாக எதிர்கொண்டு வருகின்றனர். அரசியல், பாதுகாப்பு, விஞ்ஞானம், தொழில் நுட்பவியல் கல்வி போன்ற பெரும்பாலான துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் கல்வித் துறையும் பெரும் சரிவை சந்தித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கு சட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து பல நாடுகளிலும் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. ஆன்லைன் வழியாக சில கல்வி நிலையங்கள் கற்பிக்க தொடங்கினாலும் பெரும்பான்மையான மாணவர்களால் அதில் பங்கு பெற முடியாத நிலையே உள்ளது.இந் நிலையில் ஐ.நா சபையானது ,கொரோனா வைரஸ் பாதிப்பால் கல்வித்துறை மிகப்பெரிய பாதிப்பு அடைந்துள்ளதாகவும் சுமார் 160க்கும் மேற்பட்ட நாடுகளில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

UNESCO மற்றும் அதன் நட்பு அமைப்புகள் வெளியிட்டுள்ள தகவலின்படி, உலகளவில் ஆரம்ப நிலை கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை படிக்கும் மாணவர்களில் கூடுதலாக சுமார் 23.8 மில்லியன் மாணவர்கள் கொரோனா வைரஸ் தொடர்பான பொருளாதார நெருக்கடி காரணமாக தங்களது கல்வியை தொடர வாய்ப்பில்லை என தெரிவிக்கின்றனர். (ராம்சங்கர; 2020)

கல்வியானது மாணவர்களின் அறிவு, பண்பாடு மற்றும் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய மூலதனமாகும். கல்வி சமூகத்தின் தாழ்வுச் சிக்கலை மழுங்கடிக்கச் செய்து அனைவரையும் சம அந்தஸ்தில் நோக்க துணைபுரிகிறது. கொரோனா தொற்று நோய் பரவலின் காரணமாக பிரகடனம் செய்யப்பட்ட ஊரடங்கு உத்தரவு சகல பாடசாலைகளையும் மூடச் செய்தது. மேலும் சமூக இடைவெளி பெரிதும் வலியுறுத்தப்பட்டது. இதனால் பாடசாலைகள் திறப்பதில் பல தடைகள் காணப்பட்டன. இக்காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் இடர் காலத்திற்குப் பொருத்தமான கல்வி முறையாக இணையவழி கற்றல் (online learning) மற்றும் தொலைகல்வி என்பனவற்றை UNESCO முன்மொழிந்தது. இது எமது நாட்டிலும் இணையவழி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலும் வழிவகுத்தது. அந்த வகையில் Watsapp group's, zoom, googlemeet, viber, Microsoft team போன்ற மின்னியல் தொடர்புகள் வழியாக கல்விச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. எனினும் இணையதள வசதியை அனைத்து மாணவர்களாலும் பெற முடியாத நிலை காணப்படுகின்றது. அத்தோடு நேரடியாக கற்றல் செயற்பாடுகள் மூலம் பெறக்கூடிய வினைத்திறன் போன்ற தேர்ச்சி மட்டத்தை இணைய வழிக் கல்வி மூலம் பெற முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த Online கல்வியின் பயன்களை இன்னும் முழுமையாக அனுமதிக்காத நிலையில் இதன் பாதகங்கள் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. அதற்கு முக்கிய காரணம் இணைய வழி வகுப்புகள் அனைத்தும் மாணவர்களை சென்றடைவதில் சில தடைகள் மற்றும் சிக்கல்கள் உள்ளது. தொழில்நுட்ப வசதி இல்லாமை, குடும்பச் சூழ்நிலையில் கல்வி ,குழந்தைகளின் ஊட்டச்சத்து ,வேலையிழந்த பெற்றோர்களின் குழந்தைகளுக்கு ஏற்படும் பொருளாதார செலவு ,பெற்றோர்- ஆசிரியர் நட்புப் பேணுதல் உள்ளிட்ட பிரச்சினைகளை இக் காலத்தில் மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் போதுதான் மாணவர்களுக்கு சுய ஒழுக்கம், நேர நிர்வாகம், சமூகத்திறன் போன்றவை கிடைக்கும் என்பது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் வாதமாகும். பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் போது உடன் படிக்கும் மாணவர்களின் நட்புறவு போன்றவை அவர்களின் சமூகத் திறனை வளர்க்க உதவுகின்றது. அதேபோல கவனச்சிதறல், இடையூறுகள் என்பன Online வகுப்புகளினை ஒப்பிடும்போது பள்ளி வகுப்புகளில் மிக குறைவுதான்.

இணைய வழிக் கல்வி என்பது அனைத்து மாணவர்களுக்கும் புரியும் வகையில் உள்ளதா? அவர்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதே பள்ளி வகுப்பு என்றால் மாணவர்களின் புரிதலுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் பாடங்களை திரும்ப நடத்துவதற்கும் சந்தேகங்களை ஆசிரியர் மற்றும் உடன் படிக்கும் நண்பர்களிடம் கேட்டு அறிந்து கொள்வதற்கும் நல்ல வாய்ப்பினை வழங்குகிறது.

இணையத்தளம் அதிக நேரம் பயன்படுத்துவதால் சில சமயம் சிறுவர்கள், பதின் பருவ மாணவர்கள் தவறான வழிகளில் பயன்படுத்துவதற்கும் இணையதளத்திற்கு அடிமையாவதற்க்கும் இது ஒரு காரணமாக உள்ளது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த Online வகுப்புக்கான முறையான திட்டமிடுதல், அட்டவணைகள் போன்றவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றது. மற்றும் சிறுவர்களுக்கும் சில ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் இந்த இணைய வழி தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் அனுபவமின்மை போன்ற சில சிக்கல்களும் உள்ளது இது அனைவருக்கும் சில சமயங்களில் மன உளைச்சலை ஏற்படுத்தலாம்.

இந்த டிஜிட்டல் கல்வி முறை என்பது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் சில பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. அதாவது அதிக நேரம் கணினி மற்றும் கைபேசி திரையை பார்த்துக் கொண்டே இருப்பதால் கண் குறைபாடுகளும் ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்து இருப்பதால் குறைந்த உடல் செயற்பாடுகளும் காணப்படுகின்றது. உளவியல் ரீதியாக அதிக நேரம் கணினி மற்றும் கைபேசி பயன்படுத்துவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி திறன் பாதிக்கும் அபாயம் உள்ளது. இதன் மூலம் அவர்களுக்கு கவனச்சிதறல், தூக்கமின்மை, படைப்பாற்றல் குறைவு, கற்பனைத் திறன் குறைவு மற்றும் பதட்டம், பயம், மன அழுத்தம் போன்ற பாதிப்புகள் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

மாணவர்களின் கவனிக்கும் திறன் மற்றும் கற்றல் திறன் போன்றவற்றில் இந்த இணையத்தள கல்வி பாதிப்புகளையும், மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. அதாவது மாணவர்களுக்கு Active listening என்பது குறைந்து Passive listening என்ற நிலைக்கு செல்கின்றனர். இது அவர்கள் கற்றல் திறனுக்கு தடையாக உள்ளது.

கொரோனா தொற்று பரவும் நிலையில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் அரசு மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு எந்தவித வருமானமும் அற்ற நிலையில் வீட்டிலேயே முடங்கிக் கிடப்பதால் அவர்கள் பின்தங்கிய வருமானம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் சாதாரண தொலைபேசி ஒன்று வாங்குவதற்கே வருமானமின்மை காணப்படுகின்றது. இதன்போது ஸ்மார்ட் போன், லேப்டாப் போன்றவற்றில் கல்வி பயில்வது சாத்தியமற்றது. இவ்வாறான பெற்றோரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் கேள்விக்குறியாக காணப்படுகின்றது. வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பெற வேண்டிய தேவை மற்றும் டேட்டா கார்ட் போன்றவற்றிற்கான போதிய பணம் இல்லாமையினால் சில நேரங்களில் பாடங்களை தவற வேண்டிய நிலை ஏற்படுகின்றன. மேலும் தொழில்நுட்ப பற்றாக்குறையின் காரணத்தினாலும் பாடங்களை தொடர முடியாத நிலை ஏற்படுகிறது.

பள்ளி, கல்வி, தேர்வு மீது பயம் ,பதற்றம் உள்ள மாணவர்களுக்கு இந்த புதிய கல்வி முறையானது அவர்களின் அச்சத்தை அதிகரிக்கிறது. இதனால் இவர்களுடைய படிப்பின் மீது உள்ள ஆர்வம் குறைதல், தன்னம்பிக்கையின்மை போன்றவை பாதிக்கப்படுகின்றது.வெகு நாட்களாக சமூக பங்களிப்பு இல்லாமல் ஒரே அறையில் அமர்ந்திருப்பது நண்பர்கள் ஆசிரியர்கள் ஒருவரை ஒருவர் நேரடியாக சந்தித்து பேசுவதற்கான வாய்ப்பு இல்லாததால் தனிமை உணர்வு, எரிச்சல் உணர்வு, சுய உந்துதல் நாளடைவில் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளது.

கல்வி என்பது ஒரு மனிதனின் அறிவுத் திறனை வளர்க்க உதவுவதாகும். பள்ளிக் கல்வி பாடப் புத்தகங்கள் மூலம் மட்டும் கிடைத்து விடாது. எனவே நாம் அறிவை விரிவு செய்வதற்கு பல முயற்சிகளில் ஈடுபடவேண்டும். புத்தகம் வாசிக்கும் பழக்கத்தை கடைபிடிக்கவேண்டும். பள்ளி புத்தகங்களைத் தவிர மற்ற புத்தகங்கள் படிப்பதன் மூலமும் தானாக கற்றுக்கொள்வதூடாகவும் நம் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். இதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளை Online வகுப்புகளில் மட்டும் ஈடுபடுத்தாது வீட்டு வேலைகளை செய்வதற்கும் பழக்கப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து Online வகுப்புகளில் ஈடுபடுவதனால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒருமுறை 5 நிமிட இடைவேளை எடுப்பது நன்று. Online வகுப்புகளை பற்றிய புரிதல் குறைவாக இருக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அதைப் பற்றிய புரிதலை ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையில் தெளிவான தகவல் பரிமாற்ற திறனை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவர்களை கண்காணிப்பதற்கும் வழி நடத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும், எளிமையாக புரியும் வகையிலும் வகுப்புகள் அமைய வேண்டும். இது தொடக்க கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆர்வத்தை கொடுக்கும். இது புதுமையான அனுபவம் என்பதால் மாணவர்களுக்கு Online கல்வியில் ஆர்வமின்மையும், அச்சமும் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அதை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் .இதற்காக கலந்துரையாடல் அமைப்பில் பாடங்களை கொண்டு செல்லலாம். இதன் மூலம் மாணவர்களிடையே ஏற்படும் சந்தேகத்தை போக்குவதற்கும் அவர்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்பதை கண்டறிந்து கொள்ளவும் முடியும்.

அதேபோல நடக்கும் பாடங்களை (வீடியோ, ஓடியோ) காணொளி வடிவில் தயாரித்து குறித்த மாணவர்களுக்கு வழங்கினால் நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளாத மாணவர்களுக்கும் அதனை பெற்றுக் கற்பதற்கு இலகுவாக அமையும். எனவே இவ்வாறானதொரு அசாதாரண சூழ்நிலையினால் எடுக்கப்பட்ட மாற்றீட்டுக் கல்வி முறையான நிகழ் நிலை கல்வி முறையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரச்சினைகள், இடையூறுகள் என்பன சரிசெய்யப்பட வேண்டும் என்பது அவசியமானதொரு கட்டாயத் தேவையாகும்.

**உசாத்துணைகள்:-**


1. ARAM HOSPITAL, (2020). இணையவழிக் கல்வியின் சாதகம் மற்றும் பாதகங்கள். Accessed on : 31.08.2020.Retrieved from : http://aramhospital.com/news

2. HINDUTAMIL. (2020). கோவிட் காலத்தில் கல்வியை மீட்டெடுப்பது எப்படி? COVID 19.Accessed on : 08.09.2020 Retrieved from : Https://www.hindutamil.in/news

3. கோவிட் காலத்தில் கல்வியை மீட்டெடுப்பது எப்படி?. Accessed on:20.08.2020. Retrieved from : Https://ta.m.wikipedia.org/wiki.

4. Kisnakanth, T., (2020). மாணவர்கள் எதிர் நோக்கும் தொழில்நுட்ப சவால்கள். Accessed on:05.2020.Retrieved from : Https://www.teachmore.lk.

5. இராமச்சந்திரன் நிர்மலன;.(2020). இலங்கையில் இணையக் கல்வியில் உள்ள Accessed on.21.08.2020.Retrieved from: Https://thinakkural.lk/article.

6. கணேசமூர்த்தி, எம். ;.(2020). கொரோனா காலத்து ஒன்லைன் கல்வி அரவை காட்டுத்தனமா? அத்தியாவசியமா? Accessed on : 21.08.2020.Retrieved from : http://www.vaaramanjari.lk

# இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் – பொருளாதாரப் பிரச்சினை

**M.N.F. AKEELA | M.A.F. ASHFA | M.N. AYSHA**

3RD YEAR

DEPARTMENT OF ISLAMIC STUDIES

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**அறிமுகம்**

இன்றைய நவ நாகரீகத்தில் சென்று கொண்டிருக்கும் இவ் உலகானது பல வெற்றி வாகைகளை சூடிக் கொண்டிருக்கின்ற அதேவேளையில், பல இடர்பாடுகளும் நாளுக்கு நாள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. அவ் வகையில் பொருளாதார, சமூக, அரசியல், கல்வி மற்றும் சுகதாரரீதியான பிரச்சினைகள் மக்களை சந்தித்த வண்ணமே காணப்படுகின்றன.

உலகத்தில் மக்கள் தொகை பெருகப் பெருக எல்லா நெருக்கடிகளும் ஏற்படுவது இயற்கையான விடயமே. உலக மக்கள் அனைவருக்கும் உணவு என்பது அடிப்படை உரிமையாகும். உணவு என்பது ஓர் உயிரினத்திற்கு தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதற்காக உண்ணப்படும் எந்தவொரு பொருளையும் குறிக்கும். உணவு பொதுவாக தாவரங்களிலிருந்து, விலங்கிலிருந்து பெறப்படுகின்றது. இவ் உணவுப் பொருட்களிலிருந்து மனிதனின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் சக்திக்கும் தேவையான காபோவைத்திரேற்று, கொழுப்பு, புரதம், உயிர்ச்சத்து, தாதுக்கள் போன்ற அவசியமான சத்துக்களை பெற்றுத் தருகின்றது. இவை மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான ஆற்றலை பெற்றுத் தருகின்றது.

அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கேற்ப அனைத்துலக உணவு பாதுகாப்பு நிறுவனம் உலக வளமையம், உலக உணவுத் திட்ட அமைப்பு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு மற்றும் அனைத்துலக உணவு கவுன்ஸில் போன்ற அமைப்புக்கள் உணவு பாதுகாப்பு மற்றும் உணவு சுகாதாரம் முதலியவற்றை கண்காணிக்கின்றன. 2013 ல் கொண்டுவரப்பட்ட " தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம்" தரமான உணவு மனிதர்களின் அடிப்படை உரிமை என்று பிரகடனம் செய்தது ஐக்கிய நாடுகள் சபை உலக உணவு தினமாக ஒக்டோபர் 16 தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. அந்தவகையில் அப்படை உணவுப் பொருட்களை ஒவ்வொரு நாடும் ஏற்றுமதி, இறக்குமதி மூலம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதனால் மக்கள் தேவையான உணவு அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் சிரமமின்றி செயற்பட்டனர் (பத்திரினா, 2021).

இவ்வாறு காணப்பட்டாலும், அரசுகளின் முறையான செயற்பாடுகள் இன்மையால் ஒரு பக்கம் உணவானது வீண்விரயம் செய்யப்படுவதோடு, இன்னொரு பக்கம் உணவின்றி மக்கள் பசியாலும், பட்டினியாலும் உயிர் துறக்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட "உணவு விரயக் குறியீடு 2021" என்ற ஆய்வறிக்கையில் இந்தியர்கள் 2019 ஆம் ஆண்டில் மட்டும் 6.80 கோடி டொன் அளவில் உணவுப் பொருளை விரயம் செய்வதாக கூறிப்பிடப்பட்டுள்ளது. அதே இந்தியாவில் தான் தினமும் 20 கோடி மக்கள் இரவில் உணவு இல்லாமல் இறக்கச் செல்கின்றார்கள் என்று ஆய்வு கூறுகின்றது (உதைய 2021).

கடந்த ஒன்றரை ஆணடுகளுக்கு மேலாக உலகையே அச்சத்தில் உறைய வைத்திருக்கும் கொவிட் 19 கொள்ளை நோய் தொற்றை விடவும் கொடிய நோயாக உணவுக்கான அச்சுறுத்தல்கள், இடர்பாடுகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. இதனால் ஒவ்வொரு மனிதனும் தனது அன்றாட தேவையை பூர்த்தி செய்வதில் பாரிய இன்னல்களுக்கு

அதாவது இலங்கை நாட்டில் ஏற்படக் கூடிய பெருளாதார நெருக்கடியால் ஏற்றுமதி, இறக்குமதி பொருட்களின் அளவு குறைக்கப்படுகின்றது. இதனால் தேவையான பொருட்களை பெறுவதில் மக்களுக்கு இடையே பல்வேறு போட்டிகள் அதிகரிக்கின்றன. இதனால் அப் பொருளுக்கான விலை உயர்கின்றன. இதன்போது மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெறுவதில் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்கின்றனர். இதனால் இலங்கையில் மக்களது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வால் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை முகங்கொடுக்கின்றனர்? என மதிப்பிட்டு ஆய்வு ரீதியாக முன்வைக்க இவ் ஆய்வு முனைகிறது.

### ஆய்வுப் பிரச்சினை

இறுக்கமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் பல்வேறு ரீதியான பொருளாதார நெருக்கடிகளை நாளுக்கு நாள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் இறக்குமதி செய்யக்கூடிய உணவுகள் குறைவடைந்து வருவதால், உணவுத் தட்டுப்பாடு, உணவின் விலை அதிகரித்தல் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை விண்ணை தொடும் அளவுக்கு உயர்ந்து செல்கிறது. இதனால் மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றி நோக்கப்படுவதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வு நோக்கம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் உணவுத் தட்டுப்பாடு நிலவி வருகின்றன. இதனால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு எவ்வாறான மாற்றங்களை கொண்டு வந்தன அத்தோடு எவ்வாறான பாதிப்புக்களுக்கு முகங் கொடுத்தார்கள் என அடையாளப்படுத்துவதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விபரிப்பு ஆய்வு முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற பண்புசார் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary data) மூலம் தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், முதலாம் நிலைத் தரவுகள் கலந்துரையாடல் மற்றும் அவதானம் மூலமும், இரண்டாம் நிலைத் தரவுகள் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்தும் பெறப்பட்டன.

### தரவுப் பகுப்பாய்வு

உலகில் மக்கள் தொகை பெருகப் பெருக அதன் தேவைகளும் பெருகிக் கொண்டே வருகின்றன. கொவிட் 19 தொற்று காரணமாக நாம் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வருகின்றோம். 22 கோடி மக்கள் வாழும் தீவு நாடான இலங்கை மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்தித்து வருகின்றது. கடந்த நவம்பர் மாதத்தில் அந்நாட்டின் அந்நிய செலாவணி கிட்டத்தட்ட 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவுக்கு சரிந்து விட்டது. அது சில வார இறக்குமதி செலவுகளை மட்டும் எதிர் கொள்ள போதுமானது அதன் விளைவாக, அரசு அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளை குறைக்க வேண்டி வந்தது அதில் உணவுப் பொருட்களும் அடங்கின. இது போக எரிபொருள் மற்றும் சரக்கு போக்குவரத்து விலை அதிகரிப்பால் பால் பவுடர் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையை இன்னும் அதிகரித்தது. இவ் விலைவாசி உயர்வால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உட்பட்டனர்.

அதாவது, இலங்கையில் வாழக் கூடிய சாதாரண மக்கள் மற்றும் வறிய நிலையில் இருப்பவர்கள் அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் பெரும்பாடு படுகின்றனர். அதாவது, தினக் கூலிக்கு வேலை செய்பவர்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் அவர்களின் அன்றாட தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக கூறுவதுடன், முன்பு நாளொன்றுக்கு மூன்று வேளையும் சாப்பிட்டு வந்த அதேநேரம் இப்போது அதிக நேரம் நாளுக்கு இரு வேளைகள் மட்டுமே சாப்பிட முடிகிறது என்று அவர்களின் நிலையை குறிப்பிடுகின்றனர்.

அதைப்போல, மாதாந்த சம்பளம் பெறக் கூடியவர்கள் குறிப்பிடுகையில் தற்போதைய மாதாந்த சம்பளத்தைக் கொண்டு இரு வாரங்கள் மட்டுமே சமாளிக்க முடியும் காரணம் விலை வாசி அதிகரித்து விட்டதுடன் அவர்களது எதிர்காலம் குறித்து அவர்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை என்பதோடு அவசியமான பொருட்களின் விலை அதிகரித்து விட்டதால் அரசு நடாத்தும் கடைகளில் சிறிய அளவு விலை குறைப்பிற்காக, அக் கடைகளுக்கு முன் நீண்ட வரிசை நிற்பதாகவும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு அத்தியாவசியப் உணவுப் பொருட்களின் விலை வாசி அதிகரிப்பு இலங்கையில் ஒவ்வொரு குடும்பம் உட்பட தனிநபரையும் வறுமையில் வீழ்த்தியுள்ளது.

இலங்கை நாட்டில் இப் பொருளாதார நெருக்கடியால் அரிசி, கோதுமை மா, தேங்காய் எண்ணெய், சீனி பால் பவுடர், மரக்கறி போன்ற பல்வேறு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்ததால், இவ் உள்ளீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்பு நாம் பெறக்கூடிய உற்பத்திப் பொருட்களின் விலையையும் அதிகரிக்க நேர்ந்தது. அதாவது, கோதுமை மாவினை கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய பாண், பணிஸ், ரொட்டி, கேக் என்பவற்றுடன் மரக்கறி, எண்ணெய் என்பவற்றின் விலை அதிகரிப்பதால் அதனைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களினது சீனியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இனிப்புப் பண்டங்களினதும் விலை அதிகரித்தது. இவ்வாறு உணவுப் பொருட்களினதும் விலை அதிகரித்தலும் தமது சம்பளத்தில் எவ்வித மாற்றமும், முன்னேற்றமும் இன்மையால் வழமைபோல இப் பொருட்களை நாடுவது கடினம் என்றும் மக்கள் கூறுகின்றனர்.

மென்மேலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தேவை உச்சத்தில் இருக்க, இலங்கையில் உணவுப் பொருட்களின் விலை வருடாந்த அடிப்படையில் கடந்த மாதம் 21 சதவீதமாக அதிகரித்துள்ளது. பால் பவுடரின் விலை 12.5% அதிகரித்திருப்பதால், தேநீர் கடை உரிமையாளர்கள் சங்கம் பால் மற்றும் தேநீர் விற்பதை நிறுத்த முடிவு செய்துள்ளனர். தேவை ஏற்பட்டால் மட்டும் அதிக விலைக்கு பால், தேநீர் விற்கப்படும் என்று கூறுகின்றனர். கோதுமை மா, சீனி, தேங்காய் எண்ணெய், மரக்கறி விலை அதிகரிப்பால் வெதுப்பகங்களிலும் (Bakery), ஹோட்டல்களிலும் உற்பத்திப் பொருட்களது விலை அதிகரிப்பில் மக்கள் நுகர்வோர் வீதம் குறைந்துள்ளதாக கூறப்படுகின்றது. இதனால் அநேக கடைகள் நட்டத்தால் மூடப்பட்டுள்ளது. அதைப் போல நுகர்வோர் வீதத்தினை தக்க வைத்துக் கொள்ள சில வெதுப்பகங்களிலும், ஹோட்டல்களிலும் தரம் குறைவான உணவுப் பௌடர்களை கொண்டு உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். இதனால் மக்கள் நுகரும் உணவுப் பொருட்களால் திருப்தியின்மை நோய்வாய்ப்படல் என்பவற்றுக்கு ஆளாகின்றனர்.

காய்கறி சந்தையில் மரக்கறிகள் விலை அதிகரிப்பதற்கு உரத் தட்டுப்பாடு, போக்குவரத்து விலை அதிகரிப்பு காரணமாய் அமைந்தன இதனால் சிறந்த மரக்கறிகளை நட்டு உற்பத்தி செய்வதில் பாரிய சிரமம் காணப்பட்டதால் மரக்கறி விலை அதிகரித்தது இதனால் அனைத்து மரக்கறிகளுக்கும் போதுமான மரக்கறி உற்பத்தி செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டது. மரக்கறி கடை உரிமையாளர்கள் விலைவாசி அதிகரித்ததை குறித்து பல கடை உரிமையாளர்கள் வெளிப்படையாக புகார் கூறுகின்றனர். மேலும் விலையை குறைக்கவும், குறைந்த அளவில் காய்கறி வாங்குவதை தவிர்க்கவும் நிறைய பேரம் பேசுவதாகக் கூறுகின்றனர் இவ்வாறு விலை வாசி அதிகரிப்பால் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர்.

அதைப்போல, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வானது மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வை கொண்டு செல்வதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது இது பற்றி கலந்துரையாடலின் போது வினவப்பட்ட பொழுது ஒருவர் அவரது குழந்தைகளுக்கு தினமும் மீன் மற்றும் மரக்கறி கொடுத்து வந்ததாகவும் இப்பொழுது அரிசிச் சோறு கொடுப்பதையே பெரும் போராட்டமான விடயமாக உள்ளதாக கூறுகின்றார். அதுமட்டுமின்றி சிறிய குடும்பத்தில் தனிக்குடும்பத்தில் வாழக் கூடியவர்கள் அன்றாட உணவு வேளையை சமாளித்துக் கொள்ளக் கூடியதாக இருப்பதுடன், கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களும் சிறு குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் உள்ள குடும்பத்தில் அத்தியவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்ந்ததால் மிகவும் சிக்கலான நிலை ஏற்பட்டதாகவும் கூறுகின்றனர். பால் பவுடர் விலை அதிகரித்ததால் குழந்தைகளுக்கான பாலை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படுவதாகவும் வயோதிபர்களுக்குரிய சத்துள்ள உணவுகளை பெற்றுக் கொடுப்பதில் பாரிய கஷ்டத்தில் விழுந்ததாகவும் கூறுகின்றனர். இவ்வாறான நிலையில் உணவுக்கே அதிகம் செலவழிக்க வேண்டி இருப்பதால் குழந்தைகளின் கல்வித் தேவை, வயோதிபர்களுக்கான சுகாதார வசதிகளை பூர்த்தி செய்வது கேள்விக்குறியாக காணப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு, அத்தியவசியப் பொருட்களின் விலை உயர்வானது மக்களுக்கு பல்வேறு இருண்ட பக்கங்களை வாழ்வில் ஏற்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வானது வியாபாரிகளை பதுக்கலுக்கு இட்டுச் சென்றது. அதாவது விலை அதிகரிக்க போகிறது எனக் கூறியதும் அப்பொருட்களை வியாபாரிகள் பதுக்கின்றனர், விலை உயர்வாக விற்று இலாபம் எண்ணி இதனை மேற்கொள்கின்றனர். இதனால் உணவுத் தட்டுப்பாடு நிகழ்கின்றது. விலை வாசி உயர்வால் மக்களது கழுத்தை நெறுக்கும் அதேவேளை உணவுத் தட்டுப்பாடானது மக்களை மென்மேலும் பாதிப்புக்கு இட்டுச் சென்றுள்ளது. மேலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வறுமை நிலையால் திருட்டு, பதுக்கல் போன்ற பழக்கங்களும் மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு அத்தியவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வானது மக்களுக்கு பல்வேறு பாதிப்புக்களையும் பல்வேறு இன்னல்களையும் கொடுத்துள்ளது. இதனை அவதானத்தின் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

கடந்த ஒன்றரை வருடமாக Covid 19 தொற்றால் பல்வேறு இன்னல்களை நாளுக்கு நாள் மக்கள் சந்தித்து வருகின்றனர். இதை விட உணவுக்கான தட்டுப்பாடும், அச்சுறுத்தல்களும் ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகின்றன. அந்த வகையில் வளர்ந்து வருகின்ற இலங்கை நாடும் இதற்கு விதி விலக்கல்ல. பொருளாதார நெருக்கடி, இறக்குமதி குறைதல், உணவுத் தட்டுப்பாடு என்பன அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான விலை வாசி உயர்வை ஏற்படுத்தியுள்ளதுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வானது மக்களது வாழ்வில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. அதாவது மாதாந்தம் மற்றும் தினக்கூலி பெறுபவர்களின் குடும்பங்கள் வறிய நிலையை அடைந்துள்ளதோடு அவர்களது உணவு வேளை பூர்த்தி செய்வது பெரும் கஷ்டமாக காணப்படுகின்றது. அதைப் போல உள்ளீட்டுப் பொருட்களின் விலை உயர்வானது உற்பத்தி பொருட்களின் விலையை அதிகரிக்க நேர்ந்தது ஹோட்டல்களிலும், வெதுப்பகங்களிலும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வானது இலாபமற்ற வியாபாரத்திற்கு இட்டுச் சென்றதோடு, பெரும் நட்டத்தையும், ஏமாற்றத்தையும் உண்டுபண்ணியது. மேலும், மக்களுக்கு ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை முன்னெடுத்து செல்வதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது அதைப்போல பதுக்கல், திருட்டு, தரம் குறைவான பொருட்களைவிற்றல் போன்ற விடயங்கள் அதிகரிக்கத் தொடங்கின.

எனவே, இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து மக்கள் விடுதலை பெற பல்வேறு நடவடிக்கைகளையும் கையாள்வது அவசியமாகும். அதாவது, இலங்கை அரசு உலக பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமுல்படுத்தல், தனியார் மயக் கொள்கைகள், புதிய வேளாண்மை சட்டங்கள், விவசாய நிலத் திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்துவதால் விவசாயிகளுக்கும், மக்களுக்கு வரக்கூடிய பெரும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளல் மேலும், விவசாயிகளுக்கான உரத் தேவைகளை நிவர்த்தி செய்தல் அதுமட்டுமின்றி, உலக பொருளாதார நெருக்கடியை இறக்குமதிகள் குறைகின்ற போது ஏற்படுகின்ற விலை வாசி உயர்வு, உணவுத் தட்டுப்பாடு என்பவற்றை தவிர்க்க எமது நாட்டிலேயே உற்பத்திகளை மேற்கொள்ளல். மக்களது தேவைகளைப் பொறுத்து உற்பத்திகளை அதிகரித்தல். மேலும் விலைவாசி உயர்வால் எதிர் கொள்ளும் திருட்டு, பதுக்கல் போன்ற விடயங்கள் அரசாங்கம் அவர்களுக்கு எதிரான கடும் தண்டனைகளையும். நடவடிக்கைகளையும் கொண்டு வரல், இதனூடாக காலத்தில் வரக்கூடிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு பிரச்சினையை சிரமமின்றி கையாளலாம். நிலவுக்கும் செவ்வாய் கிரகத்திற்கும், அன்டார்டிகாவுக்கும் சென்று சாதனைப் படைக்க காட்டுகின்ற ஆர்வத்தை அவ்வப் பொழுது எழக்கூடிய உணவுப் பிரச்சினையின் போது தன் கவனத்தை செலுத்தி பிரச்சினைகளை தீர்த்து வைப்பதன் மூலம் நம் நாட்டை முன்னேறச் செய்யலாம்.

**உசாத்துணைகள்**


1) எத்திராஜன், அ. (2022). இலங்கை: விலைவாசி உயர்வால் மக்களின் அன்றாட வாழ்க்கை கடுமையாகப் பாதிப்பு – களவரம் என்ன? bbc.com. https://www.bbc.com/tamil/sri-lanka-59971147.amp.

2) மப்றூக், யூஇ எல். (2022). இலங்கையில் முன்னெப்போதும் இல்லாமல் உயரும் நெல் விலை - என்ன காரணம்? bbc.com. https://www.bbc.com/tamil/sri-lanka-59994480

3) கலில் ரஹ்மான். (2021). இலங்கையில் விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, puthiyathalaimurai.com. https://www.puthiyathalaimurai.com/newsveiw/118591/sri-lanka-sky-high-price

4) பத்திரினா, ச. (2022). உலக உணவு தினம், உணவு விலையேற்றத்திற்கு பழகிக்கொள்ள வேண்டுமா? bbc.com. https://www.bbc.com/tamil/global-58934014

5) உதயை, மு. (2021). உணவு உற்பத்தியும் வறுமை ஒழிப்பும். dinamina.com. https://www.dinamina.com/editorial-articles/center-page-articles/2021/oct/193720291.html

# කොරෝනා නුඹ ඇවිදින් අදට දැනට අවුරුදු දෙකක්......

නොසිතූ මොහොතක නොසිතූ ලෙසකට....
කොරෝනා නුඹ ඇවිදින්
දැනට අවුරුදු දෙකක්
වෙනස් කරපු හැටි ජීවිතයම
මට නම් මහ පුදුමයක්
වෙනදා වගේ නොවුනත් නුඹත්
වෙනස් කලා මුළු ලෝකයත්
නමුත් නුඹ කළ අරුමය
විය කියා දෙන්නට මනුසත්කම
ආදරය
අවිනිශ්චිත බව
හා පරෙස්සමත්
සීමා වුවත් තුරුණු වූ කල් අපේ
ඔන්ලයින් මගින්ම විදිහට ජීවිතේ
කොරෝනා නුඹ ඉගැන්නුවා අපට
පවුලේ සමගිය හා සතුට
ඒ විතරක්ම නොවේ තව
ගෙවත්තක අසිරිය
පවිත්‍රතාවය, ආරක්ෂාව,
ආදරය,සෙනෙහස
හැම දේම අඩු නැතිව.............

# ஆய்வுக்குரல்




STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA